AstroVed

மாலை: 1

# சத்வித்யா

மலர்: 28

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக
விஞ்ஞான
இதழ்

இணையதளம்
வாயிலாக
மாதம் ஒரு முறை
வெளிவரும்



## திருக்கோயில் தெய்வ வாகனங்கள்!

செவ்வாய் தோஷம் தீர்க்கும் எளிய பரிகாரம்

சகல பாவங்களையும் போக்கும் ரத சப்தமி

பதினாறு செல்வங்கள் அருளும் காசி விசுவநாதர்

முன் செய்த வினை தீர்க்கும் முண்டகக்கண்ணி அம்மன்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



போன ஜென்மத்தில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்பதை அறிவதும் அறிவியல் தான! நினைவுத் திறன் அதிகமாக பரப்ப பட்டதாக இருந்தால் தான் நமது முற்பிறவி பற்றி அறிய முடியும். புத்தர், கடவுளே இல்லை என்றவர் ஆனால் முற்பிறவி என்பது உண்டு என நம்பினார். ஒரு விளக்கை ஏற்றினால், அதைக்கொண்டு அடுத்தது அதிலிருந்து இன்னொன்று என பல விளக்குகளை தொடர்ச்சியாக ஏற்ற முடியும். இப்படித்தான் கடந்து போன பிறவியின் நினைவுகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் தான் பல பிரச்சனைகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அடுத்து ஏற்ற முடியாமல் ஒரு விளக்கு அனைவதைப் போல் நமது மூளை முற்பிறவி நினைவுகளை எப்போது மறந்து, புதிய சிந்தனை பிறக்கிறதோ அப்போது தான் நமது பிரச்சனைகள் மறந்து புதிய வாழ்கை, புதிய பாதை பிறக்கும்.

Dr. Baskaran Pillai



அன்புமிக்க வாசக இதயங்களே!

பெருந்தொற்றின் இரண்டாவது அலையிலிருந்து தப்பிய மக்கள் அடுத்த அலையில் சிக்கித் திணறுகின்ற நிலை. என்ன நடக்குமோ? மீண்டும் ஊரடங்கு வந்து விடுமோ என்ற பயமே இன்றைக்கு பெரும்பாலான மக்களை ஆட்கொண்டுள்ளது.

எந்த நிலையிலும் நாம் நம்மை காத்துக்கொள்ள முடியும் என்கிற தன்னம்பிக்கையோடு அரசின் வழிகாட்டுதல்களை சரியான முறையில் பின்பற்றி, தொற்றின் கடுமையிலிருந்து பாதுகாத்துக் கொள்வோம்.

புனிதம் மிகுந்த நல்ல நாட்களில் கூட ஆலயம் சென்று ஆண்டவனை வழிபடுவதில் சில கட்டுப்பாடுகளை கடைப்பிடிப்போம். முகக் கவசம் அணிந்து, சமூக இடைவெளியை முறையாக பின்பற்றி, கைகளைக் கழுவி, நெரிசல் மிகுந்த இடங்களுக்குச் செல்லாமல் நம்மை நாம் காத்துக் கொள்வதோடு, பிறருக்கும் நோய் பரவாமல் கவனமுடன் இருப்போம்.

இறையருள் மீது நம்பிக்கை வைத்து, "என்றும் அவன் காப்பான்", என்கிற உறுதியோடு இருப்போம். நிச்சயம் இறையருள் கிடைக்கும்", இன்பங்கள் மலரும்!

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# பிப்ரவரி மாத காலண்டர் – 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 27 | பிரதோஷம் 28 | | | | | |
| | | அமாவாசை 1 | 2 | 3 | சதுர்த்தி 4 | 5 |
| ஷஷ்டி 6 | 7 | 8 | 9 | 10 | 11 | ஏகாதசி 12 |
| 13 | பிரதோஷம் 14 | 15 | பவுர்ணமி 16 | 17 | 18 | 19 |
| சதுர்த்தி 20 | 21 | ஷஷ்டி 22 | 23 | 24 | 25 | ஏகாதசி 26 |

# பதினாறு செல்வங்கள் அருளும் காசி விசுவநாதர்

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

கடலூர் நகரில் இருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் தென்திசையில் இயற்கை எழில் மிக்க துறைமுக நகரில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது காசி விசுவநாதர் ஆலயம். இக்கோயில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறப்படுகிறது.

## மகா புண்ணியம் :

கடலூர் துறைமுக நகருக்கென ஆன்மீக சிறப்புகள் உண்டு. இந்த ஊரில் அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை என்று அகிலத்திற்கு அருளொளி காட்டும் வள்ளற்பெருமான் பலமுறை சமயச்சொற்பொழிவு நிகழ்த்தி உள்ளார். இவ்வூரில் காசியம்பதியில் கோயில் கொண்ட நாதரின் பெருஞ் சிறப்புகள் அத்தனையும் இத்தல நாதருக்கு உண்டு. இத்தல நாதனை ஒருமுறை காதலாகி கசிந்து மல்க தரிசித்தால் காசிக்கு 16 முறை சென்று தரிசித்த மகா புண்ணியம் கிடைப்பதாக ஐதீகம்.

ஸ்தல நாயகராக காசி விசுவநாதரும், ஸ்தல நாயகியாக காசி விசாலாட்சியும் அருள் காட்சி தருகிறார்கள். விசுவநாதர் லிங்க வடிவமாக தாயுமானவா மகாதத்துவ அருட்காட்சியளிக்கிறார். ஊரிண் உடம்பு ஆலயம் இச்சிவ பெருமானைத் தரிசித்தால் புண்ணியம் அடைகிறது. அன்னை பார்வதியே சிவனை எண்ணி நாளும் தவம் செய்யும் போது நாமெல்லாம் சிவபூஜை எவ்வளவு செய்ய வேண்டும்.

## காண கண் கோடி வேண்டும்:

இத்திருக்கோயிலில் பழமையான சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட கருங்கல் சன்னதிகள் அற்புதமாக உள்ளன. அபிஷேக ஆராதனைகளையும், அலங்காரங்களையும், பார்ப்பதற்கு காண கண் கோடி வேண்டும். அருகில் உள்ள சன்னிதியில் காசிவிசாலாட்சி அம்பிகை சிறப்பு எழில் கோலம் கொண்டுள்ளது.

எல்லா மூர்த்திகளுக்கும் தனித்தனி சன்னிதிகள் மிகவும் அற்புதமாக உள்ளன. குறிப்பாக ஸ்ரீதேவி, பூமாதேவி, சமேத ஸ்ரீ நித்ய கல்யாண வெங்கடேச பெருமாள் உற்சவமூர்த்தி இனிதே எழுந்தருளி அழகிய சன்னதியில் உள்ளார். கனகவல்லி தாயார் சமேத கல்யாண வெங்கடேச பெருமாள் இனிதே எழுந்தருளியுள்ளார். மகாலட்சுமிக்கும் தனி சன்னதி உள்ளது. சிவனும், பெருமாளும் ஒரே கோயிலில் எழுந்தருளி இருப்பது அதிசயம். இக்கோவிலின் முகப்பில் விநாயகப்பெருமான் மிகவும் அழகாய் அருட்காட்சியளிக்கிறார். அவருக்கு சங்கடஹர சதுர்த்தி தீபாராதனையுடன் நடந்து வருகிறது. அருகில் தட்சிணாமூர்த்தி சாமி தென்திசை நோக்கி அருள் காட்சி அளிக்கிறார். இந்த தென்முகக் கடவுள், முருகப்பெருமானுக்கு பெரிய அளவில் மயில் எதிரில் எழில்மிகு சன்னதி அமைந்துள்ளது. முருகப்பெருமானுக்கு உகந்த நாட்களான கிருத்திகை மற்றும் கந்தசஷ்டி விழா சமயத்தில் சாமியை தரிசிக்க மக்கள் அதிக அளவில் வருகின்றனர். இச்சன்னதிக்கு அருகில் துர்க்கை சன்னதி சிறப்புடன் அமைந்துள்ளது. வேறு எங்கும் காணக் கிடைக்காத அபூர்வ திருக்காட்சி, இத்தாயின் அருள் முகத்தில் தரிசனம் தரும்! துர்க்கை தேவியை தரிசிப்போர் வாழ்வில் உயர்வர் என்பது ஐதீகம். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் ராகு காலங்களில் வழிபட்டால் பல்வேறு நலன்கள் பெறலாம். இதைத் தவிர மகா சிவராத்திரி விழா பிரதோஷ பூஜைகள் அற்புதமாக நடைபெற்று வருகிறது. இத்தல நந்திக்கும் மிகப்பழமை வாய்ந்தது. பிரதோஷ காலங்களில்

நந்தியும் பெருமானுக்கும் அபிஷேக அலங்கார தீபாராதனைகளும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது..




## பதினாறு செல்வம்:

பங்குனி மாதம் நித்ய கல்யாண வெங்கடேச பெருமாள் வீதி உலா, வைகுண்ட ஏகாதேசி சுவாமி வீதி உலா மார்கழி மாத திருப்பாவை திருவெம்பாவை சொற்பொழிவு மற்றும் சங்கடஹர சதுர்த்தி துர்கா பூஜை மிகவும் விசேஷம். பவுர்ணமி தினங்களில் இத்தல சிவபெருமானை பதினாறு முறை பக்தி சிரத்தையோடு வலம் வந்து வழிபட்டால் பதினாறு வகையான செல்வங்களைப் பெறலாம். எப்படி திருவண்ணாமலையை கிரிவலம் செய்கிறோமோ அது போல காசிவிஸ்வநாதர் கோயில் உள்பிரகாரத்தில் தேவாரத் திருமுறைகளைப் பாடி மனம் மொழி மெய் ஒன்றுபட பரம்பொருளான பரமசிவத்தை வழிபட்டால் அனைத்து நலன்களையும் பெறலாம். பல்வேறு அற்புத சிறப்புகள் கொண்ட தலத்தை வழிபட்டு வாழ்வில் உயர்வோம்.

# யானை வாகனம்

மகாவிஷ்ணுவிடமிருந்து தோன்றிய வெள்ளை நிறம் கொண்ட ஐராவதம் என்ற நாமமுடைய யானை, இந்திரனுக்கு வரமாக கிடைத்து, அவனை சுமக்கும் வாகனமானது. புராணங்களில் இந்த பரந்த உலகை எட்டு திசைகளையும் தாங்கும் யானைகள் எட்டு, கிழக்கு திசையை காக்கும் ஆண் யானையான ஐராவதம், மற்றும் பெண் யானையான அப்ரமு, தென் கிழக்கை பாதுகாக்கும் புண்டரீகம், கபிலன், தெற்கில் வாமனன், பிங்களன், தென்மேற்கில் குமுதா, அனுபமா, மேற்கில் அம்ரா, தாம் ரகர்ணி, வடமேற்கில் புஷ்ப தந்தா, சுப்ர தந்தா, வடக்கில் ஸர்வ பௌமா, அங்கினா, வடகிழக்கில் ஸீப்ரதிகா, அஞ்சனாவதி என்னும் அமரகோசா என கூறப்பட்டுள்ளது.



சைவ மற்றும் வைணவ ஆலயங்களில் வாகனமாக பயன்படுத்தப்படும் வைணவ ஆலயங்களில் பெரும்பாலும் 6ம் நாள் இறை உற்சவத்தின்போது உபயோகப்படுத்தப்படும்.
யானை வாகனத்தை சுமந்து விசேட நடைபோட்டு நடப்பார்கள் அதனை சுமப்பவர்கள் அந்த நடை கொண்ட பெயர் ஏசல் என்னும்சாய் நடை ஆகும்.

யானை வாகனத்தின் அமைப்பில், யானையின் தும்பிக்கை அதன் தந்தங்களை வெளிக்காட்டியபடி அடிப்பக்கம் ஒரு சுற்றுடன் இருக்க, அது நின்ற கம்பீர நிலையில் காணப்படும்.

# கனவுகளை நிறைவேற்றும் *வஹ்னி வாஸினி எந்திரம்*

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

நம் அனைவருக்கும் நமது ஆழ்மனதின் ஏராளமான கனவுகள் புதைந்து இருக்கும். உதாரணமாக வீடு, வண்டி, சொத்து, வெளிநாட்டு வேலை, தனக்கு ஏற்ற திருமண பந்தத்திற்கான துணை மற்றும் அதிக தொழில் லாபம் அடைய வேண்டும் என்று. இந்த கனவுகள் அனைத்தையும் நிறைவேற்றும் சக்தியை பெற்று இருப்பவள் இந்த பஞ்சமி திதியை ஆளும் வஹ்னி வாஷினி தேவி ஆவார். வஹ்னி என்றால் நெருப்பு என்றும் வாஸினி என்றால் வாசம் செய்பவள் என்றும் பொருள்படும். இவள் வாசம் செய்யும் நெருப்பானது காட்டு தீ போல் அழிக்கும் நெருப்பாக அல்லாமல் உணவை சமைப்பதற்கு தேவைப்படும் நெருப்பு போன்று உள்ளதால் நம் ஆழ்மனதில் புதைந்து கிடக்கும் அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றும் விதமாக அமைந்து உள்ளது. நாம் தொடந்து வஹ்னி வாஸினி எந்திரத்தை பூஜித்து வந்தால் ஆக்கஅறிவு மேம்படும், நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கும், கணவன் மனைவிக்கு இடையே நெருக்கம் அதிகரிக்கும் அனைத்துவிதமான செல்வசேர்க்கையும் ஏற்படும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இந்த வஹ்னி வாஸினி தேவி எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, சந்தன குங்கும திலகமிட்டு தினமும் அல்லி மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் நம் மனதின் கனவுகள் அனைத்தையும் நிறைவேற்றி, செல்வ செழிப்பை கொடுத்து வளமான வாழ்வு வாழ வழிவகை செய்கிறது.

ஸ்ரீ வஹ்னி வாஷினி தேவி காயத்ரி மந்திரம்:
ஓம் வஹ்னி வாஸின்யை வித்மஹே
ஸித்திப்ரதாயை தீமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்



# தெய்வ வாகனங்கள்!

~ ஆரூரன்

எந்த ஆலயத்திலும், வருடாந்திர உற்சவமானாலும் சரி, இதர குறிப்பிட்ட மாதங்களில் இடம் பெறும் விழாக்காலமானாலும் சரி, வாகன உற்சவம் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இறைவனை ஏதோ ஒரு ஒரு வாகனத்தில் அலங்கரித்து உற்சவ பெருமான், தேவி அல்லது பிராட்டியுடன் இணைந்து பவனி வருகையில் தரிசனம் பெறும் போது பக்தர்களுக்கு ஏற்படும் பரவசம் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஒன்றே!

வருமானம் அதிகம் இல்லாத கோவில்களில் கூட, ஏதாவது சாதாரண வாகனமாவது இருக்கும் வாய்ப்பு உண்டு.

வாகனம் என்பது சமஸ்கிருத சொல். அதன் தமிழ் அர்த்தம் " சுமப்பது" என்பதாகும். வாகனம் செய்யும் முறைகளும் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட சகலாதிகாரம், மனஸாரம் காச்யப சில்பம் மற்றும் ப்ரம்மேய சித்ரகர்ம சாஸ்திர பழைய சுவடிகளில் இடம் பெற்றவையே.

அத்தகைய சுவடிகள் மரத்தில் உருவாக்கப்படும் வாகனங்கள் குறிப்பிட்ட வகை மரங்களில் தான் தயாரிக்க வேண்டுமெனவும், அதற்காக குறிப்பிடப்பட்ட விதிமுறைகளை ஒழுங்காக கடைபிடிக்க வேண்டுமெனவும் திட்டவட்டமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்தகைய மரங்களாக அத்தி, கருங்காலி, மாவிலிங்கம், பலா இவை குறிப்பிடப்பட்டுள்ளன.

வாகனங்களை சுமக்க, உபகரணமானவைகளாக, உறுதியும், வளைந்து கொடுக்கும் தன்மை கொண்ட மூங்கில் அல்லது ஆலமரம் அமைந்துள்ளன. பொதுவாக வாகனம் தயாரிக்கப்பட உள்ள மரங்கள் இடி, மின்னலால் தாக்கப்பட்டு இருந்தாலும், பூச்சிகளால் அரிக்கப்பட்டு இருந்தாலும், பறவைகள் கூடுகட்டியவை, கோயில்களில் வளர்ந்துள்ளவை சுடுகாடு, இடுகாடு இவற்றின் அருகில் வளர்ந்துள்ளவை, ஆகிய மரங்களெல்லாம் வாகனம் செய்ய விலக்கப்பட்டு விடும். வாகனத்திற்காக மரம் வெட்டப்படுகையில், அதில் தெளிந்த ஒழுக்கு வந்தால் இதனை உபயோகிக்கும் வாகன சிற்பிகள், அதுவே சிவப்பு ஒழுக்கை வெளிப்படுத்தினால் அந்த மரத்தை தவிர்க்கவும் செய்வார்கள். இக்குறிப்புகள் வாகன அமைப்பு சாஸ்திர நூல்களில் கூறப்பட்டவை ஆகும்.

வெட்டப்படும் ஒரே மரத்தின் பல துண்டுகளே, ஒரு வாகனம் உருவாக்குகையில் இடம்பெறும். வாகனம் தயாராகி முழுமை பெற்றவுடன், அது சம்மந்தப்பட்ட ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு, ஒரு புண்ணிய நாளில் அதன் வெள்ளோட்ட நிகழ்ச்சி நடத்தப்படும்.

எந்தெந்த தெய்வ, தேவதைகளுக்கு எந்தெந்த வாகனம் உரியது என்ற நியதி உண்டு.

சிவனுக்கு காளையும், பிள்ளையாருக்கு மூஞ்சூறும், பொதுவாக முருகனுக்கு ஆட்டுக்கிடா, மயில், விஷ்ணுவுக்கு கருடனும், மகாலட்சுமிக்கு ஆந்தையும், பிரம்மா, சரஸ்வதி, ரதிதேவி இவர்களுக்கு அன்னமும், துர்க்கைக்கு சிங்கமும், ஐயப்பனுக்கு புலியும், ஐயனாருக்கு யானையும், சனி கிரகத்திற்கும், சண்டிகேசுவரருக்கும் காக்கை வாகனம் என பண்டைய நூல்களில் விதிக்கப்பட்டுள்ளது.

திசைக் காவலர்களான, இந்திரனுக்கு வெள்ளை யானையும், வருணனுக்கு மகரமும், வாயுவிற்கு மானும், எமனுக்கு எருமைக் கிடாவும், அக்னிக்கு ஆட்டுக்கிடாவும், குபேரனுக்கு குதிரையும், ஈசனாருக்கு ரிஷபமும், வருணனுக்கு முதலை வாகனமும், நிக்ருதிக்கு சவமும் வாகனமாகிறது. பூனை கூட ஒரு வாகனமாக கங்காதேவிக்கு என அறிய வியப்பு பற்றும்.

இனி இந்த இதழில் ஆங்காங்கே வாகனங்கள் பற்றி பார்க்கலாம்.



மேலே குறிப்பிட்ட வாகனங்கள் தவிர சிம்மவாகனம், மான் வாகனம், சூர்ய பிரபை வாகனம், சந்திர பிரபை வாகனம், அனுமந்த வாகனம், அதிகார நமீதி, காமதேனு வாகனம், கந்தர்வ வாகனம், பூதகண வாகனம், தாரகாசுர வாகனம், நரகாசுர வாகனம், கண்ட பேருண்ட பஷி வாகனம், காக்கை வாகனம், கிளி வாகனம், புலி வாகனம், யாளி வாகனம், சிம்ம வாகனம், பத்ம வாகனம், திருப்புளி ஆழ்வார் வாகனம், கல்ப விருட்ச வாகனம், புன்னை மர வாகனம், சேஷ வாகனம், கைலாச வாகனம், விமான வாகனம், சப்பர வாகனம், பல்லக்கு, ( கண்ணாடி பல்லக்கும்), ஆளும் பல்லக்கு, கோவர்தனகிரி வாகனம், பரங்கி நாற்காலி வாகனம், தேர், கோரதம் என பலவகைப்பட்ட வாகனங்கள் திருக்கோயில்களில் இறைவனுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.
இத்தகைய வாகனங்களில் சில வைணவ, சிவாலயங்களில் பரவலாக உபயோகப்படுத்தப்பட, ஒரு சில வகை வாகனங்கள், வைணவ ஆலயங்களில் மட்டும் பயன்படுத்தப்படுவதோடு, வேறு சில வாகனங்கள் சிவாலயங்களில் மட்டும் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு சில வாகனங்கள் மட்டும், ஆலய இறைவன் பிரகார பவனி வரவும், வேறு இதர அனைத்து வாகனங்களுமே, வீதி உலாவுக்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

திருக்கோயில் வாகன உற்சவங்கள் பக்தர்களுக்கு என்றும் பக்தி உணர்வை தூண்டும் வகையில் அமைந்து, ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கிறது! என்பதை மறுக்க இயலாது.

## குதிரை வாகனம்

குதிரை எனும் பிராணியை படைப்புக் கடவுளான பிரம்மனின் கச்யபர் மற்றும் தம்ரா என்பவர்களால் தோற்றுவிக்கப்பட்டதாக அக்னி புராணம் மூலம் அறிய முடிகிறது. குதிரை முகங்கொண்ட திருமாலை ஹயக்ரீவர் என்ற பெருமாளாக வழிபட்டு வருகிறோம்.



குதிரை வாகனம் சிவன் மற்றும் பெருமாள் குடிகொண்ட எல்லா ஆலயங்களிலும் உபயோகப்படுத்தப்படுகிறது. பெருமாள் கோயில்களில் விசேடமாக நடத்தப்படும் பரி என்னும் பாரிவேட்டை உற்சவத்தின்போது, இறைவன் குதிரை வாகனத்தில் பவனி வருவார்.. அவ்வாகன அமைப்பில் அந்த கம்பீர குதிரை வாகனம் தனது இரு முன்னங் கால்களையும் மேல் தூக்கி காட்சிதரும்.

மன்னர்கள் ஆண்ட காலத்தில் அவர்களுடைய குதிரைப் படையில் ராஜ நடை போட்ட குதிரை, தற்காலத்தில் தன் சுய மதிப்பை இழந்து, குதிரை ரேசுகளிலும், ஜட்கா வண்டியை இழுக்கும் சாதாரண விலங்காகிவிட்டது. ஒரே ஒரு ஆறுதல் இறை வாகனமாக ஆன்மீக வழிபாட்டில் இப்பொழுது அங்கம் வகிப்பதே!

# முருங்கை

~ குடந்தை நாராயணி

தாவரத்தில் அடங்கும் மரம், செடி, கொடி என்ற வகையில் ஒரு மரத்தின் விதை, வேர், இலை, பட்டை, தண்டு என்ற அத்தனையும் மருத்துவகுணம் கொண்ட ஒரு சில தாவரங்களில் முருங்கை மரமும் ஒன்றாகிறது.



எளிதில் உடையக் கூடியது முருங்கை என்பதால் முருங்கை காரணப் பெயர் பெற்றுள்ளது. முருகு என்ற சொல் உடைதலைக் குறிக்கும்.

பூத்துக் காய்த்து, நற்பலன்களை அளிக்கும் முருங்கை மரத்தின் பூர்வீகம் இமயமலைச் சாரல் ஆகும்.

எல்லா வகை மணற்பகுதியிலும் வளரும் தன்மை கொண்ட இந்த மரம் இனம் பாசன வசதி குறைந்த, வெப்பம் மிக்க உள்ள பூமியில் சிறப்பாக வளரக்கூடியது. சுமார் 30 அடி உயரம் வரை உச்சம் கொண்டது.

முருங்கை இலையிலிருந்து சாறு எடுத்து அதில் தேன் கலந்து இரவு படுக்கும் முன்பாக குடிக்க, வயிற்றில் பூச்சிகள் இருந்தால், காலைக்கடனின் போது அவை வெளியே வந்து விடும்.

மதுமேக நோயாளிகள் இந்தக் கீரையோடு, போதுமான அளவு எள், உப்பு மிளகாய் சேர்த்து அரைத்து தொடர்ந்து சில காலம் உண்டு வர, மதுமேக நோய் அவதி படிப்படியாக விலகி விடும். முருங்கை இலை, விதை இவைகள் விலங்குகளுக்கு தீவனமாகவும் பயன்படுத்தப்படும்.

## முருங்கைப்பூ

உடல் கொழுப்பை குறைக்கவும், சிறுநீரக பிரச்சனைகளை தீர்க்கவும் உதவும் முருங்கைப் பூவை, துவரம் பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பிட, வாய் கசப்பு உணர்வு அறவே மறையும்.

# மனிதத் தேர்கள்!

~ ஆரூர்.ஆர்.சுப்பிரமணியன்

காஞ்சிப் பெரியவாள் எனும் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்ற பெருமை பெற்றவர்கள் நாம்! நடமாடும் தெய்வமான சுவாமிகள் இந்தியா முழுவதும் ஆன்மிகப் பயணங்கள் மேற்கொண்டு இந்துமதப் பெருமைகளை, மூலை முடுக்கில் உள்ள சிற்றூர்கள், பட்டி, தொட்டிகள் இவைகளில் வாழ்ந்து கொண்டிருந்த பொது ஜனங்களுக்கு உணர்த்தி, அவர்களுக்கு விழிப்புணர்ச்சி வழங்கியதை எவராலும் மறக்க முடியாது.

மகான் ஆதிசங்கரர் அவர்கள் ஒரு காலத்தில் இந்து மதம் மிக ஷீணமடைந்த காலத்தில் எப்படி பாமரமக்களுக்கு கூட, நம் தெய்வங்களின் அருமை, பெருமைகளை எடுத்துரைத்து, அவர்கள் இந்து மதத்திலிருந்து, கவர்ந்து இழுக்கப்பட்ட பிற மதங்களுக்குச் செல்லாமல் காத்தும், அப்படி மதம் மாறிய வர்களை திரும்பவும் இந்து மதம் மாறக்காரணமாக இருந்தாரோ, அப்படி மகாப் பெரியவாளும், நாஸ்திகத்தால் ஈர்க்கப் பட்ட ஏழை, எளிய பணக்காரர்களை மீணடும் ஆஸ்திகத் தன்மைக்கு வர, அரிய பல சேவைகளை மேற்கொண்டதை நாம் மிக்க நன்றியுடன் உணரக் கடமைப் பட்டுள்ளோம்.

காஞ்சி மகான் அவர்கள், பொது மக்களிடம் உரையாற்றுகையிலோ அல்லது பக்தர்கள் தன்னை தரிசிக்கையிலோ, இந்துமதச் சிறப்புகளை கேட்பவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக எடுத்துச் சொல்வது வழக்கம். சில சமயங்களில் தன் எதிரே அமர்ந்துள்ள பக்தர்களிடம் நம் தெய்வங்கள் குறித்தான கேள்விகளை எழுப்பி, கொஞ்சம் அவகாசம் தந்து பதிலை அவர்களிடம் ஆவலோடு எதிர்பார்ப்பார்கள். அவர்களுக்கு பதில் சொல்ல இயலவில்லையெனில், மென்னகையுடன் சுவாமிகளே சரியான தகவலை அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் சுவையாகச் சொல்லி விடுவார்கள்.
சுமார் 50 ஆண்டுகளுக்கும் முற்பட்ட நிகழ்ச்சி இது. மகா சுவாமிகள் அன்று காஞ்சி மடத்தின் நித்ய பூஜைகளை முடித்து, பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கி கொண்டிருந்தார்கள்.
அப்போது மடத்தின் பணியாளரொருவர், சுவாமிகளை நெருங்கி வந்து, பவ்யமுடன், ”பெரியவா! இன்னும் கொஞ்ச நேரத்திலே, அறநிலையத் துறை ஆணையரா புதுசா பதவி ஏத்துண்ட திரு.உத்தண்டராம பிள்ளை என்கிறவர் தரிசனம் பெற, மடத்துக்கு வர்ரா” என்ற தகவலைச் சொன்னார். “சரி! சரி!” என்று பெரியவா கூப்பிட்டு, பக்தர்களிடம் அருளுரைகள் வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

சற்று நேரத்திற்கெல்லாம், பக்தர்கள் அங்கிருந்து புறப்பட்டவுடன், ஏகாந்தமாய் பெரிவாள் அமர்ந்திருக்கையில், புதிய அறநிலையத்துறை ஆணையர் தன் சக அதிகாரிகளுடன் உள்ளே வந்தார். ஒரு பழத்தட்டை சுவாமிகளுக்கு சமர்ப்பித்து விட்டு, தன்னை அறிமுகம் செய்து விட்டு, அவருக்கு நமஸ்காரம் செய்தார். உடன் வந்தவர்களும் அப்படியே செய்தனர். பிறகு அவர்களிடம் பெரியவாள் தமிழகத்தில் உள்ள ஆலயங்களின் தேர்கள் புனருத்தாரணம் குறித்து சில தகவல்களை கேட்டறிந்து விட்டு, சில ஆலோசனைகளையும் அருளினார்கள்.



இப்படி பெரியவாள் பேசிக்கொண்டிருக்கையில் ஆணையரைப் பார்த்து, “இப்போ, நான் இரு கேள்வி கேட்கட்டுமா?” என வினவினார். அதற்கு பணிவுடன் ஆணையர் தலையை ஆட்டினார்.
”ரொம்ப வருஷங்களா, பெரிய சின்ன கோவில்ல இருக்கற தேர்கள் எல்லாம் நன்னா உற்சவம் ஆகி ஓடிண்டு இருக்கு. எல்லா தேர்லேயும் அம்மன், அம்பாள் அல்லது தாயார் சமேத தேவதைகள் வீற்றிருப்பர்.

ஆனா சில தேரு, மனுஷாளாப் பிறந்து தெய்வாம்சம் பெற்றவாளுக்கும் இழுக்கப்படறது. அப்படி எந்தெந்தப் பேருக்கு, எந்த ஊர்ல தேரோட்டம் நடக்கிறது? சொல்ல முடியுமா?” ஆவலோடு, இந்தக் கேள்வியை எழுப்பி, பதிலை எதிர் நோக்கினார்கள்.
அப்போது தரையில் ஒரு குண்டூசி விழுந்தால் கூட அனைவரும் கேட்கும்படியான மௌனம் நிலவியது. ஏனென்றால் அதற்கான பதிலை ஆணையர் உட்பட அனைவரும் அறியாது இருந்தது தான் காரணம்.
அச்சூழ்நிலையை கலைத்திடும் வண்ணம் புன்னகையுடன் பெரியவாளே இப்படி பதில் சொன்னார்கள்:
“ஸ்ரீ வில்லிபுத்தூர் ஷேத்திரத்திலே பெரியாழ்வார் புத்ரியா வளர்ந்த ஸ்ரீ ஆண்டாளுக்கு அதே ஊர்லேயும். வைணவம் போற்றும் ஸ்ரீ ராமனுஜருக்கு ஸ்ரீபெரும்புதூரிலும், தேவாரமணிகளில் ஒருவரான ஸ்ரீ மாணிக்கவாசகருக்கு திருப்பெருந்துறைன்னு சொல்ற ஆவுடையார்கோவில்லேயும் அன்னிக்கும், இன்னிக்கும் தேரோட்ட விழா நன்னா நடந்துண்டு இருக்கு” எனச் சொன்னார்கள்.
பெரியவாள் தரிசனத்துக்கு அன்று வந்த ஆணையர் உள்ளிட்ட பணியாளர்கள் அடைந்ததோ அளப்பற்ற மகிழ்ச்சி. சுவாமிகள் ஆசிகளோடு அவர்களுக்கு கிடைத்தது ஒரு அரிய தகவலும் தானே!

## புருஷா மிருக வாகனம்



சிவபிரானுக்கே உரிய இந்த சிறப்பு வாகனம் மிருகத்தின் உடலும், மனிதத் தலையும், அடர்ந்த தாடி மீசையுடனும் கூரிய நகங்களுடன் கூடிய கை, கால்களுடனும், தனது இரு கரங்கள் மேல் தூக்கிய நிலையில் உருட்டு விழிகளுடனும், உறுப்புகள் ஆபரணங்களை கொண்ட நிலையில் தோற்றம் தரும். மகாபாரதத்தில் இடம் பெறுகிறது புருஷாமிருக வரலாறு.

இந்த அபூர்வ வாகனம், காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலிலும், மயிலை கபாலீஸ்வரர் ஆலயத்திலும் உற்சவ காலங்களில் புறப்பாடு ஆகிறது.

## அன்னமெனும் ஹம்ச வாகனம்



படைப்புக் கடவுள் பிரம்மனுக்கும் கல்வி தெய்வம் சரஸ்வதி தேவிக்கும் வாகனமாகிறது ஹம்ஸ வாகனம்.

மகான் வேதாந்த தேசிகர் தனது படைப்பான ஹம்ச சந்தேசம் என்ற நூலில், அன்னப்பறவை மூலம் ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டிக்கு தகவல் அனுப்புவதாக போற்றி கூறியுள்ளார்.

இந்த ஹம்ச வாகனத்தில் கூர்மையான மூக்கிலிருந்து பூமாலை கொடி தொங்கி இருக்கும் அழகை தரிசிக்கலாம்.

# கடலூர் முதுநகரும் வள்ளல் பெருமானும்

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

இயற்கை எழில்மிக்க வயலும் வயல் சார்ந்த ஊராக இருந்தாலும் கடலும் கடல் சார்ந்த ஊராக காட்சி அளிப்பது கடலூர் முதுநகர். முற்காலத்தில் கூடலூர் என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளது. உணவு உற்பத்தி, கடல் வணிகம், நெசவுத் தொழில், உலோகத் தொழில்கள் என களைகட்டிய காலங்கள் உண்டு.

எத்தனையோ புயல் மழை வெள்ளம் என இயற்கை சீற்றங்களை கண்டும் அஞ்சாமல் அசராமல் அமைதியாகவும் அழகாகவும் காட்சி அளிக்கிறது. இயற்கை அழகும், செயற்கை அழகும் இணை பிரியாது கைகோர்த்து காட்சி அளிப்பது தான் கடலூர் துறைமுகம். அருள் ஞான வெள்ளத்திற்கும் பஞ்சம் இல்லை எத்தனையோ சித்தர்களும், யோகிகளும் கடலூர் முதுநகரில் தங்கி இருந்துள்ளனர். கோயில்களுக்கும் பஞ்சமில்லை, அப்பெருஞ்தவசீலர்களின் உயரிய ஆசைகளால் தான் சுனாமி போன்ற பெருந்துன்பம் வந்தபோதும் ஊர் காக்கப்பட்டு வருகிறது.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு ராமுடு சாமியார் என்ற மெய்ஞானத் துறவி ஒருவர் கடலூர் முதுநகரில் உலா வந்திருக்கிறார். வெறும் கோவணம் மட்டுமே உடை, யாராவது உணவு கொடுத்தால் இரண்டு கைகளால் வாங்கி சாப்பிட்டு தலையில் துடைத்துக் கொள்வார். அவர் குளித்து பார்த்ததே இல்லை. ஆனாலும் அவர் மேல் அற்புத மணம் வீசும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அவர் ஒரு செல்லக் குழந்தை, அவர் யார்? என்ன விவரம் என்று யாருக்கும் தெரியாது. யோகிகள் பல வடிவங்களில் வருவார்கள் என்பது ஐதீகம். 05.10.1823 ஆம் ஆண்டில் சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 21 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணி அளவில் அவதரித்த ஆன்மநேய அருள் வள்ளல் ராமலிங்க அடிகளார் அருட்பெருஞ்ஜோதியைக் கண்டவர். தனிப்பெருங்கருணையோடு மரணமிலா பெருவாழ்வு வாழ வழிகாட்டியவர். வடலூரிலே சத்திய ஞான சபையை ஏற்படுத்தியவர். பசிப் பிணியைப் போக்க பாடுபட்டவர். எந்த உயிர்களிடமும் தயவு கொண்டவர். உயிர் இரக்கமே ஞானத்தின் திறவுகோல் என்பதை உலகத்துக்குத் தெளிவுபடுத்தியவர்.


சுவாமிகளின் அருள் வாழ்வில் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளதைப் படித்து இருக்கின்றோம். சமயப் பெரியோர்கள் கூறக் கேட்டிருக்கின்றோம். சுவாமிகளின் திருவருட்பாவிலும் பல உண்மைகளை உணர்ந்தும் தெரிந்துள்ளோம். அகில உலகமெங்கும் வள்ளல் பெருமானின் உயர் கொள்கைகள் பரவியுள்ள இப்பொழுது சுவாமிகளுடன் தொடர்புடைய பல ஊர்கள் உள்ளன. கடலூர் முதுநகரிலும் சுவாமிகள் தங்கியுள்ளார். அந்த வகையில் கடலூர் முதுநகரும் பெரும்பாக்கியம் பெற்றுள்ளது. ராமலிங்க சுவாமிகளின் திருப்புகழை உணர்த்தும் சபைகளும் இங்கு உள்ளன.

மிகப் பழமையான குமரக்கோயிலில் சுவாமிகள் ஆன்மீக சொற்பொழிவுகள் செய்துள்ளதாக பல பெரியோர்கள் செவி வழி செய்தியாக கூறக் கேட்கலாம். காமாட்சி அம்மன் கோயிலில் எழுந்தருளியுள்ள காமாட்சி அம்மனை வழிபட்டு இருக்கலாம். அதற்குச் சான்றாக ஸ்வாமிகள் கடலூர் முதுநகர் வந்து தங்கியிருந்த சமயம் இக்கோயிலின் கிண்ணித் தேர் திருவிழா நடைபெற்றுள்ளது.

குமரக் கோயிலில் நடராஜ மண்டபத்தின் மேல் அருள்ஞான வள்ளலாருக்கு திருஉருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது என்றும் காணலாம்.

11.06.1866 ஆம் ஆண்டில் இறுக்கம் இரத்தின முதலியாரும் வரைந்த திருமுகத்தில் (கடிதத்தில்) நான் கூடலூரில் இருக்கின்றேன் என ஸ்வாமிகள் குறித்துள்ளார். 02.08.1866 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 19 ஆம் தேதி திருநறுங்குன்றம் ராமசாமி நாயனாருக்கு எழுதிய திருமுகத்தில் நான் தற்காலம் கூடலூரில் இருக்கின்றேன் என குறித்துள்ளார். ரத்தின முதலியாருக்கு எழுதிய மற்றொரு கடிதத்தில் உடனே தாங்கள் எனக்கு கூடலுக்கு அவ்விடத்தே சங்கதிகளை தபால் தெரிவிக்கவேண்டும் என குறித்துள்ளார்.

கூடலூரில் பல நாட்கள், பல மாதங்கள் தங்கியிருந்துள்ளார் என்பது தெளிவு, கூடலூர் மு. அப்பாசாமி செட்டியார் தமையனார் ராமசாமி செட்டியார் நாவில் புற்றுநோய் உண்டாகி பெரிதும் துன்புற்றார். சுவாமிகள் திருநீற்றை 3 வேலை பூசுமாறும் உட் கொள்ளுமாறும் செய்து புற்று நோயைப் போக்கினார் வள்ளலார். அப்பாசாமி செட்டியார் சுவாமிகளை கூடலூருக்கு அழைத்து உபசரிப்பது வழக்கம். சுவாமிகள் இவரது வீட்டில் தங்குவதுண்டு.



பங்குனி உத்திரம் கிண்ணித்தேர் நடைபெற்றது. அப்போது சுவாமிகளை நிறைய பேர் வந்து தரிசித்தனர். யாரோ ஒருவர் ஒளிவீசும் தோற்றத்துடன் விரைவாக வீட்டினுள் நுழைவதை பார்த்தனர். அவர் யார்? என ஐயம் எழுந்தது. திண்ணையில் இருந்தவர்களுள் புதுவை உறையூர் துரைசாமி பிள்ளை என்பவர் உள்ளே போய்ப்பார்த்தார், மற்றும் சிலரும் அவருடன் சென்றனர். வீட்டினுள் சுவாமிகளைப் தவிர வேறு யாருமில்லை. சுவாமிகள் முன்பு ஒரு லட்டு இருந்தது. அதில் சிறிதளவு மட்டும் ஸ்வாமிகள் சுவைத்துவிட்டு, பின் உள்ளே வந்த அனைவருக்கும் அதைக் கொடுத்தார். சற்றும் வியப்பபு குறையாமல் சுவாமிகளிடம் யாரோ வந்தாற்போலிந்ததே இங்கு ஒருவரையும் காணவில்லையே என்று சுவாமிகளிடம் கேட்டார். அதற்கு சுவாமிகள் ஒரு சித்தர் வந்து போனார். இந்நேரம் காசியிலே இருப்பார். அவர் கொடுத்த லட்டுதான் இது என்றார் பெருமான். அப்பா ஸ்வாமி வாழைத்தோப்பில் பாம்பு ஒன்று சுவாமிகளின் தலையில் தீண்ட சுவாமிகள் விபூதியை பூசிக் கொண்டார். பாம்பு தான் சாக நம்மை தீண்டிற்று அதோடு அந்த பாம்பின் விதியும் முடிந்தது.

மஞ்சகுப்பத்திலிருந்த ராமகிருஷ்ண பிள்ளை என்பவர் சுவாமிகள் அருளுரைகளைக் கேட்க கூடலுருக்கு வருவதுண்டு. திரும்பும்போது இருளால் சாலையில் அஞ்சிய போதெல்லாம் யாரோ ஒருவர் அவருக்கு சற்று முன்னே செல்வது போல தோன்றும். அவரை துணையாக கருதி இவர் அஞ்சாது செல்வார். ஊர் சென்றதும் மறைந்து விடும். அந்த உருவம் வள்ளலார் என்பதை சொல்லவும் வேண்டுமா?

கூடலூரில் இருசப்பன் செட்டியார் என்பவர் வீட்டின் மாடியில் சுவாமிகள் தங்கி இருந்து பல அற்புதங்கள் செய்துள்ளார். நாதஸ்வர கலைஞர்களை வாழ்த்தியது, உள்நாக்கு வளர்ந்து துன்புற்ற ஒருவரை குணப்படுத்தியது என பல அற்புதங்களைப் புரிந்ததும் கூடலூர் என்பதை உணரும்போது மெய்சிலிர்க்கிறது. ஒவ்வொரு ஆண்டும் திருவண்ணாமலையிலிருந்து திருக்கூட்டம் வந்துபோகும். சன்னியாசிகளை ஆதரித்த அருள் நலம் பெற்றுள்ளது கடலூர் முதுநகர் அரசியல், கலை, இலக்கியம், ஆன்மீகம், தொழில் என பல நிலைகளிலும் முத்திரை பதித்து வரும் கடலூர் துறைமுகம் தமிழகத்துக்கு கலங்கரை விளக்கமாக இருந்த காலமும் உண்டு. ஆங்கிலேயரான ராபர்ட் கிளைவ்வைக் கவர்ந்த ஊர் கடலூர் துறைமுகம் தான்.

வருங்காலத்தில் கடலூர் புதுநகர் போல் கடலூர் முதுநகர் மாறலாம்! செயற்கை அழகு பலவும் சேரலாம். காலங்கள் எவ்வளவு மாறினாலும், காட்சிகள் எவ்வளவு மாறினாலும் வள்ளல் பெருமான் ராமலிங்க சுவாமிகளின் பொற்பாதங்கள் பட்ட கடலூர் முதுநகரின் புனித மண்ணை எத்தனை முறை வேண்டுமானாலும் முத்தமிடலாம்.




# எளிமையான லால் கிதாப் பரிகாரங்கள்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

## வேலை கிடைப்பதற்கான லால் கிதாப் பரிகாரங்கள்:

- வேலை வாய்ப்புகளை மேம்படுத்த ஒவ்வொரு திங்கட்கிழமையும் கோவிலில் உள்ள சிவ லிங்கத்திற்கு சுத்தமான நீரை அபிசேகத்திற்கு வழங்கவும்.
- ஒவ்வொரு வியாழக்கிழமையும் பசுக்களுக்கு வாழைப்பழங்களை உணவளிக்கவும்.
- சனிக்கிழமை தோறும் விரதம் இருந்து சனி பகவானுக்கு எள்ளு தீபம் ஏற்றி வழிபட்டு வரவும்.
- நவதானியத்தை பறவைகளுக்கு உணவளித்து வருவதன் மூலம் தொழிலில் உயர்பதவியை அடையலாம்.

## விரைவில் திருமணம் முடிய லால் கிதாப் பரிகாரங்கள்:

- குறைந்தபட்சம் 43 நாட்களுக்கு குளிக்கும் நீரில் மஞ்சள் சேர்த்து குளித்து வரவும்.
- பசுவுக்கு உணவாக புல் வழங்குவதை வழக்கமாக்கி கொள்ளுங்கள்.
- புதன்கிழமைகளில் அரவாணிக்கு தொடர்ந்து பணத்தை தானம் செய்யவும்.
- தொடர்ந்து 16 திங்கட்கிழமைகள் விரதம் இருந்து, “ஓம் நமசிவாய ஓம்” என்னும் பஞ்சாக்சர மந்திரத்தை ஜபித்துக் கொண்டே சிவனுக்கு அபிஷேகம் செய்யவும்.

# திருநாவுக்கரசு சுவாமிகளோடு தொடர்புடைய சிவாலயங்கள்

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

கடலூர் மாவட்டத்திலுள்ள பண்ருட்டிக்கு மேற்கே 9 கிலோமீட்டர் தொலைவில் கடலூர் சித்தூர் சாலையில் அருகில் உள்ளது திருவாமூர்.

திருவாமூர் ஸ்ரீ திரிபுரசுந்தரி உடனுறை ஸ்ரீ பசுபதீஸ்வரர் திருக்கோயில்.

குலோத்துங்கச்சோழன் இத்திருத்தலத்தில் திருப்பணி புரிந்துள்ளதாக இக் கோயில் கல்வெட்டு செய்தியால் அறிய முடிகின்றது. தல விருட்சம் சரக்கொன்றை.

இம்மரத்தில் பூக்கும் பூக்கள் ஓம் என்னும் பிரணவ வடிவில் உள்ளதால் பிரணவக்கொன்றை எனவும் வழங்குவர்.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை குறித்து பத்து பாடல்கள் எழுதியுள்ளார்.

இத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமுருகப் பெருமானை போற்றி ஸ்ரீ அருணகிரிநாதர் திருவாமூர் திருப்புகழ் எழுதி உள்ளமையும் கூடுதல் சிறப்பு.

அப்பர் பெருமான் அவதரித்த பிறகு திரு ஆமூர் என ஆனதாக கூறுகின்றார்.

"சிவம் பெருக்கும் திரு ஆம் ஊர் திருவாமூர்"

என்று தெய்வச் சேக்கிழார் போற்றியுள்ளார்.

ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ முருகப் பெருமான், ஸ்ரீ துர்க்கை, ஸ்ரீ லட்சுமி நாராயணன் மற்றும் நவக்கிரக சன்னதிகள் அழகுற அமைந்துள்ளது.

இத்தலத்தின் அருகில் உள்ள பகுதியில் அப்பர் பெருமானுக்கு ஆலயம் கட்டி அப்பர் பெருமானை ஆராதித்து வருகின்றனர். மாத சதய விழாவும் ஆண்டு சதய விழாவும் வெகுவிமர்சையாக நடைபெற்றுவருகின்றது.

இத்தலத்தில்தான் அப்பர் பெருமான் அவதரித்தார்.

உழவாரப்பணி புரிந்திடும் சிவநேசச் செல்வர்களுக்கு, இத்திருத்தலமே மூல திருத்தலம்!

உழவாரப் பணிபுரிந்த உன்னத சிவனருள் செல்வர் தோன்றிய புனிதமிகு ஊர் ஆயிற்றே இத்திருவாமூர்!

இத்தல இறைவனை நாவுக்கரசர் "பசுபதி திருவிருத்தம்" பாடி அருளினார்.

தேவார வைப்புத் தலமாக இத்தலம் அமைந்துள்ளது.



கெடிலநதிக்கரை ஓரத்தில் இக்கோயில் எழிலுடன் அமைந்துள்ளது. இத்தலத்தில்

திருநாவுக்கரசர் அவதரித்த வீடு உள்ளது அதை வீடு என்பதைவிட சன்னிதி என்றே கூறலாம்.

இத்தலத்தில் ஓர் அதிசயம்! திருநாவுக்கரசு சுவாமிகள் வைத்த களர் உகாய் ( களரி வாகை) விருட்சம். சுவாமிகளே வைத்த மரமாகும். கொடியாகவும், செடியாகவும், விருட்சமாகவும் காட்சி தரும் அற்புத அதிசய மரமாகும். இம்மரத்தின் இலைகள் அறுசுவைகளும் கொண்டிருப்பது மிகப் பெரிய ஆச்சரியமான விஷயம்.

திருவதிகை (திரு அதிகை) அட்டவீரட்ட தலம் பண்ருட்டிக்கு அருகே உள்ளது.

## அப்பர் அருள் பெற்ற அருமையான தலம்!

இறைவன் ஸ்ரீ வீரட்டேஸ்வரர் இறைவி ஸ்ரீ திரிபுரசுந்தரி (பெரியநாயகி) மூவராலும் பதிகம் பெற்ற தொன்மையான சிவத்தலம். திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீபாடலீஸ்வரர் திருக்கோயில். கடலூர் நகர பகுதியின் இதயப்பகுதியில் அமைந்துள்ளது. கடலூர் பேருந்து நிலையம், ரயில் நிலையம் அருகே அமைந்த பெரியக் கோயிலாகும்.

தோன்றாத்துணைநாதர், கன்னிவனநாதர் சிவக்கொழுந்தீசர், கரையேற்றும் பிரான் என்ற திருநாமங்கள் கொண்டவர் இத்தல இறைவன்.

இறைவி - ஸ்ரீ பிரஹந் நாயகி, பெரியநாயகி, தோகையாம்பிகை அருந்தவ நாயகி, அருவ நிலையில் தவம் புரியும் நாயகிதான் இத்தல அம்பிகை.

தல விருட்சம் பாதிரி மரம் 12 வகையான மலர்கள் ஒரே சமயத்தில் பூக்கும் அதிசய மரம். ஆதி பாதிரி மரம் கவசமிட்டு பாதுகாக்கப்படுகிறது.

பிரம்மதீர்த்தம் கடல் சிவகர தீர்த்தம்



திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பதிகங்கள் பாடியுள்ளனர்.

வியாக்கிரபாதர் பூசித்தமையால் இத்தலம் வட புலியூர் என்று கூறுவர்.

தூமப்ப முனிவரின் சாபத்தால் முடக் காலுள்ள முயலுருப் பெற்ற மங்கண முனிவர் பூசித்து சாபம் நீங்கப்பெற்ற தலம்.

"முன்னம் நின்ற முடக்கால் முயலுக்கு
அருள் செய்து நீள்
புன்னை நின்று கமழ் பாதிரிப் புலியூர் உளான்
தன்னை நின்று வணங்கும் தனைத் தவ
மில்லிகள்
பின்னை நின்ற பிணி யாக்கையை
பெறுவார்களே"

என்று பாடிய திருஞானசம்பந்தருக்கு இத்தலத்தின் எதிரில் - சற்று தூரத்தில் ஆலயம் அமைக்கப்பட்டு உள்ளது அதிசயம். அப்பர் அடிகள் சமணர்களால் கல்லில் பிடிக்கப்பட்டு கடலிற் பாய்ச்சப்பட்ட காலத்தில்

சொற்றுணை வேதியன் சோதி வானவன் பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைத்தொழ கற்றுணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே என்று நமச்சிவாயப் பதிகத்தைப் பாடி கரை சேர்ந்தது இந்தப் பதியில் தான்!

இக்கோவிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் கரையேற விட்ட குப்பம் எனும் ஊர் உள்ளது. இதனை அப்பர் கரையேற விட்ட குப்பம் என்றே இன்றும் அழைக்கின்றனர். அந்தப் பகுதியில் திருக்குளமும் நடுவே சிறு மண்டபமும் அமைந்துள்ளது மிகச் சிறப்பு!

கரையேறிய திருநாவுக்கரசர்
திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ பாடலேசுவரரை
மனமுருக தரிசித்து, ஈன்றாளுமாய்
எனக்கெந்தையுமாய் உடன்
தோன்றினராய் மூன்றாய் உலகம்

படைத்து உகந்தான் மனத்துள்ளிருக்க ஏன்றான்
இமையவர்க்கு அன்பன் திருப்பாதிரிப்புலியூர்
தோன்றாத் துணையாயிருந்தனன் தன்னடி
யோர்களுக்கே

என்று பாடி வழிபட்டார் அப்பரடிகள்.

இத்தலத்தில் உள்ள கல்வெட்டில் திருநாவுக்கரசர் சுவாமிகள் குறித்த புராணம் இயற்றிய புலவருக்கு இரண்டு மா நிலம் இறையிலியாக கொடுத்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இது முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்திய கல்வெட்டு! பூம்புலியூர் நாடகம் எனும் நாடகம் அப்பர் வாழ்க்கையைச் சித்தரிப்பதாக இருந்திருக்கிறது.

திருவதிகை வீரட்டானம் திருவதிகை நடு நாட்டுத் திருத்தலங்களுள் ஏழாவது திருத்தலம்.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் முதலாவது பாடலை பாடிய சிறப்புக்குரிய தலம்.

இத்தல ஈசன் திருவருளால் திருநாவுக்கரசரின் சூலை நோய் நீங்கப் பெற்ற திருத்தலம்.

திருநாவுக்கரசரின் தமக்கையார் திலகவதி அம்மையார் திருத் தொண்டு புரிந்த அற்புதத் திருத்தலம். மூவர் பாடிய தலம். அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று.

ஈசன் திரிபுரம் எரித்த வீரச்செயல் நிகழ்ந்த சிவத்தலம்.

திருநாவுக்கரசர் பிறவியால் சைவ சமயம் சார்ந்தவராயினும் இடையே சமண நெறி சார்ந்து பல்லவ மன்னனிடம் ( மகேந்திரவர்மன்) பணிபுரிந்த காலத்தில் இவரது தமக்கையார் திலகவதியார் இளவலின் நிலை கண்டு வருந்தி திருவதிகை ஈசனிடம் முறையிட அப்பொழுது ஈசன் அசரீரியாக ”சூலை தந்து ஆட் கொள்வோம் கவலை கொள்ளற்க” என்று அருள் புரிந்தார்.

திருநாவுக்கரசருக்கு சூலை நோய் ஏற்பட்டு எத்தகைய மருந்தினாலும் தீராத நிலையில் ஈசன் திருவருளால் தமது தமக்கையாருடன் இத்தலத்து திருக்கோயிலுக்கு வந்து இறைவனிடம் பணிந்து பதிகம் பாட சூலைநோய் நீங்கியது.

இறைவன் அருள் வாக்கினால் திருநாவுக்கரசர் என்ற அருள்பெற்றார். இவரது இயற்பெயர் ” மருள்நீக்கியார்” என்பதாம்.

பல்லவ மன்னனிடம் பணிபுரிந்த காலத்தில் தருமசேனர் என்ற பெயரில் அழைக்கப் பெற்றார்.

திருநாவுக்கரசர் அருள்பெற்ற திருவதிகையில் தமக்கையார் திலகவதியாருக்கும் தம்பி திருநாவுக்கரசருக்கும் தனித்தனி சன்னதிகள் அமைந்துள்ளது.

கரையேறிய கடலூரில் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ பாடலீஸ்வரர் திருக்கோயில் உட்கார்ந்த நிலையில் திருநாவுக்கரசர் சிலை அமைந்த சந்நிதி உள்ளது.

அப்பர் அவதரித்த திருவாமூரிலும் திருநாவுக்கரசருக்கு சன்னிதி அமைந்துள்ளது. அனைத்து சிவாலயங்களிலும் சைவ சமயப்பெரு நெறியைத் தமிழ் வையகம் முழுவதும் பரப்பிய சைவசமய குரவர் நால்வரில் ஒருவரான அப்பர் என்று பெரிதும் போற்றப்படும் திருநாவுக்கரசர் சுவாமிகளுடன் பல்வேறு சிவாலயங்கள் பெரிதும் தொடர்பு கொண்டிருந்தாலும் இம்மூன்று சிவாலயங்கள் பெரிதும் குறிப்பிடத்தக்க அற்புத விசேஷங்கள் கொண்டவை. இம்மூன்று ஆலயங்களை தரிசித்து ஆன்ம பலம் பெறுவோம்.




TURMERIC
& BLACK PEPPER
HI-HEALTH FORMULA
Navel Chakra & Detoxifier
Hi –health formula can be a solution for everyday health issues
Turmeric fights with free radicals & protects brain, heart and liver cells from ageing process
Call: 88702 88701

# மறக்க முடியாத அந்த நாள்!

~ ஆரூர்.ஆர்.சுப்பிரமணியன்

ரெவின்யூ டிபார்ட்மெண்ட் என்னும் (தமிழக) வருவாய்த் துறையில் சாதாரண இளநிலை உதவியாளர் பதவியில் சேர்ந்து, படிப்படியாய் சுமார் 20 வருடகாலம் பல்வேறு துறை சார்ந்த அலுவலகங்களில் தாசில்தார் பதவி வரை நகரங் களின் சிகரமான "காஞ்சிபுரத்திலேயே" பணிபுரிந்தது இறை அருளால் தான். பிறகு துணை கலெக்டர் பதவியிலிருந்து சுமார் 38 ஆண்டுகள் கொண்ட எனது அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்றேன்.

காஞ்சிபுரத்திலேயே, நான் வசித்த தாசில்தார் பதவியில் முக்கியமானது மாவட்ட கலெக்டர் ஆபீசில், ஏ.ஜீ. வரவேற்பு தாசில்தார் என்பது தான். பல நாட்டின் ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிகள், மாநில கவர்னர்கள், அயல்நாட்டு பிரமுகர்கள் இப்படி எத்தனையோ மனிதர்களை மாவட்ட "புரோட்ட கால் 2" என்ற அந்தஸ்துடன், அரசு மாளிகைகளில் தங்க வைத்து, உணவு உபசரணை களுடன், அவர்கள் மனம் கோணாதபடி ஆலய தரிசனம், மகான்கள் தரிசனம் இன்னும் முக்கிய இடங்களுக்கு அழைத்துச் சென்று பிறகு அவர்களை வந்த ஊருக்கே கௌரவம் குறை யாதபடி இன்முகத்துடன் அனுப்பி வைத்தல் என்ற பணிகளை அந்த காஞ்சி மகாப் பெரியவாள் அருளால் சுமார் இரண்டாண்டுகள் நன்றாகச் செய்திருக்கிறேன்.



வி.ஐ.பி. தாசில்தார் பதவியிலிருந்து பிறகு செங்கல்பட்டில் நிர்வாக மாஜிஸ்டிரேட்-கம்-தாலுகா தாசில்தாராக மாற்றப் பட்டேன். முன் பதவியில் நான் சிறப்பாக வேலை செய்து ஸ்ரீ சங்கராச்சார்யார்களின் அபிமானம். ஆசி பெற்றவன் என்பதால் மிக மிக முக்கிய பிரமுகர்கள் காஞ்சி மடத்திற்கு தரிசனம் பெற வருகையில், அந்த நாட்களில் மட்டும், எனக்கு அங்கே "சிறப்பு பணி" தந்து விடுவார் மாவட்ட கலெக்டர்!

1994ம் ஆண்டு!

ஜனவரி மாதம், நான் அன்று செங்கல்பட்டு நிர்வாகத்துக்கு உட்பட்ட மகாபலிபுரத்தில் அரசு நடத்திய நாட்டிய விழா பணிகளைச் செய்து, அது முடிவடைந்தவுடன், தொலைபேசி மூலம், மறுநாள் அரசு விடுமுறை தினமென்பதால், அதை சென்னை பல்லாவரத்தில் உள்ள என் குடும்பத்துடன் சேர்ந்து கொண்டாட வேண்டுமென்று அனுமதி கோரி பெற்று விட்டேன், மாவட்ட கலெக்டரிடமிருந்து.

இரவு சுமார் 10 மணிக்கு பல்லாவரம் வந்து சேர்ந்த என்னை, இல்லத்தின் வாயிற் படியிலேயே வரவேற்ற என் மனைவி கீதா பதட்டத்துடன் "உங்களுக்கு சேதி தெரியுமா" எனக் கேட்டு. நான் "இல்லை" என தலையசைத்ததைக் கண்டு விட்டு, "நம்ம காஞ்சி மகாப் பெரியவா. இன்னிக்கு (8.1.1994) மத்தியானம் 2.50 மணிக்கு சித்தியாகி விட்டாராம்!" எனத் தெரிவித்து அழவும் ஆரம்பித்து விட்டாள். "என்ன!" நிலை குலைந்து போன நான், கடும் சோகத்துடன் வீட்டுக்குள் நுழைந்தேன்.

தூக்கமின்றித் தவித்தேன்.

மறுநாள் காலை, எனது நித்திய கடமைகளை முடித்துக் கொண்டு, நான் உடை மாற்றம் செய்தேன். என்னை தற்செயலாகப் பார்த்து விட்ட என் துணைவி,

“என்ன இது! வெள்ளையும், சள்ளையுமா பேன்ட், ஷர்ட்? நாம போறது மகாப்பெரியவாளை அஞ்சலி செய்ய” நினைவூட்டுவது போலச் சொன்னா.

“தெரியும் எனக்கு. விடுமுறை அனுமதி எனக்கு நிர்வாகம் தந்திருந்தாலும் இன்னிக்கு கண்டிப்பா, எனக்கு மடத்திலே டியூட்டி போட்டிருப்பார்கள். அதனால் தான் இப்படி டிரஸ்” என பதில் சொன்னேன். பல்லாவரத்தில், கிடைத்த முதல் பஸ்ஸில் ஏறி காஞ்சிபுரம் மடத்திற்கு இருவரும் வந்து விட்டோம். பெரியவாளைப் பற்றிய செய்தி இதற்குள் உலகெங்கும் பரவி விட்டதால், மடத்திற்கு வெளியே கூட நீண்ட மனித வரிசை, பெரிய வாளை தரிசிக்க, ஆனால் சோகம் கூடிய அமைதியான வரிசை, என் துணைவியிடம் “நீ க்யூவில் வா! பிறகு நான் உன்னை மீண்டும் பார்க்கும் வரை மடத்திலேயே இரு” எனக் கூறிவிட்டு உள்ளே நுழைந்தேன்.

அங்கே காஞ்சி மகாப் பெரியவாள் வழக்கமாய், அமர்ந்து பக்தர்களுக்கு ஆசி வழங்கும் மேடையின் மீது, ஒரு சாய்வு நாற்காலியில் அமர்த்தி வைக்கப்பட்டு இருந்தார். இது போல் பலமுறை தியான முறையில் மகாப் பெரியவாளின் தரிசனங்களை பார்த்து மகிழ்ந்திருந்த எனக்கு அன்றைய காட்சி வித்தியாசமாக இருந்தது. இன்முகத்துடன் எப்போதும் காட்சி தருபவர் இப்படி உள்ளாரே! எப்படியாவது மகான் கடவுள் அருளால் அசைந்து கொடுக்கமாட்டாரா“ - இப்படி எண்ணியவனுக்கு கண்ணீர் கொப்பளித்து வந்தது.
இச்சமயத்தில் என் தோளை யாரோ தொட, என் பின்புறத்தில் காஞ்சிபுரம் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் திரு.மகாலிங்கம் நின்று கொண்டு என்னை சற்று ஆறுதல் படுத்திவிட்டு.
“சுப்பிரமண்யன்! உங்களை இங்கே வேலை செய்யும்படி, கலெக்டர் ஆர்டர் போட்டிருக்கார். இன்று மடத்துக்கு அஞ்சலி செய்ய பாரதப் பிரதமர் திரு.நரசிம்மராவ் சுமார் 3.30க்கு ஹெலிகாப்டரில் வர்றார். நீங்க தான் வரவேற்று, அஞ்சலிப் பணி முடிக்கும் வரை பார்த்துக்கணும்.

அது மட்டுமல்ல... பிரதமர் அஞ்சலி செலுத்தத் தேவையான சால்வையை நீங்க வாங்கி வரணும்... “மாலைகள்“ ஏற்பாடு என்னுடையது. உடனே புறப்படுங்க ஜவுளிக்கடைக்கு. இதற்கு என் ஜீப்பையும், டிரைவரையும் பயன்படுத்திக்கலாம்.
நீங்க மடத்துக்கு வர்ற தகவலை எனக்குச் சொன்னது உங்க ஆபீஸ் ப்யூன், நேற்றிரவு அவருக்கு உங்க புரோகிரோமை, போனில் சொன்னது நல்லாதாப்போச்சு“ என படபடவென கூறி முடித்தார்.

அடுத்த நிமிடமே ஜீப்பில் விரைந்தேன். நகரத்தில் உள்ள பிரபல ஜவுளிக் கடைக்கு. கடை உரிமையாளர் என் நண்பராக இருந்ததால். அவர் பல விலை உயர்ந்த சால்வைகளை தானே எடுத்துப்போட்டார். அதில் மயிலின் தோகை நிறத்தைப் போன்று விளங்கிய அழகிய. பெரிய சால்வை ஒன்றை தேர்ந்தெடுத்து, உரிய விலை கொடுத்து அதனைப் பெற்றுக் கொண்டேன். பிற்காலத்தில் அந்த விலைப்பட்டியலை வைத்து அந்த தொகையை என்னால் திரும்பப் பெறக்கூடிய வசதி இருந்தது. ஆனால் என் தகப்பனார் போன்ற அந்த தெய்வத்திற்கு என்னால் கடைசி தரிசன காணிக்கையாக்க இதை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பிறக்க, அந்த சால்வை பில்லை மூன்றாகக் கிழித்துப் போட்டேன்.
மடத்துக்குத் திரும்பிய நான், வாங்கிய சால்வையை உடனே திரு.மகாலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தேன். அப்போது என்னைப் பார்த்து விட்ட ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கை அசைவில் கூப்பிட்டார். “மேடை நிர்வாகம் எடுத்துக் கொண்டு தரிசனம் பத்தி பார்த்துக்கோ” என்று ஆணையிட்டார். அதன்படி மஹா பெரியவாளோட கடைசி தரிசனம் பெற வரும் வி.ஐ.பி.க்களை மேலே ஏற்றி, பிறகு அனுப்பும் வேலையை சுறுசுறுப்பாய் செய்ய ஆரம்பித்தேன்.

அப்படி வந்தவர்களில் முதலாவதாக நாட்டியக் கலைஞர் டாக்டர் செல்வி. பத்மாசுப்ரமணியம் அவர்கள், தான் பெரியவாள் சிரசிற்காக, கொண்டு வந்திருந்த காவிநிறத்துணியை சமர்ப் பித்தார்.
பிறகு, ஜெயேந்திர பெரியவாள் எனக்கு இட்ட உத்திர வின்படி, “மகாப் பெரியவாளை குளிப்பாட்டல் நிகழ்ச்சிக்காக மேடையை காலி செய்யச் சொன்னபடி, அனைவரையும் வெளியேற்றி விட்டு, நானும் இறங்குகையில் சுவாமிகள் தடுத்து “நீ இருக்கலாம்” எனச் சொன்னார். நான் என் பேண்ட், சர்ட் நிலையைக் கூறியும், அவர் “பரவாயில்லை” என்று கூறி அனுமதித்து விட்டார். என்னை “பெரியவாளைச் சுற்றி மூன்று வைதீகப் பிராம்மணர்கள் சூழ்ந்திருக்க, நான்காவது மூலைப் பக்கம் நான் துணி பிடித்து, பெரியவாள் ஸ்நான முறைகளை எவரும் (நாங்கள் நால்வரும் தான்) பார்க்காதவாறு நின்று கொண்டிருந்தேன். எப்பேர்ப்பட்ட பாக்கியவான் நான்! உள்ளம் குலுங்கியது.

ஹெலிகாப்டர் பிரச்சனையால், மாலை சுமார் 4.10க்குத்தான் பிரதமர் வந்தார் அஞ்சலிக்கு. அதற்குள் என்னைக் கலெக்டர் திரு. வரப்பிரசாத்ராவ் என்னை அழைத்து, முன்பு நான் வாங்கிவந்த சால்வையை என்னிடம் கொடுத்து ிஅ வரும்போது நீங்கள் அவரிடம் இதை அளித்து பெரியவாளுக்கு அணிவிக்கத் தர வேண்டும் என பணித்தார் அச்சமயம், அருகிலிருந்த பிரதமரின் பாதுகாப்புப் படையினர் என்னை பரிசோதித்துவிட்டு சால்வையையும் செக் செய்து அவர்களில் இருவர் என் பக்கத்துக்கு ஒருவராக நின்று கொண்டனர். அந்த சோகத்திலும் ஒரு அரசு மரியாதையுடன் நின்று கொண்டனர்.

முன்பே சொன்னபடி பாரத பிரதமர் மகா பெரியவாள் இடத்திற்கு வந்தவுடன் அருகில் இருந்த முன்னாள் இந்திய தேர்தல் ஆணையரான சேஷன் அவர்கள் சுமந்து கொண்டிருந்த பெரிய சோஜாமாலையை அவரிடம் அளிக்க நாட்டின் உயர்ந்த அந்த பிரமுகரிடம் நான் பத்திரமாய் வைத்திருந்த அந்த சால்வையை பயபக்தியுடன் சமர்ப்பித்ததும் கண்ணீர் முகத்தில் வெள்ளமாக பெருக நான் பெரிதும் மதிக்கும் காஞ்சி மகானுக்கு பாரத பிரதமர் அந்த மாலையைச் சூட்டி விட்டு அந்த சால்வையையும் அணிவித்து விட்டு குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்து விட்டார்.

அடுத்த களமே ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகள் ஆக்களயிட்டபடி பெரியவாளை போர்த்தப்பட்ட சால்வை, தலையில் அணிவிக்கப்பட்ட காவிநிறத்துணி (செல்வி பத்மா சுப்ரமணியம் சமர்ப்பித்தது) யுடன் கடந்த முதல் நாளிலிருந்து துவங்கி கட்டி முடிக்கப்பட்ட பிருந்தாவனத்திற்கு எடுத்துக் செல்லப்பட்டு அதன் உள்ளே ஜெய ஜெய சங்கர, ஹர ஹர சங்கர என்று பக்தர்கள் கோஷம் எழுப்ப பிரவேசம் செய்விக்கப்பட்டார்கள்

இதில் குறிப்பிடப்பட வேண்டிய விஷயம் என்ன வென்றால் காஞ்சி மகானின் மீது போர்த்தப்பட்ட சால்வை மற்றும் காவிநிறத்துணிக்கு சுப்பிரமணியம் என்ற பெயர் எப்படியோ தொடர்பு கொண்டதாகி விட்டது தான்!

இதுவரை சோர்வு, பசி, தாகம் இன்றி அன்றைய நாள் முழுமையுடன் கூடியிருந்து இப்போது அவற்றுடன் அடக்க முடியாத துக்கமும் என்னைச் சூடி என் வாழ்வின் நினைவும் வந்து என் மனைவி கீதவைத் தேடாத் துவங்கினேன், என்னை அவளே பார்த்து விட்டாள்.

அவள் அப்போது என்னிடம் மிகுந்த துக்கத்துடன் சொவை இந்த வார்த்தைகள் என்னைச் சுற்றி என்றும் வருகிறது:
"பார்த்தீர்களா? உங்களுக்கு மகாப் பெரியவாளின் குளிட பாட்டல் நிகழ்ச்சியிலும், சால்வை அணிவிட்ட தொடர்பாகவும் நடந்தவை அனைத்தும். நீங்கள் இது காறும் அவரிடம் காண வரும் அளப்பரிய பக்திக்கு. அந்த மகானின் அங்கீகாம என்று எடுத்துக்கொள்ளலாமே!" என்று
"ஜெய ஜெய சங்கர!
ஹர ஹர சங்கர!!!"
இக்கட்டுரை இன்று (8.1.2013) மிகப் பெரியவாளை சித்தியான அதே... அதே தேதி. பிற்பகல் 2 மணிக்கு எழுதப்பட்டது எப்படியோ!

ஸ்ரீ காஞ்சி காமாக்ஷிஸ்துத்
காமபீடத்திலோர் காமரூபியாய்
காஞ்சி நகர் தன்னிலோர் ஜோதிகண்டேன்
காயத்ரி மண்டப காமகோடியே
தாயெனவே வந்தென்னை ஆண்டருள்வாய்
காமாக்ஷி காமாக்ஷி - கருணை
கசிந்தொழுகும் காமாக்ஷி!



# திருக்கோயிலும் உற்சவமும்

~ கீதா மணி

ஆலயங்களும், உற்சவங்களும் இணைபிரியாதவை. கோயிலில் குடி கொண்ட எந்த தெய்வமாக இருந்தாலும் அந்த தெய்வத்தின் மீது அதிக பக்தி பூண ஆலய உற்சவங்கள் முக்கிய காரணங்களாக திகழ்கின்றன.

கோயில்களில் தினமும் இரண்டு, அல்லது மூன்று அல்லது நான்கு பூஜைகள், அந்த ஆலய ஆகம முறைகள், பொருளாதார வசதிகள், பரம்பரை ஐதீக வழக்கம் இவற்றின் அடிப்படையில் நிகழ்த்தப்படுகின்றன.

தினந்தோறும் கோயில்களில் செய்யப்படும் பூஜை வழிபாட்டை நித்தியோத்சவம் என்றும், சுக்கிர வாரத்தில் இடம்பெறும் பூஜையை வாரோத்சவம் என்றும், பவுர்ணமி, அமாவாசை, பிரதோஷம் போன்ற ஒவ்வொரு மாதமும் இடம்பெறும் புண்ணிய திதிகளில் வழிபடல் முறையை பட்சோத்சவம் என்றும் ஒவ்வொரு மாத பிரவேசத்தன்றும் புரியப்படும் பூஜையை மாதோத்சவம் என்றும், உத்தராயண, தட்சிணாய புண்ணிய காலங்களில் கொண்டாடி நடத்தப்படும் பூஜையை அயனோத்சவம் என்றும் பெயரிடப்பட்டுள்ளது நம் முன்னோர்களால்.

இவை தவிர கோயில்களில் மகோத்சவம், பிரமோற்சவம், வசந்தோத்சவம் ஆகியவைகளை ஒரு ஆண்டில் 10 அல்லது 12 தினங்கள் அந்தந்த ஆலய ஐதீக முறைப்படி கொண்டாடப்படும். இது கொண்ட பெயர் வருஷோத்சவம் ஆகும்.

பிரம்மோற்சவம் என்பது பெரிய திருவிழாவை குறிப்பது.

பத்து நாட்கள் உற்சவம் உணர்த்துவது ஒரு திருக்கோயில் திருவிழா ஆரம்பமாகி விட்டது என்பதை பக்தர்களுக்கு தெரிவிக்க, ஒரு குறித்த புனித நன்னாளில் அவ்வாலயத்தின் கொடிமரத்தில் முறையான சடங்குகள், பூஜைகள் நிகழ்த்தப்பட்டு பக்தர்கள் முன்னிலையில், அக்கோயிலுக்கென்றே உரிய அடையாள கொடி ஏற்றப்படும்.

கோயிலின் முதல் நாள் விழா தூல நீக்கத்தையும், இரண்டாம் நாள் விழா ஸ்துல சூட்சம நீக்கத்தையும், மூன்றாம் நாள் விழா மூன்று வினைகள், முக்குற்றம், மும்மலம், முக்குணம், முற்பிறப்பு இவற்றை நீக்கும் தன்மையை அறிவிப்பதாகிறது.

அந்தக்கரணம், நான்கையும், நால்வகைத் தோற்றத்தையும் நீக்குவதாக அமைய, ஐந்து அவஸ்தைகள், ஐந்து மலநீக்கத்தை அடையாளம் காட்டுகிறது முறையே நான்காம் தினம், ஐந்தாம் தின விழாக்கள்.

ஆறாம் நாள் திருவிழா மனிதனின் உட் பகையான காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்ற ஆறு தன்மைகளோடு, ஆறு அத்வா, ஆறு கண்ம மலங்கள், பதமுக்தி ஆறு எனும் ஆறு வகைகளை சுட்டுகிறது.

ஏழுவகைப் பிறப்புகள், காலம், நியதி , கலை,வித்தை, இராகம், புருடன், மாயை என்கிற பொய், அயர்வு, மோகம், சூனியம், மாச்சர்யம், பயமென்கிற மாயையின் மலம் ஆகிய தன்மைகளை அகற்றுவதை உணர்த்தும் வகையில் அமைவதே ஏழாம் தினவிழா.

எட்டாம் நாள் விழா மற்றும் ஒன்பதாம் நாள் விழா உணர்த்துவது சிவபிரானின் என் குணம் பற்றி விளக்க, பத்தாம் தினவிழா அந்த மற்ற சிவானந்தக் கடலில் மூழ்கியிருக்கும் நிலையை குறிப்பதாகிறது.

கடவுள் நடத்தும் ஐந் தொழிலான உண்டாக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோபவம், அனுக்கிரகம் என்பவற்றை பக்தர்களுக்கு உணர்த்தும் முறையாகவே ஆலய உற்சவங்கள் அமைகின்றன.

## வாகன தத்துவங்கள்

### 1. விருட்ச வாகனம்

விருச்ச (மரம்) வாகனத்தில் முதல்நாள் பவனி வருவார், இறைவன். இது கொண்ட பெயர் விருகஷத்தடி சேவை என்பது. மாயையை வித்தாகவும், அம்மரத்தின் கிளைகள் தத்துவங்களாகவும், இலைகள் உயிரினங்களாக விளங்குவதை இந்த வாகனம் எடுத்துக்காட்டும்.



### 2. சூரிய பிரபை, சந்திரப் பிரபை வாகனம்

ஆலய தெய்வ உற்சவரை காலைப்பொழுதில் சூரிய பிரபை வாகனத்திலும், மாலையில் சந்திர பிரபை வாகனத்தில் எழுந்தருளச் செய்யும் திருக்காட்சி காணத் தகுந்தது. இக் கோலம் கொண்ட பெயர் " ஸ்திதி" கோலம் ஆகும்.



கண்ணால் காண்பானாகிய மனித ஆன்மாவுக்கு " காட்டுவான்" தான் என்பதை உணர்த்த, மனிதனின் காணும் கண்ணுக்கு கதிரொளியாய் நிற்பதை உணர்த்தும் தத்துவம் வாகனங்களில் அடக்கம்.

உலகிற்கு தனது கிரணங்களால் ஒளி தருவதோடு மக்கள் அபிட்சம் பெற இறைவன் இந்த சூரிய, சந்திரர்கள் மூலம் கருணை புரிவதையும் இந்த வாகனங்கள் எடுத்துக் கூறும் தத்துவம் உள்ளது.

### 3. அதிகார நந்தி வாகனம்

அதிகார நந்தி வாகனம் சுட்டிக்காட்டுவது சங்காரக் கோலமாகிய அழித்தல் தொழிலை ஆகும். இந்த நந்தியானவர் மான், மழு, சதுர்புஜம், முக்கண் இவற்றோடு சாரூப்பிய பதவியையும் அடைந்தவர். ஆன்மாக்களுள் சிறந்தவரான அதிகாரநந்தி விஞ்ஞானகலர் வரிசையில் உள்ளவர். அவர் கயிலையில், சிவ சன்னிதானத்தில் மேல் அதிகாரம் செலுத்தும் பணியாளர் கூட! அதனால் அதிகார நந்தி காரணப்பெயரானது!



### 4. பஞ்ச பூத வாகனம்

ஆன்மாக்களுக்கு கர்மத்திற்கு அனுகூலமான மரண அவஸ்தையை விதிக்கிற சம்ஹாரத்தை பஞ்ச பூத வாகனம் எடுத்துக்காட்டுகிறது.



### 5. நாக வாகனம்

பட மெடுத்து ஆடும் இயல்பைக் கொண்ட நல்ல பாம்பாகிய நாகம் தன்னுள் ஆலகால விஷத்தை போன்ற நச்சுப் பொருளையும், ஜொலிக்கும் மாணிக்க ரத்தினத்தையும் கொண்ட

சிறப்புக்குரியது.

இதுபோன்றே தெய்வமும் தன்னை எப்போதும் மறைத்துக் கொண்டு, தன் கருணையை பக்தர்களுக்கு, வேண்டும்போது வெளிப்படுத்தும் அற்புத சக்தி படைத்தது. இப்படி அருள்வதை " திரோபவம்" எனக்கூறப்படும். தவிர நாக வாகனம் குண்டலினி சக்தி, அழு முனை நாடி இவற்றோடும் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாகனத்தில் இறை தரிசனம் பெறும் எவரும் மெய்சிலிர்ப்பு பெறுவர்.



## 6. ரிஷப வாகனம்

ஆன்மாக்கள் அத்தனைக்கும் பதி இறைவன் ஒருவனே என்பதையும், அந்தத் தர்ம தேவதையையே இடமாகக் கொண்டவன் என்ற தத்துவத்தை விளக்கும் ரிஷப வாகனம்!

சமம், விசாரம், மகிழ்ச்சி, சாது சங்கம் என்பவைகளை தனது 4 கால்களாக கொண்ட அற வடிவமே இவ்வாகனம்.

இத்தகைய சிறப்புகள் கொண்ட ரிஷபம் போன்ற ஆன்மாவிடம், பதியாகிய இறைவன் இடமாகக் கொண்டு அமர்வான் என்பதை இது குறிக்கும்.

அனுக்கிரக கோலத்தின் சின்னம்தான் ரிஷப வாகனம்.

## 7. யானை வாகனம்

வயக் கிரம சிருஷ்டி கோலமாக திகழ்கிறது யானை வாகனம். ஒடுங்கும் முறை எனப்படும் அனைத்து உலக பொருளும், ஒரே பிண்ட வடிவான யானையின் உடல் போலவே பருமனாக கிடந்து தெய்வத்திடம் ஒடுங்கும்.

யானையின் நான்கு கால்கள் பிண்ட கார உற்சவ ஜடத்துவம், சுவாச சூட்சமம், வாஜி ஜீவத்வம், பிராணாயாமம் ஆகியவற்றை எடுத்துக்காட்டும்.

யானையின் மீது காணப்படும் அம்பாரி முதலியன வெளித்தோற்ற அகண்டாகாரமாகிறது. அதாவது உற்பவ, சூட்சும ஜீவ மாயா ஞானங்கள் ஆத்மா ஞானத்திலும், ஈசுவர சைதன்யம் பிரம்ம சைதன்யத்திலும் லயிக்கின்றன என்பதை இது குறிப்பதாகும்.

## 8. கைலாச பர்வத வாகனம்

ராவணன் தன்னுடைய உடம்பின் மேல் வைத்து, கைலாச பர்வதத்தில் சிவபிரான் எழுந்தருளியுள்ள நிலையில் அமைந்ததே கைலாச பர்வத வாகனமாகிறது.



இராவணன் கொண்ட ஜீவான்மா ஆணவ பலம் முதிர்ச்சி கொண்டது. அத்தகைய பலத்தால் அவன் கைலாச மலையை தூக்கி எடுக்க அப்போது பரமேசுவரன் கால் விரலால் ஊன்ற, அந்த இலங்கைவேந்தன் அலறி, அழுது துடித்து, தன்னுடைய கை நரம்புகள் கொண்டு வீணை ஒன்றை உருவாக்கி, சாமகானத்தை இசைத்தான். அக்கானத்தின் பரம ரசிகரான ஈசுவரன் சந்தோஷப்பட்டு, இராவணனுக்கு அருள்பாலித்தார். இது "ஸ்திதி" என்கிற காப்பாற்று நிலையைக் குறிப்பது.

இறைவனுக்கு துன்பந் தந்தவன் கூட தனது ஆணவ குணத்திற்கு மெய் வருந்தி அதனை நீக்கி வழிபட அத்தகையவனுக்கு கூட தெய்வத்தின் அருள் கிட்டும் என்பதை உணர்த்துவதே கைலாச பர்வத வாகனத்தத்துவம்.

## 9. குதிரை வாகனம்

ஸம்ஹார கோலத்தின் அடையாளமாக விளங்கும் குதிரை வாகனம்.

குதிரை கொண்ட 4 கால்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்பதையும், அதன்



இரண்டு காதுகள் கிரியை, ஞானம் என்பதையும், இரண்டு கண்கள் பரஞானம், அபர ஞானம் என்பதையும், முகம் பிபிதியையும், அதனுடைய வால் நிஷேதத்தையும், ஆவரணங்கள் என்கிற ஆகமத்தையும், பூண்ட கடிவாளம் பிரணவத்தையும், சேணமானது உபநிடதங்களையும் கொண்ட குதிரை வேகமாக, அதிலே இறை வைபவம் நிகழ்த்தபடுவதையே குதிரை வாகன தத்துவம் எனப்படுகிறது.

## 10. பிட்சாடனத் திருக்கோல வாகனம்

சிவபெருமான் பிட்சாடனத் திருக்கோலத்தில் வாகன பவானி வருதலுக்கு இந்த சம்பவமே பின்னணியாகும்.

ஒருசமயம் தாருகாவன மகரிஷிகளும், அவர்களுடைய பத்தினிமார்களும் ஆணவமலம் கொண்டு இறை சக்தியை மறந்து தாங்கள் சுதந்திரர்கள் என்ற எண்ணத்தை பெற்றுவிட்டனர். அவர்கள் பரதந்திரர்கள்களே என்பதை உணர்த்த இறைவன் பிட்சாடன வடிவெடுத்து விட்டார். அவருடைய அழகில் மெய் மறந்து போன நிலை வந்துவிட்டது, ரிஷி பத்தினிகளுக்கு! அதுமட்டுமின்றி இறைவன் விஷ்ணு மோகினியாகவும் மாறி காட்சி தரவே, தாருகாவன மகரிஷிகள் அனைவரும், மோகினியாள் அழகில் லயித்துப் போயினர். பிறகு கடவுள் அவர்கள்பால் காட்டிய அனுகிரகத்தால் தாங்கள் எல்லோருமே சுதந்திரர்கள் அல்ல பர தந்திரர்களே என்று உணர்ந்து அவர்கள் மன்னிப்பு கோரி வணங்கி, இறையிடம் ஆசி பெற்றனர். இதன் விளைவே பிட்சாடனர் திருக்கோலமாக வடிவம்.

இப்படிப் பல வாகனங்கள் சுமார் 30க்கும் மேலே இறைவனுக்கு உண்டு. ஒவ்வொரு அந்த வாகனமும், வெவ்வேறு தத்துவங்களை உள்ளடக்கியவை எனப்படுகிறது.

இறை தரிசனத்தை பக்தர்கள் எந்த வாகனாதிகளில் தரிசித்தாலும் கிடைக்கும் புண்ணியங்கள் எண்ணிக்கையற்றது என புராண நூல்கள் எடுத்து இயம்புகின்றன.

# பழனிக்கு செல்லாத பாம்பன் சுவாமிகள்

~ ரா. பன்னீர் செல்வம்

தருமமிகு சென்னை என வள்ளலார் சுவாமிகளால் போற்றப்பட்ட சென்னை மாநகரை சுற்றிலும் நிறைய மகான்கள் தங்கள் திருப்பாதங்களைப் பதித்து, மகத்துவம் புரிந்திருக்கிறார்கள். அவர்களில் வெகு சிலர் சென்னை மண்ணிலேயே ஜீவசமாதியும் அடைந்திருக்கிறார்கள்.

அவர்களில் ஒருவர் தான் இளைய வேல் முருகப் பெருமானின் அருளாசிகள் நிரம்பப் பெற்ற மகான், பாம்பன் சுவாமிகள்!

ராமேஸ்வரத்தையடுத்துள்ள பாம்பன் என்னும் இடத்தில் பிறந்ததால் பாம்பன் சுவாமிகள் என்னும் பெயர் இவரை தழுவிக்கொண்டது.
பாம்பனில் இனிமையாக இல்லறம் நடத்தி வந்த சாத்தப்ப பிள்ளைக்கும் செங்கமலத்தம்மையாருக்கும் இறைவன் தந்த அருளால் 1848 ஆம் ஆண்டு ஓர் ஆண் குழந்தை உதித்தது. தங்கள் குலம் விளங்க, அக்குழந்தைக்கு அப்பாவு என பெயர் சூட்டி மகிழ்ந்தனர், பெற்றோர். இளவயது முதலே இவருக்கு முருகன் மீது முகிழ்த்த பக்தியின் காரணமாக அந்த கந்தப் பெருமானையே தன் சொந்தம் என எண்ணி அனுதினமும் அன்புடன் தொழுது வந்தார்.

இளவயது முதல் சுமார் 20 வயது வரை இல்லற இன்பம் கண்டு வந்த இவருக்கு துறவறம் பூண வேண்டும் என்ற ஆவல் மேலிட்டது! அதற்கு முழு முதற் காரணமாக- தூண்டுகோலாக இருந்தவர் அருணகிரிநாதர் என்றே சொல்லலாம்.

முருகன் துதிகளை அருணகிரிநாதரின் சந்தச் செய்யுள்களில் சுவைத்த இவருக்கு அப்படியே தானும் முருகனைப் போற்றி பாடல்கள் புனைய வேண்டும் என்னும் எண்ணம் தோன்றிக் கொண்டே இருந்தது.

இன்னும் சரியாக சொல்லவேண்டும் என்றால் அருணகிரிநாதரை தன் ஞானகுருவாக மனதில் ஏற்றுக் கொண்டார், சுவாமிகள்.

இவருக்கு அப்பாவு என்று இருந்த பெயரை மாற்றி குமரகுருதாசர் என்னும் பெயரைச் சூட்டியவர் சேஷகிரி ராயர் என்ற பெரியவர்.



தான் எண்ணியது போலவே, இளமைக்காலந்தொட்டே முருகனின் மீது பாடல்கள் புனைந்து பாடத்தொடங்கினார் சுவாமிகள்! அருணகிரிநாதருக்கு “முத்தைத்தரு” என முதல் அடி கொடுத்த ஞான வள்ளலான முருகப்பெருமான், நம் சுவாமிகளுக்கு “கங்கையை சடையில் பிரிந்து” என்னும் முதலடியை அருளினார்.

இவர் பக்தியுடன் முருகனைப் பாடிய பாடல்கள் ஏராளம் என்பதாலும் அருணகிரியாரின் தாக்கம் அவற்றில் இருந்ததாலும் இவரது பாடல்களின் வழியே இவர் இரண்டாம் அருணகிரி என்று பக்தி உலகத்தாரால் போற்றிப் புகழப்படுவதுண்டு!

ஒருநாள் நம் குமரகுருபர தாசர், தனது நெருங்கிய நண்பரான அங்கமுத்து பிள்ளையிடம் “நான் துறவு பூண பழனிக்கு செல்லப்போகிறேன்“ என்று கூற, அவரோ, “இதற்கு முருகபெருமான்

உனக்கு உத்தரவு கொடுத்தாரா? “எனக்கேட்க, சற்றும் யோசிக்காமல் நம் சுவாமிகள்,” முருகன் என்னை பழனிக்கு வரும்படி உத்தரவு கொடுத்தார்!” என்று துணிந்து ஒரு பொய்யை சொல்லி விட்டார்!


இவர் பொய் சொன்ன அன்று மாலையே, அமிர்தமதிப் பாடலை இவர் பாடுகின்ற பொழுது முருகப்பெருமான் இவர் முன் தோன்றினார். அருளாசி வழங்குவார் என எதிர்பார்த்த இவருக்கு ஏமாற்றம் மட்டுமல்ல; எச்சரிக்கையும் முருகனிடமிருந்து வெளிப்பட்டது.

ஆம்! சுட்டு விரலைக் காட்டி, பல்லைக் கடித்து எச்சரித்த முருகப்பெருமானின் கோபம் இவருக்கு நடுக்கத்தை உண்டாக்கிவிட்டது! உடனே, பணிவுடன் முருகனை சரணடைந்த சுவாமிகள், ” இறைவா! பொன், பொருள் என்னும் அழிகின்ற செல்வங்கள் வேண்டி நான் பொய்ச் சொல் கூறவில்லை. துறவு பூணும் நோக்கத்தோடு பழனியம்பதியை அடையத்தான் பொய்யுரைத்தேன்; பொறுத்தருள வேண்டும்”, என வேண்டி நின்றார்.

அதற்கு முருகப்பெருமான், “இனி, நானாக வா” என அழைக்கும் வரை பழனிக்கு வரவே கூடாது! “என்று கண்டிப்புடன் கூற,” வரவே மாட்டேன்; எனத் தன் மனதுக்குள்ளேயே சங்கல்பம் செய்தார் சுவாமிகள். அடுத்த கணமே முருகன் மறைந்து விட்டார்.

காரணம் இறை மீது கொண்ட பற்றே யானாலும் பொய்யுரைத்தல் பெரும்பாவம் என்பதனை அந்த முருகனே வந்து புகட்டிய பாடம் இது என சுவாமிகள் எண்ணினார்.

நமது பாம்பன் சுவாமிகள் இருந்த இறுதிக்காலம் வரை பழனிக்கு வரும்படி முருகனிடமிருந்து அழைப்பு வராத காரணத்தினால், நமது சுவாமிகள் தன் ஆயுட்காலம் முழுவதுமே பழனியம்பதிக்கு போகாமல் இருந்துவிட்டார்!




சுவாமிகள், முருகனிடம் சொன்னதில் உறுதியாய் நின்று பழனிக்குப் “போகாதிருந்தாரா?, அல்லது முருகனின் கருணையே இவரை கட்டுப்படுத்தியதா என்பது அந்த கந்தவேளுக்கே வெளிச்சம்! வாழுங்காலத்தில் கந்தன் உறைந்திருக்கும் எத்தனையோ தலங்களில் கால்பதித்த போதிலும் பழனி சென்று முருகனை வழங்கியதில்லை, நம் சுவாமிகள்!

சுவாமிகளை, இறைவன் எச்சரித்த நாள் 1891 ம் வருடம் ஆடி மாத வெள்ளிக்கிழமை என்பதனால், சுவாமியின் பக்தர்கள் அந்த நாளில் சத்தியம் தவறா நாளாக இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர் என்பது சிறப்புச் செய்தி!

இவர், எந்த ஆலயம் சென்றாலும் அங்கே உள்ள எந்த தெய்வத்தை வணங்கினாலும் அதில் முருகப் பெருமானையே கண்டார். சுவாமிகள்! இதைத்தான் ஒரு தெய்வ வழிபாடு என்றனர், ஆன்றோர்!

முருகப்பெருமானை துதிக்கும் எண்ணற்ற பாடல்களை இவர் எழுதி அவையெல்லாம் புத்தக வடிவில் இன்று நம் கைகளில் தவழ்கின்றன. ஆனாலும் “சண்முக கவசம்“ படிப்போரின் இன்னல்களை களையும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்பதனை மறக்கவே முடியாது! இதனை பலரும் மாமருந்து என்று மந்திர மகிமை கொண்ட வேத நூல் எனவும் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர். அதேபோல எல்லா பக்தர்களுக்குமே முருகனுக்கு பஞ்சாமிர்தம் கொண்டு அபிஷேகம் செய்யும் அளவுக்கு வசதி வாய்ப்புகள் இருப்பதில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு அந்த குறையை நீக்கும் விதமாக “பரிபூரண பஞ்சாமிர்த வண்ணம்“ என்ற நூலை எழுதினார். இதனை பாராயணம் செய்கின்றபோது முருகனுக்கு பஞ்சாமிர்த அபிஷேகம் செய்த பயன் கிடைக்கும் என்பது ஆன்மீக உண்மையாகும்.

1923 ம் ஆண்டு டிசம்பர் 27ம் நாள் சென்னை, தம்புச்செட்டி தெருவில் குதிரைவண்டி ஒன்று இவர் மீது மோதிய விபத்தில் சுவாமிகளின் இடது காலில் முறிவு ஏற்பட்டு, அரசு மருத்துவமனையில் இவரை அனுமதித்து சிகிச்சையளித்தார்கள். அப்போது சுவாமிகளின் வயது 73. வயதாகிவிட்ட காரணத்தால் எலும்புகள் கூடி, சரியாவது சிரமம் என்றும் மருத்துவர்கள் கைவிரித்து விட்டனர்.

ஆனால், நமது சுவாமிகள், முருகனின் மீது பாரத்தை போட்டுவிட்டு, "சண்முக கவசத்தை பாராயணம் செய்தபடி இருந்தார். சரியாக, 11 வது நாளில் அந்த அதிசயம் நிகழ்ந்தது! ஆம்! முருகப்பெருமான் நம் சுவாமிகளுக்கு காட்சி கொடுத்தார்!

எப்படி?...

தான் படுத்திருந்த ஜன்னல் வழியே வானத்தில் இரண்டு மயில்கள் தோகை விரித்து ஆடுவதையும் அருகிலே முருகப்பெருமான், குழந்தை வடிவில் சிரித்த படி இருந்ததையும் கண்டு, நெஞ்சம் நெகிழ உருகினார்.

அதே நேரத்தில் " இன்னும் 15 நாட்களில் குணமடைந்து நலம் பெறுவாய்", என்னும் அசரீரி ஒலித்தது. அதன்படியே, அடுத்த 15 நாட்களில் குணமடைந்தார், சுவாமிகள்!

முருகப் பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு 6666 பாடல்களை சுவாமிகள் இயற்றியுள்ளார். இது தவிர, 32 வியாசங்களையும் அருளினார். இவையனைத்தையும் ஏதோ முருகனின் பக்தி பாடல்கள் என்னும் நிலையைக் கடந்து சக்திமிக்க மந்திரப்பாடல்களாக, பக்தர்களின் இடர்களைப் போக்கி இன்னருள் புரிந்து வருகின்றன என்பதே உண்மை.

சுமார் 79 ஆண்டுகள் இப்பூவுலகில் உலவி, இறைப் பணி செய்த நமது பாம்பன் சுவாமிகள் என்னும் குமரகுருபரர் என்னும் இந்த உன்னத மகான், 30.5.1929 ஆம் ஆண்டு, தன் திரு உரு மறைத்து முருகனிடம் ஐக்கியமானார்.

சென்னை, திருவான்மியூரில் சுவாமிகள் மகாசமாதி அடைந்த அந்த இடம் இன்றும் பாம்பன் சுவாமிகளின் ஜீவ சமாதி என்று எண்ணற்ற பக்தர்களால் வணங்கப்பட்டு வருகிறது.

ஜீவசமாதி அடைந்தாலும் அந்த மகானின் ஆன்ம சக்தி இப்பொழுதும் உயிர்ப்புடன் இருந்து நாடிவரும் பக்தர்களுக்கு நல்லருள் புரிந்து வருகின்றது!

## முன் செய்த வினை தீர்க்கும்

# முண்டகக்கண்ணி அம்மன்

~ திருவாரூர் சு.சேகர்.

தமிழகத்தில் தாய்மையை தெய்வமாக வணங்குவது தொன்று தொட்டு வழக்கத்தில் இருந்து வருகிறது. அகிலம் காக்கும் அன்னை பராசக்தி ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு திருநாமத்தில் அருளாட்சி புரிகிறாள்.

மயிலையில் அம்மன் என்றதும் மறுவினாடி முண்டகக்கண்ணி அம்மன் தான் நம் மனக்கண் முன் வந்து நிற்பார். மயிலாப்பூர்த் திருத்தலத்தில் மகா மாரியம்மனாக- முண்டகக்கண்ணி அம்மன் என்ற பெயரில் குடி கொண்டு தாய்மையின் வடிவமாக அருள் பாலித்து வருகிறாள்.

மயிலாப்பூருக்கு மட்டுமல்ல சென்னை மாநகருக்கே இன்று அருள்புரியும் ஆதி சக்தியாக, நலம் தரும் நாயகியாக முண்டகக்கண்ணியம்மன் திகழ்ந்து கொண்டிருக்கிறாள்.

ரேணுகாதேவியின் அவதாரங்களுள் ஒன்றாகவும், சப்த கன்னிகைகளுள் ஒருவராகவும் கருதப்படும் முண்டகக்கண்ணி அம்மன் இந்தத் தலத்தில் சுயம்புவாக எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்...

### கோயிலின் ஸ்தல வரலாறு:

சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பு இப்போது முண்டகக்கண்ணி அம்மன் ஆலயம் இருக்கும் பகுதி ஒரு குளமாக இருந்தது. அந்த குளக்கரையில் பல நூறு ஆண்டு வயதுடைய மிகப்பெரிய ஆலமரம் இருந்தது. ஒரு நாள் அந்த ஆலமரத்தடியில் அந்த ஊர் பகுதி மக்கள் அமர்ந்து இருந்தபோது அம்மன்



தன்னை சுயம்புவாக வெளிப்படுத்தி காட்சி தந்தார் என்கிறது இத்தலத்தின் வரலாறு. சுயம்புவான அருவுருவ தோற்றத்தின் மேல்பகுதி தாமரை மொட்டு வடிவத்திலேயே தன்னை அம்மன் சுயம்புவாக வெளிப்படுத்திக் கொண்டதால் தாமரை என்ற தமிழ்ச் சொல்லுக்குரிய முண்டகம் என்பதை குறிப்பிடும் வகையில் அம்மனுக்கு "முண்டகக் கண்ணி" என்று பெயர் ஏற்பட்டதாகத் தலபுராணம் கூறுகிறது.

இத்தலத்தில், அன்னையின் கருவறை ஓர் எளிய தென்னங் கீற்றுக் கொட்டகைதான். இங்கு, கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் அம்மனை , "விரிந்த பெரிய விழிகளைக் கொண்டவள்" என்ற பொருளிலும் "முண்டகக் கண்ணியம்மன்" என்றப் பெயரில் இங்குள்ள அன்னை அழைக்கப்படுகிறாள்.

## தென்னங்கீற்றுக் கொட்டகைதான் இன்றும் கருவறை:

அம்மன் சிலை பின்புறம் இருந்த பெரிய புற்றில் இருந்து நாகப்பாம்பு வந்து வழிப்பட்டதால், அம்பாளுக்கு கூரை அமைக்கப்பட்டதாக வழிவழியாக சொல்லப்பட்டு வருகிறது. நாகம் வழிப்பட்ட இந்த அம்மன் வெப்பத்தை தான் தாங்கி, மக்களுக்கு குளிர்ச்சியை அளிக்க கூரையின் கீழ் தங்கி இருக்கிறாள்.

முண்டகக்கண்ணி அம்மன் கோயில் வாசல் ராஜ கோபுரத்துடன் இருந்தாலும் அன்னை குடிகொண்டுள்ள கருவறை இன்றும் எளிய தென்னங்கீற்றுக் கொட்டகைதான் அமைந்துள்ளது. பல முறை அம்மனுக்கு கருவறை அமைக்க முயன்ற போதெல்லாம் தடைபட்டு வந்துள்ளது. ஒருமுறை தீவிர முயற்சி மேற்கொண்டு கருவறைக்குக் கட்டடம் கட்டும் போது அம்மனின் கோபம் அப்பகுதியில் தீ விபத்தாக மாறியது.

'தனக்கு தென்னங்கீற்றால் அமைந்த கூரை மட்டுமே விருப்பம்' என பக்தர்களின் கனவில் அம்மன் சொன்னதாக கூறப்படுகிறது. எனவே, அன்னைக்கு தென்னங்கூரையே கருவறை விமானமாக இன்றுவரை இருந்து வருகிறது. மேலும் தல வரலாறும் தனது மக்களை வெம்மையில் இருந்து காக்கவே, அன்னை இவ்வாறு குடிகொண்டிருப்பதாக தெரிவிக்கிறது.

## திருக்கோயில் அமைப்பு:

எளிமையும், அழகும், அருளும் நிறைந்த இந்த கோயில், மயிலாப்பூரின் நடுவே அமைந்துள்ளது. ஆலய முகப்பில் மூன்று நிலை கொண்ட ராஜகோபுரம் கம்பீரமாக உள்ளது. கருவறைக்கு முன்பாக, இருபுறமும் துவாரபாலகிகள் வீற்றிருக்கின்றனர்.

சுயம்புவாக அம்மன் தலையில் நாக கிரீடம் அணிந்து கொண்டு நடுவில் சூல வடிவம் கொண்டு இரண்டு கரங்களுடன் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகின்றாள். அம்மனுக்கு வலதுபுற எதிரில் மிகப்பெரிய அரச மரமும், அதனடியில் நாகக் கன்னிகளும் உள்ளன. அன்னையின் பின்புறம் தல மரமான ஆலம் விழுதுகள் இல்லாத அபூர்வ மரமான கல்லால மரமும், புற்றுடன் மூன்றடி உயர கல் நாகமும் அமைந்துள்ளன. இக்கோயிலில் பின்புறம் உள்ள புற்றில் வாழும் நாகம், நாள்தோறும் இரவில் அன்னையை வணங்கி வழிபட்டு செல்வதாக ஐதீகம்.

முண்டகக்கண்ணி அம்மன் மூலவர் அமைந்துள்ள சன்னதியை அடுத்து, இடதுபுறம் உற்சவர் தனிகோயிலில் எழுந்தருளி உள்ளார். அதன் எதிரே பிரமாண்ட வேப்ப மரமும் இருக்கிறது.

உற்சவர் சன்னிதியின் இடதுபுறம் பிரம்மி, மகேசுவரி, வைஷ்ணவி, வராகி, கௌமாரி, இந்திராணி, சாமுண்டி ஆகிய சப்தகன்னியர்கள் லிங்கவடிவில் காட்சி தருகின்றனர். இவர்களுக்கு இருபுறத்திலும் ஜமத்கினி முனிவர் மற்றும் பரசுராமர் சுதை வடிவில் உள்ளனர். இங்கு நர்த்தன விநாயகர், முருகன், ஐயப்பன், அனுமன், ராமலிங்க அடிகள், தட்சிணாமூர்த்தி, காசி விஸ்வநாதர், அன்னபூரணி ஆகியோருடன் தனித்தனி சந்நிதிகள் உள்ளன.

## முண்டகக்கண்ணி அம்மன் தரிசனம்:

அம்மனை தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் வசதிக்காக மகா மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த மகாமண்டபத்தில் வரிசையில் நின்று முண்டகக்கண்ணி அம்மனை கண்குளிர தரிசனம் செய்யலாம். அம்மனுக்கு காலையில் தொடங்கி, நண்பகல் வரை தொடர்ந்து அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. மதியத்துக்கு மேல் அபிஷேகம் கிடையாது. அபிஷேகங்கள் முடிந்த பின் அம்மனின் திருமுகத்தில் பெரிய மஞ்சள் உருண்டையைத் தட்டையாக்கிப் பதிய வைத்து, கண் மலர், நாசி, அதரம் வைத்து, வேப்பிலை பாவாடை கட்டி, பூமாலை சார்த்தி அர்ச்சனை செய்து தீபாராதனை காட்டுகின்றனர். மாலை வேளையில் வெள்ளியாலான அல்லது தங்கத்தாலான திருமுகம் வைத்து, நாகாபரணம் பூட்டி, கிரீடம் சார்த்தி, ஆபரணங்கள் அணிவித்து, திருக்கரங்கள் சேர்த்து அன்னையை அலங்கரிப்பார்கள். காலையில் சென்றால் அபிஷேகத்தையும் மாலையில் சென்றால் அலங்காரத்தையும் தரிசிப்பது கண்கொள்ளா காட்சியாகும்.

## தரிசன பலன்கள்:

இக்கோயிலில் அம்மனை நாகம் வழிபடுவதாலும், நாக தோஷம் மற்றும் மாங்கல்ய தோஷம் உள்ளவர்களுக்கு இந்த அம்மனை வழிபட்டால் தோஷம் நிவர்த்தியாகும், மற்றும் அம்மை நோய், கண் நோய் உள்ளவர்கள் இந்த அம்மனை வழிபட்டால் விரைவில் குணமடைவார்கள். இங்கு வந்து அம்மனை தரிசிப்பதால் தீராத நோய் நிவர்த்தியாகும். பில்லி சூன்யம், கிரக தோஷம் நீங்கும். திருமணத் தடை அகலும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது. முன் செய்த வினையால் ஏற்பட்ட துன்பங்களை
தீர்த்து வைக்கின்றார். மேலும், கல்வி, மகப்பேறு, வீடு வாகன வசதிகளுக்கு வரம் தரும் அன்னையாகவும் திகழ்கின்றார். சாந்த சொரூபியான இந்த அன்னை நாம் கேட்பதை எல்லாம் தருவதால் அவளிடம் மனம் உருக வேண்டினால் அவள் நம்மை நிச்சயம் கைவிட மாட்டார்.

## நேர்த்திக்கடன்கள்:

நாகதோஷம் இருப்பவர்கள், முண்டகக் கண்ணி அம்மனை வழிபட்டு, நாககன்னி சிலையை பிரதிஷ்டை செய்வதாக வேண்டிக்கொள்கிறார்கள். அதன்பிறகு, 48 நாள்களுக்கு நீரிலேயே நாககன்னியை வைத்திருந்து, பின் அதனை ஆலயத்தின் முகப்பில் இருக்கும் மரத்தடியில் பிரதிஷ்டை செய்து, அதற்கு அபிஷேகமும் செய்து வழிபடுகிறார்கள். அதேபோல ஆடி மாதம் அம்மனுக்கு மஞ்சள், சந்தனம், குங்குமம் காப்பு மற்றும் அன்னாபிஷேகம் செய்வதும் இங்கு விசேஷம். நோயற்ற உடல் வேண்டி அங்கபிரதட்சணம் செய்தும், வேப்பிலை பாவாடை அணிந்தும் பக்தர்கள் அம்மனை தரிசனம் செய்கின்றனர். பிரார்த்தனை நிறைவேறியதும் அம்மனுக்கு அபிஷேகம், சர்க்கரை பொங்கல், கண்மலர், கை, கால் உருவங்களை செலுத்தி பக்தர்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்றனர். அனைத்து செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் கோயில், திருவிழாக்கோலம் பூண்டுவிடும். ஆடி மாதம் முண்டகக் கண்ணியம்மனுக்கு பொங்கல் வைத்து வழிபடுவது மேலும் சிறப்பு. இக்கோவிலில் அம்பாளுக்கு பூஜித்த வேப்பிலை, மஞ்சள், எலுமிச்சை மற்றும் தீர்த்தமே பிரதான பிரசாதமாக கொடுக்கப்படுகிறது.

## திருவிழாக்கள்:

இங்கு சித்திரைப் புத்தாண்டு பிறப்பு அன்று நூற்றி எட்டு விளக்கு பூஜை, சித்ரா பௌர்ணமி அன்று ஆயிரத்து எட்டு பால்குட அபிஷேகம் சிறப்பானது. இந்த கோயிலில் ஆடி மாத திருவிழா மொத்தம் பத்து வாரங்களுக்கு நடைபெறும். பத்து வாரங்களிலும் செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கூழ் வார்த்தலும் நடைபெறும். ஆடி கடைசி வெள்ளிக்கிழமையில் பூச்சொரிதல் உற்சவம் இக்கோயிலில் மிகவும் சிறப்புடன் நடைபெறுகின்றது. இங்கு நவராத்திரி விழாவும் விமர்சையாக கொண்டாடப்படுகிறது.

## கோயில் திறந்திருக்கும் நேரம்:

இந்தக் கோவில் தினமும் காலை 6 மணி முதல் பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் திறந்திருக்கும். விழா நாட்களில் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்திருக்கும்.

## கோயிலுக்கு செல்லும் வழி:

இந்த கோயில் சென்னை மயிலாப்பூரில், கபாலீசுவரர் திருக்கோயிலிருந்து சுமார் பத்து நிமிட நடை தூரத்தில் உள்ளது. மெட்ரோ ரயிலில் முண்டகக்கண்ணியம்மன் ஆலய நிறுத்தத்தில் இறங்கி கோயிலை அடையலாம். சென்னையின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மயிலாப்பூருக்கு பஸ் வசதி உண்டு.

## ஸ்ரீ முண்டகக் கண்ணி அம்மன் புகழ்மாலை:

முண்டகக் கண்ணி உன்னை
மும்முறை வலம் வந்தால்
முன் செய்த வினை யாவும் தீருமே-
நம் முன் நிற்கும் கவலைகள் பயந்தோடுமே. (முண்ட).
அன்பர்களும் கொண்டாடும் அகிலாண்ட நாயகியே
தொண்டருக்கு துணையிருக்கும் சுகவரநாயகியே. (முண்ட).
தண்டளபதி மாலையணி மாதவனின் தங்கையே
வண்டிரை கொண்ட மதுமலர்க் கண்ணகியே
சண்டிகை சரஸ்வதியும் லக்ஷ்மியும் நீயே - உனை
அண்டிடும் அன்பருக்கு அருள்புரியும் அன்னையே. (முண்ட).
செல்வமெல்லாம் தருவாள் - தேவி
யானைகள் புடை சூழ அன்ன நடை பயில்வாள்
அழகின் உயர் எல்லை அவள் அருள்வரின் எது இல்லை
வானமும் வையமும் வந்திடும் வந்திடும்
வாய் மலர் மலர்ந்து விட்டால்
கானமும் கவிதையும் கலைகளும் பொங்கிடும்
கடைக்கண் மலர் திறந்து விட்டால். (முண்ட).
கூனதும் நிமிர்ந்து கோன் என உயர்ந்திடும்
மானவள் நினைத்து விட்டால்
தானமும் மானமும் தழைத்திடும் நிலைத்திடும்
தாயவள் சிரித்து விட்டால் .....
மகிழ்ச்சியை தருபவள் தனலக்ஷ்மி
அயர்ச்சியை களைபவள் ஜெயலக்ஷ்மி
வளர்ச்சியை வளர்ப்பவள் வரலக்ஷ்மி
வெற்றி விளைப்பவள் வீரலக்ஷ்மி
வான் புகழ் வளர்ப்பவள் கஜலக்ஷ்மி
பற்றி நிற்பவள் விஜயலக்ஷ்மி
சக்தி கொடுப்பவள் தான்யலக்ஷ்மி
சாந்தி தருபவள் சந்தானலக்ஷ்மி.
ஸ்ரீ முண்டகக்கண்ணி அம்மன் சரணம்.

ஓம் சக்தி.. பராசக்தி...



## ரிஷப வாகனம்

பரமேஸ்வரரின் சிறந்த “பக்தராகத் திகழ்ந்த நந்திகேசுவரரே, அவரைச் சுமக்கும் பாக்கியம் பெற்ற நந்தி வாகனம் ஆகிறார். வெள்ளைக் காளை என்னும் ரிஷபரான நந்தியின் வாகனம் பெரும்பாலும் தன் வாயைத் திறந்தபடி தன் பற்களை நாக்கால் வருடியவாறே உருவாக்கப்படும். அனைத்து சிவாலயங்களில் சிவன் சன்னதி முன்னே அவரை பார்த்தவாறே அமர்ந்தோ அல்லது நின்ற நிலையில் காட்சி தருவார்.

விதிவிலக்காக ஒரே ஒரு ஆலயத்தில் மட்டும் ஈஸ்வரனுக்கு வாலை காட்டிய நிலையில் காட்சி தருவார்.

## மயில்வாகனம்

பொதுவாக முருகப் பெருமான் என்றாலே அனைவரின் நினைவில் பறப்பது மயிலாகத்தான் இருக்கும். இந்த மயிலைப்பற்றி மகான் அருணகிரிநாதர் மயில் விருத்தம் என்ற செய்யுளில் மயில் கொண்ட அழகு, அதன் ஒய்யாரம், சிறப்பழகு, இறக்கையழகு என பலவற்றை புகழ்ந்து பாடி வர்ணித்துள்ளார்.

அனைத்து சிவாலயங்களில் உள்ள இந்த மயில் வாகனத்தின் கூர்மையுள்ள மூக்கிலும், கால்களுக்கு அடியிலும் படமெடுத்த நிலை கூடிய நல்ல பாம்பு அமைக்கப்பட்டு, இருக்கும். “மயிலேறி விளையாடும் முருகா” என பக்தர்களும், புலவர்களும் பாடி மகிழ்ந்து உள்ளார்கள்.



ஆன்மீக சிறுகதை

# மாறிய தலையெழுத்து

~ ரா. பன்னீர் செல்வம்



பொற்செல்வி அந்த மணற்பரப்பில் மெல்ல நடந்து கொண்டிருந்தாள். மூன்று வருடங்களாக மழை பொய்த்ததால் ஆடு, மாடு குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் வெறும் மணலாய் காட்சியளித்த அந்த ஆற்றில் "இந்த ஆற்றில் திடீரென வெள்ளம் வந்து கரை புரண்டால் எப்படி இருக்கும்" என நினைத்தபடியே காலார நடந்தவள் ஏதோ சத்தம் கேட்டு திரும்பி பார்த்தாள்.

அவளது ஈரக்குலையே நடுங்கியது! அதோ கூப்பிடு தூரத்தில், ஆளுயரத்தில் தண்ணீர் பெருக்கெடுத்து ஆர்ப்பரித்தப்படி வேகமாக வந்து கொண்டிருந்தது. இரு கரைகளையும் தொட்டபடி வந்த அந்த வெள்ளத்தில் மாட்டினால் காணாமல் போய்விடுவோம் என்ற அச்சம் மேலிட ஓடத் தொடங்கினாள் பொற்செல்வி!

உயிர்ப் பயம் அவளை வேகமாய் ஓடத் தூண்ட, பொங்கி வரும் ஆற்று வெள்ளமும் அவளை விட வேகமாய் ஓடி வந்தது! எப்படியாவது தப்பி விட வேண்டும் என்ற படபடப்பில் வலதுபக்க கரையை நோக்கி ஓடினாள்! இயற்கையின் சீற்றம் சாதாரணமானதா? கடுகி வந்த வெள்ளம் பொர்செல்வியை ஒரே தூக்காய் தூக்கியது! நல்லவேளையாய் கரையை ஒட்டிய படியே அவளை புரட்டிச்சென்றது. எங்காவது ஒரு செடி, கொடியாவது கிடைக்குமா? அதைப் பிடித்து உயிர் தப்பி விடலாம் என்ற எண்ணத்தில் கைகளை வீசி தேடியபடியே வெள்ளத்தோடு போய்க்கொண்டிருந்தாள் பொற்செல்வி!

வெள்ளத்தில் மூழ்கி மேல் எழும்புகின்ற பொற்செல்வியின் நீர்த்திரையிட்ட கண்களில் சற்று தூரத்தில், கரையில் வரிசையாக மரங்கள் இருப்பது தெரிந்தது!

"கடவுளே! எப்படியாவது ஒரு மரத்தின் வேரை பிடித்தாவது கரை ஏறி உயிர் பிழைக்க வேண்டும்", எப்படியாவது என்னை காப்பாற்று!" மனதிற்குள் தனக்குத் தெரிந்த கடவுளை எல்லாம் வேண்டிக் கொண்டாள்!

மரங்களுக்கு அருகே வந்து விட்டாள்! ஆனால், வெள்ளம் வேறு பக்கம் இழுக்கிறதே என்ற கவலை! கண்களை இறுக மூடிக்கொண்டு, கைகளை மட்டும் நீட்டியபடி, " கடவுளே! என்னைக் காப்பாத்த மாட்டியா?" வாய்விட்டு வேண்டினாலும் வார்த்தை வரவில்லை.

வெள்ளம் அதிகமாகி அவளை மூழ்கச் செய்ய, என் விதி அவ்வளவு தானா?" என நினைத்தபடி மூழ்கடிக்கப்பட்டாள்!

மூச்சு முட்டியது!

அந்த நேரத்தில்....

பரிதவிப்பில் நீட்டிய கைகளை வேறு ஒரு கை பிடித்தது போல் இருந்தது! பொற்செல்வி சுயநினைவை இழந்தாள்!

"ஐயோ", என அலறியபடி படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தாள் பொற்செல்வி! கண்ட கனவினால் முகத்தில் பீதி நிறைந்திருந்தது! உள்ளுக்குள் இருந்த வேதனை வியர்வையாய் வெளிப்பட்டு அவளுடைய ஆடைகளை நனைத்திருந்தது!

தான் உயிரோடுதான் இருக்கிறோம் என்ற நினைவு வரவே அவளுக்கு நீண்ட நேரம் பிடித்தது! அதற்குள் இவளுடைய " ஐயோ" என்ற அலறல் சத்தம் கேட்டு அத்தை அன்னம்மாளும் வேலைக்காரி விஜயாவும் கலவரத்தோடு ஓடி வந்தார்கள்.

அன்னம்மாள், "என்ன ஆச்சு செல்வி? ஏன் இப்படி கத்தின!?" என கேட்டபடியே ஒரு துண்டை எடுத்து பொற்செல்வியின் முகத்து வியர்வையைத் துடைத்தாள்!

அதிர்ச்சியிலிருந்து மீளாதவளாய், "ஆத்துல.... வெள்ளம்... நான்... சாகற அளவுக்கு".... என தடுமாற்றத்துடன் பொற்செல்வி பிதற்றினாள்!

"கனவு தாம்மா! கவலப்படாத! உனக்கு ஒன்னும் ஆகாது! இரு... இந்தா... தண்ணியக் குடி!" என அன்னம்மாள் கொடுத்த தண்ணீரைக் குடித்தவள் மெல்ல எழுந்து சுவரில் மாட்டியிருந்த பெற்றோரின் படத்தை பார்த்து கண் கலங்கிய படி கும்பிட்டாள்.

செவ்வேலூர்.... ஜமீன் வீடே இதைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தது!

ஜமீன்தார் ரங்க தாசும் அவரது மனைவி புனிதவதியும் இறந்து 18 வருடங்கள் ஆகிவிட்டது! அப்போது இரண்டு வயது குழந்தையாக இருந்த பொற்செல்வி இளைய ராணியாய் அறிவிக்கப்பட்டு தாய்வழி அத்தையான அன்னம்மாளின் துணையோடு வளர்ந்து வந்தாள்!

ஏகப்பட்ட நில புலன்களும் கணக்கில்லாத செல்வங்களும் நிறைந்த இந்த செவ்வேலூர் ஜமீனை சொந்தமாக்கிக் கொள்ள பல ஜமீன்தார்கள் ஆசைப்பட்டு பொற்செல்வியை மணக்க பெண் கேட்டு வந்தனர்.

அவர்களின் நோக்கம் சரியில்லை என்பதை அறிந்து அத்தை அன்னம்மாள் தான் துணிச்சலோடு அவர்களை தடுத்து, தன் நம்பிக்கைக்குரிய வேலையாட்களைக் கொண்டு, பொற்செல்வியை பாதுகாத்து, அவளை நேசிக்கும் ஒரு நல்லவனுக்கு மணம் முடிக்க வேண்டும் என அக்கறையோடு காத்திருந்தாள்.

தான் கண்ட கனவை அத்தையிடம் சொன்னாள் பொற்செல்வி! "இது என்ன அபசகுனம்?" என நினைத்த அன்னம்மாள், துர்க்கை அம்மன் கோவிலில் பல காலமாக இருக்கும் தேவி உபாசகர், மணிசேகர சுவாமியிடம் பொற்செல்வியை அழைத்துச் சென்றாள்!

சுவாமிகளிடம் தான் கண்ட கனவை விளக்கமாகச் சொன்னாள், பொற்செல்வி!

கண்களை மூடி சிறிது நேரம் தியானம் செய்த சுவாமிகள், "உன் கையைப் பிடிச்சு காப்பாத்தினது யாரு? ஆணா? , பெண்ணா?"... எனக் கேட்க,

"தெரியல சாமி", என்றாள் பொற்செல்வி!

"அந்த கைய பார்த்தியா?", - சுவாமி

சற்று யோசித்த பொற்செல்வி, "நான் சரியா பாக்கலன்னாலும் ஏதோ நினைவுல இருக்கு! அந்த கையில ஒரு சிவப்பு கலர் கயிறு கட்டி இருந்தது சாமி!" - பொற்செல்வி.

"அந்தக் கையில மச்சம் ஒன்னும் இருந்திருக்கும்; அதுவும் வேல் வடிவ மச்சம்! நல்லா யோசிச்சுப்பாரு", - சுவாமிகள்.

பொர் செல்விக்கு குழப்பம்! தலை சுற்றியது!

கண்களை மூடினாள்! "சுவாமி... அந்தக் கையில கட்டியிருந்த சிகப்பு கயிறுக்கு மேல வேல் மாதிரி ஒரு மச்சம்... இருக்கறது தெரிஞ்சது!" என தடுமாற்றத்துடன் கூறினாள்!

"அம்மா!... இந்த பொண்ணுக்கு வரவிருக்கிற பெரிய ஆபத்திலிருந்து இவள காப்பாத்தி, கடைசிவர துணையாய் இருக்க போறவன் அந்த வேல் மச்சம் உள்ளவன் தான்!

இவளுடைய வாழ்க்கை மாறும்! சங்கடம் தீரும்! தக்க துணை சேரும்! விதியே மாறும்! போய் வா!" என்றார் சுவாமிகள்!

பொற்செல்வியை அழைத்துக் கொண்டு புறப்பட்டாள், அன்னம்மாள்!..

அன்றிலிருந்து எந்த இளைஞன் எதிரே வந்தாலும் அவனது கையில் பார்ப்பதையே வழக்கமாக கொண்டாள் அன்னம்மாள்! பொற்செல்வி இதையெல்லாம் நம்புவதா? வேண்டாமா? என்ற குழப்பத்திலேயே நாட்களை நகர்த்தினாள்.

வளவன் பாடி நீதிமன்றம்!

“குமரவேல், குமரவேல், குமரவேல்” என்ற குரல் அழைப்பைக் கேட்டு, குற்றவாளிக்கூண்டில் ஏறி நின்றான் குமரவேல் என்னும் அந்த முரட்டு வாலிபன்.
நீதிபதி கேட்டார்! “கோவிலுக்கு வந்த குணசீலனை நீங்க தாக்கியது உண்மைதானா!?”
“ஆமாங்கய்யா... நான்தான் அடிச்சேன்!”- குமரவேல்!

ஏதோ எழுதிய நீதிபதி, தன் தீர்ப்பை வாசிக்கத் தொடங்கினார், “குணசீலனை தாக்கியது தான்தான் என்று குற்றம் சாட்டப்பட்ட குமரவேல் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டதனால் குற்றவாளிக்கு 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து அந்த தொகையை குணசீலனிடம் கொடுக்கும் படி உத்தரவிடுகிறேன். அபராத தொகையை குற்றவாளி செலுத்தத் தவறினால் 3 மாதம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பளிக்கிறேன்.” எனக் கூற....

குறுக்கிட்ட குமரவேல், “ஐயா... எனக்கு கொடுத்த தண்டனையை நான் ஏத்துக்கறேன், ஆனா புனிதமான கோவிலுக்குள்ள... சாமி கும்பிட வந்த ஒரு வயசு பொண்ணு கிட்ட வம்பு பண்ணி, கைய புடிச்சு இழுத்த அந்த ஆளுக்கு தண்டனையே இல்லையா?” எனக் கேட்டான்.
வாதியின் வக்கீல் எழுந்து, “அதை தட்டிக்கேட்க சட்டம் இருக்கிறது! நீங்க போலீஸ்ல சொல்லாம, சட்டத்த கையில எடுத்தது தப்பு!” எனக் காட்டமுடன் கூற,
“நல்லா இருக்குது நியாயம்” என முனகியபடி கூண்டிலிருந்து கீழே இறங்கியவன், ”பத்தாயிரத்துக்கு நான் எங்க போவேன்?! மூணு மாசம் கவர்மெண்ட் சாப்பாடுதான்! என்றபடி போலீஸுடன் நடக்க...
ஒருவர் ஓடிவந்து, “தம்பி... எம் மகளுக்காக நீங்க தட்டிக் கேட்கப் போய் தானே உங்களுக்கு இந்த நிலம! நீங்க ஜெயிலுக்கெல்லாம் போக வேணாம். நான் அபராத தொகைய கட்டிட்டேன்”, என்றார்.
“பரவாயில்ல... பசையுள்ள பார்ட்டி தான் போல!... நன்றிங்கய்யா!” என்றவன் கோர்ட்டை விட்டு வெளியே வந்தான்.
செண்பகப் பாளையம், முருகன் கோவில்!

பூசாரி வீரபத்ரன், கோபத்துடன் பேசிக் கொண்டிருந்தார். ”ஒரு மனுஷனுக்கு இவ்வளவு கோபம் ஆகாதுடா! எது நடந்தாலும் ஏன்னு கேட்க, உனக்கு என்ன விட்டா நாதியில்ல! நான் சொல்றதையும் கேட்காம அடிக்கப் பாய்ஞ்சுடற! இதெல்லாம் சரியில்ல!”

இப்படி பேசியவாறே, முருகப்பெருமானின் உடைகளை மடித்து வைத்துக் கொண்டிருந்தார்!
தலை குனிந்தபடி நின்றிருந்த குமரவேல், “பின்ன என்ன தாத்தா... நமக்கு பயப்பட வேணா; இந்த கடவுளுக்கு கூட பயப்படாம கோயிலுக்குள்ள வந்து அநியாயம் பண்றாங்க! பார்த்துக்கிட்டு சும்மா இருக்கணுமா? நீ வேணும்னா முருகன கேட்டுப் பாரு; நான் செஞ்சது நியாயந்தான்!” என்றான்.

“டேய்... நீ செஞ்சது நியாயந்தான்! அது எனக்கும் தெரியும்; இங்க தெய்வமா நிக்கிற முருகனுக்கும் தெரியும்! ஆனா, சட்டத்துக்கு தெரியாதேடா!... அஞ்சு வயசுல அனாதையா இந்த கோவிலுக்கு வந்த? இருபது வருஷமா உன்ன வளர்த்துட்டேன். எனக்குப் பிறகு நீ.... எப்படி..?..” என தழுதழுக்க...
“அதையே சொல்லாத தாத்தா!.. நீதான் எனக்கு பூஜை பண்ண கத்துக்கொடுத்திருக்கியே! உன்ன மாதிரியே நானும் முருகனுக்கு பூஜை பண்ணிக்கிட்டு காலத்தத் தள்ளிடுவேன்”, என உற்சாகமானான், குமரவேல்!
“ஏண்டா, உனக்குன்னு ஒரு குடும்பம் வேணாமா?”
“அட, நமக்கெதுக்கு தாத்தா அதெல்லாம்!? இந்தக் கோயிலே வீடு; முருகந்தான் சொந்தம்! இதுதான் நம்ம தலையெழுத்து! இரு தாத்தா... தண்ணி கொண்டு வந்திடுறேன்”, என குடத்துடன் சென்றான், குமரவேல்.

பரபரப்பாக அறைக்குள் நுழைந்த அன்னம்மாள், ” என்ன செல்வி கிளம்பிட்டியா?... செவ்வாய்க்கிழமையில விளக்கு போட சொன்னாங்க இல்ல.... போயிட்டு வந்துடலாம், வா!”... என்றாள்.
“இதோ, கிளம்பிட்டேன் அத்த!.. ஆமா, எதுக்காக இந்த விளக்கு போடற சடங்கு”, என புரியாதவளாய் பொற்செல்வி கேட்டாள்.
“எல்லாம்... உனக்கு கல்யாணம் ஆகணும்... தகுந்த பாதுகாப்புக்கு ஆள் வரணும்”.... ஜமீன் பொறுப்பையெல்லாம் நான் உங்ககிட்ட ஒப்படைச்சிட்டு “ராமா, கிருஷ்ணா” ன்னு நிம்மதியா உட்காரணும்; எல்லாம் நல்லபடியா நடக்கணும்... சரி சரி... வா... கிளம்பு...” அத்தை அவசரப்படுத்த....

வில் வண்டி புறப்பட்டது.

இன்னொரு வண்டியில் சில வேலையாட்கள்!

வண்டிகள் கோவிலை வந்தடைய, அன்னம்மாவுடன் பொற்செல்வி உள்ளே நுழைந்தாள்.

வேலைக்காரப் பெண்மணி, ஒவ்வொன்றாய் எடுத்துக் கொடுக்க, பொற்செல்வி அகல் விளக்கில் நெய் ஊற்றி, திரியிட்டு தீபம் ஏற்றி வணங்கினாள்.

"விஜயா அந்த அர்ச்சனைத்தட்ட கொடு", என அன்னம்மாள் கேட்க, அவள் கொடுத்தாள். முருகன் சன்னதிக்கு வந்த அன்னம்மாளும் செல்வியும் பூசாரி இல்லாதது கண்டு சுற்றுமுற்றும் பார்க்க...

"என்னம்மா... அர்ச்சனையா?.." என்று குரல் கொடுத்தபடி ஓடிவந்தான் குமரவேல்!

"அர்ச்சனைத் தட்ட கொடுங்க; என்றான்.

அன்னம்மாள், " இங்க... பூசாரி... ஒரு பெரியவர் இருப்பாரே தம்பி... அவரு இல்லையா?.." என்றாள்.

"என் தாத்தா தாம்மா".... ரெண்டு நாளா உடம்புக்கு முடியல. நாந்தான் சும்மா படுத்திருக்க சொன்னேன். கொடுங்க, நான் அர்ச்சன பண்ணி தரேன்; எனத் தட்டை வாங்க கையை நீட்டினான், தட்டை கொடுத்த அன்னம்மாள், அவன் கையில் கட்டியிருந்த சிவப்புக் கயிறையும் அதற்கு மேல் இருந்த வேல் வடிவம்சத்தையும் பார்த்து முகம் மலர்ந்தாள்.

தட்டைக் கொடுக்காமல் பிடித்தபடியே, பொற்செல்வியின் பக்கம் திரும்பி, அவன் கையைப் பார்க்கும்படி சைகை செய்தாள்.

பொற்செல்வியும் அந்த வேல் மச்சத்தை ஆச்சரியமாகப் பார்த்தாள்! அப்படியே சிலை வடிவில் இருந்த முருகனை பார்த்தாள்.

முருகன் சிரிப்பது போலவே காட்சி தந்தான். சிலையில் சார்த்தியிருந்த வேல் பள பளத்தது!

இறைவன், யாருடைய விதியை எப்படி மாற்றுவான் என்று யார் அறிவார்?...

இங்கே குமரவேலின் விதி, முருகப்பெருமானால் மாறியது!

## மூஞ்சூறு வாகனம்



முதற்கடவுளான விநாயகரின் வாகனமே மூஞ்சூறு வாகனம். இவ் வாகனத்தில் இடம்பெறும் மூஞ்சூறு கம்பீரமாய் நின்ற தோற்றமும், விறைத்த வாலுடனும் காணப்படும்.
அனைத்து சிவாலயங்களிலும் இவ்வாகனம் இடம் பெற்றுள்ளது.

## ஆடு வாகனம்



எப்பொழுதும் மயில் வாகனதாரியாக காணப்படும் முருகனுக்கு ஆரம்பகாலத்தில் ஆண் ஆடு தான் வாகனமாக இருந்திருக்கிறது. முருகாலயங்களில் சூரசம்ஹார விழா நிகழ்ச்சியின் போது ஆட்டின் மீது ஆரோகணித்து பவனிவரும் முருகன் சூரன் சம்ஹாரமானவுடன், ஆடு உருவம் அழிந்து மயில் ஆகிவிடுகிறது.
ஆடு வாகனமும், நின்றநிலை ஆடாகவே அமைந்திருக்கும்.

# அமர்நீதி நாயனார்

~ ரா.பன்னீர் செல்வம்

நாயன்மார் வரிசையில் உள்ள அனைத்து சிவனடியார்களுமே அந்த ஆதி சிவனின் அன்பை முழுமையாகப் பெற்றவர்கள் என்றால் அது மிகையாகாது! அவர்கள் சிவன் மீது வைத்த பக்தியை விட சிவன் அடியார்கள் மீது கொண்ட அளப்பரிய பக்தியால் அந்த சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டவர்கள்.

தன்னையே தியாகம் செய்து, சிவனருள் பெற்ற, சிவநெறி காத்த நாயன்மார் வரிசையில் நாம் காணவிருப்பது, அமர்நீதி நாயனார் அவர்களைப்பற்றி!
கும்பகோணத்திற்கு அருகிலுள்ள பழையாறை என்னும் பண்பு மிகக் ஊரில் தரித்தவர் தான், அமர்நீதி என போற்றப்படும் இந்த அறநெறிக் செல்வர்!

உலகமெல்லாம் சைவ நெறி தழைத்து, மேலோங்கி விளங்கிட, இவரைப் போன்ற அடியவர்கள் செய்த அர்ப்பணிப்பு என்பது அந்த ஆண்டவனையே இந்த பூமிக்கு வர வைத்தது என்றால் இதை விட இவர்கள் செய்த தவப்பயன் என்னவாக இருக்க முடியும்?..

பழையாறை ஒரு சிறு நகரம், அங்கே அமர்நீதி அவர்களின் மாளிகை தனிப்பெரும் சிறப்புடன் கவனிக்கப்பட்ட ஒன்றாய் இருந்தது! எந்த நேரமும் திருமுறைகளை ஓதியபடி அடியார்களின் அணிவகுப்பால் அந்த மாளிகையே திருநீற்று மணம் கமழ்ந்து சிறப்புடன் விளங்கியது!

ஆண்டவனின் திருநாமம் சொல்லியபடி, ஆண்டிக் கோலத்தில் வருவோரை கூட அரச கவுரவம் தந்து ஆதரித்து வந்தார் அமர்நீதியார்!

தன்னிடமுள்ள பொன், பொருள், செல்வம் அனைத்துமே சிவன் சொத்து; அதனை சிவனடியார்களுக்கு செலவிடுவதன் மூலம் அந்த சொத்தினை சிவனுக்கே அர்ப்பணித்ததாய் திருப்தியுடன் அமர்நீதியார், இங்கு வருகின்ற சிவனடியார்களை உபசரித்து வந்தார்!

சிவ பூஜை செய்வதைக் காட்டிலும் சிவனடியாருக்கு பாத பூஜை செய்வதே அந்தப் பரமனை குளிரவைக்கும் என்ற எண்ணம் கொண்டு எண்ணற்ற சிவத்தொண்டினை செய்து வந்தார் அமர்நீதியார்.

அவருக்கு வாய்த்த மனையாளும் மகேசனின் கருணையைப் பெற்றுய்ய வேண்டும் எனும் ஆவலில் அமர்நீதியாரின் அருஞ்செயல்களுக்கு உறுதுணையாக இருந்தார். அந்த ஈசனின் கருணையால் இவர்களுக்கு வந்துதித்த ஒரே செல்வனும் விபரம் தெரியாத சிறு வயதிலேயே சிவசின்னங்கள் தரித்து, பதிகங்களைப் பாடி, ஆண்டவனை ஆராதனை செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தான்.

இப்படி, அமர்நீதியாரின் என் குடும்பமே ஆண்டவன் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள, இவர்களது செல்வமெல்லாம் சைவத் திருப்பணிக்கும் சிவனடியார்களுக்குமே பயன்பட்டு வந்தது!

இந்தக் குடும்பத்தினரை இறைவன் கண்டுகொள்ளாமல் இருப்பானா? தன் கருணையும் அருளும் இந்த சிவ குடும்பத்திற்கு எப்போதும் உண்டு என்பதனை உலகுக்கு உணர்த்த எண்ணம் கொண்ட சிவபெருமான் தன் நாடகத்தை துவக்கினார்!

அடியார்களை ஆட்கொள்ள நல்லதொரு நாள் பார்த்தார்! தனக்கே உரிய தோற்றத்தினை நீத்தார்!

ஒரு சண்ணியாசியாய், சிவனடியாராய்.... அதிலும் கௌரபீண தாரியாய் வடிவெடுத்தார்! கோவணத்தை மட்டுமே ஆடையாகக் கொண்டு, பழையாறை என்னும் அந்த சிறு நகரில், ஓர் சிவனடியாராய் தோன்றினார்!

அந்தக் கோவணாண்டி, உடலெங்கும்



திருநீற்றுப் பட்டை... கழுத்திலே ருத்ராட்சம்... தன் ஒரு கையில் உள்ள கொம்பில் கோவணத் துணி சகிதமாக அமர்நீதியாரின் மாளிகை நோக்கி நடந்தார்.

வழியில் அவரைப் பார்த்தோரெல்லாம் "இவர் இமயமலையிலிருந்து வருபவரோ?..." கோவணம் மட்டுமே உடையாய்க் கொண்டதால் இவர் தான் உண்மையிலேயே முற்றும் துறந்தவரோ?... முக்கண்ணனின் அருளை முழுமையாகப் பெற்றிருப்பாரோ?" என பலவாறு பேசி, பிரமிப்புடன் பார்த்தனர்!

அமர்நீதியாரின் மாளிகை வாசலில் அமைதியாக வந்து நின்றார், அந்த கௌபீனதாரி! அவரைப் பார்த்த அமர்நீதியாரின் பணியாளர்கள், தங்களையறியாமலேயே தண்டனிட்டு வணங்கினர். இரு பணியாளர்கள் ஓடோடிச் சென்று, உள்ளே இருந்த அமர்நீதியாரிடம்,

“சிவநேயச்செல்வரே! நம் மாளிகை வாசலில் இதுவரை நாம் கண்டிராத கோலத்தில் செங்கதிர் பொங்கிய தோ என்னும் திருக்கோலத்தில் கோவணம் மட்டுமே உடையாய்க் கொண்டு ஒரு சன்னியாசி வந்திருக்கிறார்”, என பணிவுடன் சொல்ல....

அகத்திலே உதித்த ஆயிரம் தாமரைகளின் மலர்ச்சியை முகத்திலே காட்டி, ஆவலோடு தாவி, மாளிகை வாசலுக்கு ஓடி வந்தார், அமர்நீதியார்! கௌபீனதாரியைக் கண்டார்! மனதில் இதுவரை ஏற்படாத இனம் புரியாத அமைதி! உடலில் சிலிர்ப்பு! நெடிய மின்னலைக் கண்டவரைப் போல எண்சான் கிடையாக விழுந்து வணங்கினார்!

“சுவாமி! என் மாளிகை தங்களின் திருப்பாதம் பட பாக்கியம் செய்திருக்க வேண்டும்! வாருங்கள்..... என் பிறவிப் பயன் பெற ஆசி வழங்குங்கள்”, என வரவேற்க.... அந்த சிவனடியார் மெல்லப் புன்னகை செய்து வலது காலை எடுத்து வைக்க, அதற்குள் பணிப்பெண்கள் மலர் தூவ, மகிழ்வோடு நடந்து வந்தவரை... உள்ளே அமரச் செய்தார்!

அமர்நீதியாரின் மனைவியும் மகனும் விழுந்து வணங்க, இருவரையும் அன்போடு பார்த்து ஆசி வழங்கினார்.

பாதபூஜை செய்ய ஏற்பாடுகள் ஆயிற்று!

திடீரென எழுந்தார் அந்த அடியவர்! பதறி விட்டனர் அமர்நீதியாரும் மற்ற அனைவரும், அமர்நீதியார், "சுவாமி... அடியேனின் உபசரிப்பில் ஏதேனும் குறையிருப்பின் பொருத்தருள வேண்டும். தங்கள் எண்ணத்திற்கு மாறாக ஏதேனும் நடந்து இருப்பின் மன்னித்தருள வேண்டும், சுவாமி!" என்றவரின் முகம் வருத்தத்தில் வாடியது!

மாறாக, அந்த அடியவரின் முகத்தில் புன்னகை அரும்பியது! அன்பரே! உபசரிப்பில் ஒன்றும் குறைவில்லை; ஏதேனும் இருந்தாலும் அந்த ஈசனையே சேரும்; தங்களின் சேவையில் ஆனந்தமே! ஆனால், யாம் ஆற்றுக்கு சென்று நீராடிவிட்டு வந்த பின்பு தங்களின் இணையற்ற சேவையை ஏற்கிறேன்!

“என எழுந்தவர், ஏதோ யோசித்தவர் போல் நிற்க, அவரிடம் பணிவுடன் நெருங்கிய அமர்நீதியார்,” சுவாமி... “என அழைக்க, தன் கையில் இருந்த இரண்டு கோவணத் கூண்டுகளில் ஒன்றை பூப்போல அவிழ்த்தார்!”

அமர்நீதியாரே! இந்தக் கோவணத் துண்டினை தங்களிடம் ஒப்படைக்கிறேன்! நான் நீராடி திரும்பும் வரை இதை வைத்திருங்கள்! பின்பு பெற்றுக் கொள்கிறேன் என அந்த கோவணத் துண்டை அமர்நீதியாரிடம் கொடுத்தபோது, அடியவரின் முகத்தில் ஓர் அதிசய புன்னகை அரும்பியது! கிடுகிடுவென நடந்து மாளிகையை விட்டு வெளியேறி, நதியை நோக்கி நடை போடத் தொடங்கினார்.

அவர் போவதைப் பார்த்தபடியே புல்லரித்து நின்று அமர்நீதியார், தன் கையிலிருந்த கோவணத் துண்டை பக்தியுடன் பார்த்து, கண்களில் ஒற்றிக் கொண்டு அதைக் கொண்டு போய் பூஜையறையில் வைத்தார்!

அந்தக்கோவணதாரியை கண்டதிலிருந்து தன் மனதில் உண்டான பிரமிப்பு நீங்காத நிலையில், தன் மனைவி, சுற்றத்தார் மற்றும் பணியாளர்களுடன் அந்த அடியவரை கண்ட நொடி முதல் தனக்கு ஏற்பட்ட இனம்புரியாத இன்பத்தினை எடுத்துரைத்தார்!

மற்றவர்களும் “ அந்த மகான், நாம் இதுவரை கண்டிராத தேஜஸான திருமேனி..., கருணை பொங்கும் விழிகள்... கௌபீணம் மட்டுமே உடுத்தியிருந்தாலும் பார்ப்போரின் கவனத்தை மாற்றி கைகூப்ப வைக்கும் கனிவு! அவரே ஒரு தெய்வப்பிறவி தான்”, என தங்கள் எண்ணத்தில் உதித்தவற்றை நெகிழ்ச்சியோடு சொல்லி சிலாகித்தனர்!

நீண்ட நேரம் கடந்து....

வாசலிலேயே நின்று அந்த அடியவரின் வரவை எதிர் நோக்கிக் காத்திருந்த அமர்நீதியாரின் கண்கள் விரிந்தன; முகம் மலர்ந்தது!

அந்த மகான் வருகின்றார்!

வந்துவிட்டார்!

முன்போலவே உபசரிப்பு! அமர வைக்கப்பட்டார்!

பாத பூஜை செய்தார்கள் அமர்நீதியாரும்அவரது மனைவியும்! புன்னகை மாறாமல் சிவனடியார், ”சிவநேயச் செல்வரே! தங்களுடைய பக்தியும் சேவையும் எம்மை மகிழச் செய்கின்றன!... உம் சேவைகள் தொடரும் முன், நாம் தங்களிடம் ஒப்படைத்து சென்ற எமது கோவணத் துண்டினை கொண்டு வாருங்கள்; மற்றவை பின்னர்!” என அமர்நீதியிடம் கூற,

“தங்கள் சித்தம் சுவாமி”, என்றவர் உள்ளே தன் பூஜையறை நோக்கிச் சென்றார். அந்தக் கோவணத் துண்டினை எடுக்க, தான் அதை வைத்த இடத்தில் பார்க்க, அந்தத் துண்டினை காணாது ஒரு கணம் திகைத்தவர், பரபரப்புடன் அங்குமிங்கும் தேடினார்! ஒரு பயனும் இல்லை! மனைவியை அழைத்துக் கேட்க, அவரும் “நான் உள்ளேயே வரவில்லையே”, என பதிலுரைக்க சங்கடத்தில் தவித்த அமர்நீதியார் அடியவருக்கு என்ன பதில் சொல்வேன் என கலக்கத்துடன் நிற்க அவரது மனைவியோ கௌபீனம் காணாமல் போய்விட்டால் என்ன பல புதிய கௌபீனத்துண்டுகளைக் கொடுத்து விடலாம், கவலையை விடுங்கள் என தைரியம் கூறினாள்.

இருவரும் சற்று தயக்கத்துடனே வந்து அடியவரின் முன்னால் நிற்க அவர் எங்கே என் கௌபீனத்துண்டு? “என அமைதியாகக் கேட்டார்!

அமர்நீதியார் தடுமாற்றத்தோடு,” சுவாமி... தங்களுக்கென்று நிறைய கௌபீனத்துண்டுகள் புதியதாக எடுத்து வைத்திருக்கிறேன்...” இடைமறித்த அடியவர், “நான் தங்களிடம் கொடுத்த கௌபீனத்துணி எங்கே?” அவரது கேள்வியில் கண்டிப்பு கலந்திருந்ததைக் கண்டு நடுங்கிய அமர்நீதியார், “சுவாமி”, என சங்கடத்தில் கைகளைப் பிசைந்து நின்றார்.

மீண்டும் அடியவர், சற்று அதட்டலாக, “எனக்கு என் கௌபீணத் துணி தான் வேண்டும்“, எங்கே அது?” எனக் கேட்டதும் அமர்நீதி, “சுவாமி! வைத்த இடத்தில் அதைக் காணவில்லை! இறைவன் என்னை சோதிக்கிறான் என்றே நினைக்கிறேன்! தயவு கூர்ந்து என்னை மன்னித்து பொறுத்தருளங்கள்”, எனப் பணிந்தார்.

சுற்றி நின்ற அனைவரும் என்ன நடக்குமோ, அந்த அடியவர் என்ன சொல்வாரோ? என பதைப்புடன் பார்த்தபடி நின்றனர்.

சட்டென எழுந்த அடியவர், ”அமர்நீதி, முற்றும் துறந்தவன் நான் என்றாலும் உயிரினும் மேலான மானத்தைக் காக்கும் வகையில் எனக்கிருக்கும் கவசமே அந்த கௌபீணத் துண்டுத்தான்! என் சிவத் தொண்டில் மகிழ்ந்து, கயிலை மலையில் உள்ள ரிஷிகள் எனக்கு வழங்கிய கௌபீனம் அது! நீ ஒரு நல்ல சிவத்தொண்டன் என எண்ணி உன்னிடம் அதை கொடுத்துச் சென்றேன்! இப்படி செய்து விட்டாயே!”..... எனக் கடிந்து கொண்டார்!

அமர்நீதியின் கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்தது! " இறைவா!"... என்ன செய்வேன்?!" எனக் கதறினார்.

அடியவர் கபடச்சிரிப்புடன், "சரி.... உன் சிவபக்தி எப்படிப்பட்டது என எனக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது! இனி என்ன செய்வது? எல்லாம் என் தலையெழுத்து! உன் தலையெழுத்து என்னை இப்படி பரிதவிக்கச் செய்துவிட்டது! காணாமல் போன என் கௌபீணத்திற்கு மாற்றாக".... அவர் முடிக்கும் முன் அமர்நீதியார் குறுக்கிட்டு, " சொல்லுங்கள் சுவாமி.... அதற்கு மாற்றாக என்ன செய்ய வேண்டும்?.... கட்டளையிடுங்கள்", என வேண்டி நின்றார்.

அலட்சியமாய் சிரித்த அடியவர், "அதற்கு மாற்றாக எதை என்னால் கேட்க முடியும்?! இருந்தாலும் காணாமல் போன கௌபீணத்திற்காக, என்னிடம் இருக்கும் அதே போன்ற கௌபீணத்தின் எடைக்கு எடை புதியவற்றைக் கொடுத்துவிடு! இனி இந்தப் பக்கமே வரமாட்டேன்", என்றார்.

சற்றே ஆறுதலடைந்த அமர்நீதியார்,
"அப்படியே ஆகட்டும் சுவாமி.... என் தவறை மன்னித்து, தங்கள் மனம் மகிழ்ந்தால் போதும்", என தராசினைக் கொண்டு வந்து கூடத்தில் நிறுவச்செய்தார்.

அடியவர், தன் கொம்பில் கட்டியிருந்த தன் இன்னொரு கௌபீணத் துண்டினை அவிழ்த்து தராசின் ஒரு தட்டில் வைக்க, அந்தத் தட்டு தடாலென ஒரேடியாய் கீழே வந்தது! புதிய கௌபீனத் துண்டுகளை தராசின் மற்றொரு தட்டில் வைத்தார் அயர்நீதியாய். தட்டு அசையவே இல்லை

ஏதும் புரியாமல் திகைத்த அமர்நீதியார், "இத்தனை கௌபீணங்கள் வைத்துவிட்டோம்", இனி இந்த எடைக்கு சரியாக ரத்தினங்களை வைத்தால் என்ன?" என எண்ணியவர், தன்னிடமுள்ள ரத்தினங்களை வைத்தார். தட்டு அசையவே இல்லை! தங்க ஆபரணங்கள் அனைத்தையும் கொண்டு வந்து போட்டார். ஊஹூம்!... இனி தன்னிடம் செல்வம் ஏதும் இல்லை என்னும் நிலை! அடியவரை பார்த்தார்!
அடியவர், "சொன்ன சொல்லைக் காப்பாற்றுபவனே உண்மையான சிவத்தொண்டன்!" எனக்கூறி மெல்ல சிரித்தார்.

கை கூப்பிய அமர்நீதி, "சுவாமி... சிவனடியார்க்கு செய்யும் சேவை அந்த ஈசனையே சேரும் என்பதனை நன்கறிவேன். எந்நிலையிலும் சிவனடியாரை வஞ்சம் செய்யும் எண்ணம் எனக்கு கிஞ்சித்தும் இல்லை. இதுவரை வந்த செல்வங்களை வைத்தும் இறைவன் சோதிக்கிறான். இதோ எனக்கு வாய்த்த செல்வங்களையும் சேர்க்கிறேன்", எனத் தன் மனைவி, மகனைப் பார்க்க... அவர்கள் புன்னகை மாறாமல் தராசுத் தட்டின் அருகில் வந்து நின்றனர்.

முதலில் தன் மகனைத் தூக்கி, தட்டில் அமர வைத்தார்! மனைவியைப் பார்க்க, அவளும் ஏறி அமர்ந்தாள், தராசுத் தட்டு அசைய மாட்டேன் என அடம் பிடித்தது!

இறைவனை மனதில் தியானித்தவர், அந்த அடியவரை வணங்கியபடி தானும் அந்த தராசுத் தட்டில் ஏறி நின்றார். என்ன ஆச்சரியம்?!....

தராசுத் தட்டு தடாரென உயர்ந்து, கௌபீணம் இருந்த தட்டுக்கு இணையாக நின்றது! எல்லோரும் ஆச்சரியப் பட்டு வணங்கி நின்ற நிலையில்....

திடீரென காணாமல் போனார் அந்த கௌபீணதாரி!

கௌபீணத்தை எடையிட்ட தராசு தட்டு மறைந்து, அது புஷ்பக விமானமாக மாறியது!

அங்கு சிவபெருமான் தோன்றினார்;
"அமர்நீதி! உன் தியாகத்தை உலகுக்கு எடுத்துக் காட்டவே கௌபீண தாரியாய் வந்து இந்த நாடகம் நடத்தினோம். இன்று முதல் அமர்நீதி நாயனார் என்ற பெயரோடு, சிவகதி அடைவாய்!" எனக்கூறி மறைந்தார்!

எல்லோரும் பரவசத்தில் விழுந்து வணங்க, வானுலகு நோக்கிப் பறந்து சென்றது அமர்நீதி நாயனாரை சுமந்த புஷ்பக விமானம்!

# செவ்வாய் தோஷம் தீர்க்கும் எளிய பரிகாரம்

~ விஜய் பிரபு



ஒரு செவ்வாய்க் கிழமையில், தேய்பிறை திதியில், பைரவர் படத்தை (செம்பு நாணயம் உள்ள அளவில்) இஞ்சியில் பதித்து, பூஜை அறையில் வைத்து தீபம் ஏற்றி வழிபட வேண்டும்.

பைரவர் மந்திரம் 108 முறை சொல்ல வேண்டும். சிகப்பு துணியில் மற்றொரு இஞ்சியை பொடியாக்கி கட்டி வீட்டில் உள்ள தெற்கு மூலையில் பரணில் போட்டு வைக்க வேண்டும். தினமும் நாய்களுக்கு உணவு வழங்க வேண்டும். முருகன் (அ) துர்க்கை அம்மன் கோவிலில் செவ்வாய்க்கிழமை தோறும் ராகு காலத்தில் தீபமேற்றி வழிபட வேண்டும். தங்கள் வயது எவ்வளவோ அவ்வளவு வாரம் கோவிலில் தொடர்ந்து தீபம் ஏற்றி வர வேண்டும். உதாரணமாக உங்கள் வயது 30 எனில் 30 வாரம் கோவிலில் தீபமேற்றி வழிபட வேண்டும். இவ்வாறு வழிபடுவதின் மூலம் செவ்வாய் தோஷம் நீங்கும். திருமணத் தடை நீங்கும். கணவன் மனைவி இடையே இருந்த பிரச்சினைகள் நீங்கி அன்யோன்யம் அதிகரிக்கும். ரத்த சம்பந்த உறவினர்கள் மற்றும் சகோதர, சகோதரிகளிடம் ஒற்றுமை ஏற்படும். வீடு, வாகனம், சொத்து, போன்றவற்றில் இருந்த பிரச்சனைகள் மற்றும் தடைகள் நீங்கும்.

## கருட வாகனம்

கருட பஞ்சஸத் மற்றும் கருட தண்டகம் ஆகிய நூல்களை படைத்தவர் ஸ்ரீ வேதாந்த தேசிகர் ஆவார். இந்நூல்களில் கருடனின் அற்புத இயல்புகள், பெருமைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

எல்லா பெருமாளுக்கும் உரிய இவ்வாகனம் தகுந்த உரிய மரங்களில் உருவாக்கப்படும். ஆனால் விதிவிலக்காக கும்பகோணம் சமீபம் உள்ள நாச்சியார் கோயில் பெருமாள் ஆலயத்தில் உள்ள கருட வாகனம் மட்டும் கல்லினால் செய்யப்பட்டது. இதனை சுமக்க நிறைய ஆட்கள் வேண்டும் அதன் கூடுதல் எடையை கணக்கில் கொண்டுதான்!



பச்சை மரகத நிறம்; பருந்தின் மூக்கு; உருட்டு விழிகள் நான்கு கரங்கள், அகன்று விரிந்த இறக்கைகள் ஆகியவை கருடவாகனம் கொண்ட சிறப்புகள்...

பெருமாள் என்றால் கருடர் என்னும் அளவுக்கு விஷ்னு ஆலயங்கள் அனைத்திலும் கருடவாகனம் இடம்பெற்றிருக்கும்.

# இன்றும் காணலாம், கிருஷ்ணன் வாழ்ந்த துவாரகையை!

~ பிரபு சங்கர்

இன்றும்கூட பகவான் கிருஷ்ணன் கோலோச்சிய துவாரகாபுரியை நம்மால் காணமுடியும் என்று அகழ்வாராய்ச்சி நிபுணர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.
பகவான் கிருஷ்ணர் ராஜ பரிபாலனம் புரிந்த நகரம், துவாரகை. அந்த நகரத்தை சுனாமி போல ஒரு பேராழி வந்து கபளீகரம் செய்துவிட்டது. இது உண்மையா? கிருஷ்ணர் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் துவாரகை உண்மையிலேயே இருந்ததா?
அமெரிக்காவிலுள்ள நாஸா விண்வெளி ஆராய்ச்சி மையம், தன் செயற்கைக்கோள் மூலமாக ராமேஸ்வரத்துக்கும் இலங்கைக்கும் இடையே ஸ்ரீராமனால் கட்டப்பட்ட பாலத்தை அடையாளம் காட்டியதே, அதுபோன்ற, விஞ்ஞானப் பூர்வமான ஆதாரம் ஏதாவது துவாரகைக்கு இருக்கிறதா?
இருக்கிறது.
இந்திய தேசிய கடலாராய்ச்சிக் கழகம், 1983 முதல் 1990ம் ஆண்டுவரை பதினெட்டு ஆராய்ச்சிகளை மேற்கொண்டது. ஆராய்ச்சிக் குழுவின் தலைவரான எஸ்.ஆர்.ராவ், "*The Lost City of Dwaraka*" என்ற தன்னுடைய புத்தகத்தில் தன் ஆராய்ச்சி முடிவுகளை எழுதியிருக்கிறார்.
"புராண அல்லது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த



ஒரு கண்டுபிடிப்பு அகழ்வாராய்ச்சி மூலம் வெளிப்பட்டுள்ளது. இது, மகாபாரத சம்பவங்கள் நடந்ததையும், துவாரகை நகரம் இருந்ததையும் உறுதிபடுத்துகிறது.

கி.மு. 1500ம் ஆண்டுவாக்கில், தற்போதைய துவாரகை மற்றும் அதன் அருகிலுள்ள தீவான பெட் துவாரகை ஆகிய பகுதிகளில் கிருஷ்ணன் வாழ்ந்திருப்பதற்கு ஆதாரம் இருக்கிறது. கடற்கரையிலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம், நன்கு வடிவமைக்கப்பட்ட ஒரு நகரம் இருந்திருக்கிறது. ஒவ்வொன்றும் 18 மீட்டர் அகலமுள்ள இரண்டு பிரதான சாலைகள், ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஆறு குடியிருப்புகள், மூன்று பிரமாண்டமான கட்டிடத் தொகுப்புகளைக் கொண்டு துவாரகையின் ஒரு பகுதி விளங்கியிருக்கிறது.

அந்நகரின் சுவர்கள் 3600 ஆண்டுகளுக்கு முந்தைய தொன்மை வாய்ந்ததாக இருக்கின்றன. இந்நகரம், வடக்கு நோக்கி விரிவடைந்திருக்கிறது. இப்படி விரிவாக்கப்பட்ட பகுதி 'பெட் துவாரகை' என்று அழைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீவுப் பகுதி, கிருஷ்ணர் மற்றும் அவர் மனைவியரான சத்யபாமா - ஜாம்பவதிக்கான பொழுதுபோக்கு தலமாகவும் அமைந்திருக்கிறது. மேலும், தென்னிந்தியாவின் ஒகமதி என்ற இடம் வரையிலும், கிழக்கு இந்தியாவில் பிந்தாரா என்ற இடம் வரையிலும் இந்நகரம் வியாபித்திருக்கிறது. இந்த பிந்தாரா பகுதியில் 'பிந்த்ரா-தாரகா' என்ற இடத்தில் துர்வாசரின் குடில் இருந்ததாக மகாபாரதத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

துவாரகையின் நிர்மாணம் பிரமிப்பூட்டக் கூடியது. சௌராஷ்டிர மேற்கு கடலிலிருந்து நிலம் பெறப்பட்டு, நகரம் திட்டமிட்டுக் கட்டப்பட்டுள்ளது. இது,கோமதி நதிக்கரையில் அமைந்துள்ளது. த்வாரமதி, த்வாரவதி, குசஸ்தலை என்றும் துவாரகை அழைக்கப்பட்டது. எல்லா அடிப்படை வசதிகளும் நிறைந்த ஆறு பகுதிகள், குடியிருப்பு, வியாபாரத் தலங்கள், அகன்ற சாலைகள், பொதுமக்கள் பயன்பாட்டிற்கான பொது இடங்கள், 'சுதர்மா சபா' என்ற பொதுமக்கள் கூடும் அரங்கம் மற்றும் அழகான துறைமுகம் ஆகியவற்றைக் கொண்டு விளங்கியது துவாரகை."
- இவ்வாறு அந்த நூலில் எஸ்.ஆர்.ராவ் கூறியிருக்கிறார்.
துவாரகை உருவானது எப்படி?
கம்ஸனை வதைத்த பிறகு, கிருஷ்ணனும் பலராமனும்

மதுராவுக்கு உக்ரசேனனை அரசனாக்கினார்கள். இது கம்ஸனுடைய மாமனாரான ஜராசந்தனுக்குப் பெருங்கோபத்தை உண்டாக்கியது. அவன் அடுத்தடுத்து பலமுறை மதுரா மீது போர் தொடுத்தான். யாதவ சேனை ஆரம்பத்தில் ஜராசந்தனது படைகளை எதிர்த்தன. என்றாலும், அடுத்தடுத்த போர்களில் பலம் குன்றி, வீரர்களின் எண்ணிக்கையும் குறைந்து போயிற்று. இனி ஜராசந்தனை எதிர்க்க இயலாது என்று கருதிய கிருஷ்ணர், மிச்சமிருந்த யாதவர்களை அழைத்துக்கொண்டு மேற்கு கடற்கரைப் பகுதிக்குச் சென்றார். அங்கே கடலரசனிடம் 12 யோஜனை (ஒரு யோஜனை என்பது பத்து மைல்) நிலத்தைப் பெற்றார். இதனால் நிலப்பரப்பை விட்டு 12 யோஜனை தூரம் கடல் உள்வாங்கிச் சென்றது. இப்படி கடல் விட்டுக் கொடுத்த நிலத்தில் தேவதச்சனான விஸ்வகர்மா மூலமாக ஓர் அழகான நகரை கிருஷ்ணன் நிர்மாணித்தார். அதுதான் துவாரகை.

மகாபாரத யுத்தம் முடிந்து 36 ஆண்டுகள் கழித்து துவாரகையைக் கடல் கொண்டது. இதை முன்கூட்டியே அறிந்த கிருஷ்ணர், யாதவர்களை ப்ரபாஸ் என்ற உயரமான மலைப் பிரதேசத்திற்கு (தற்போதைய சோம்னாத்) அழைத்துச் சென்று அவர்களைக் காத்தார். ஆனால், அங்கே யாதவர்கள் தமக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டு மாய்ந்தார்கள். கிருஷ்ணனும் வேடன் எய்த அம்பால் இவ்வுலகம் நீத்து, வைகுண்டம் ஏகினார்.

“கரையை வந்து வந்து தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்த கடல், திடீரென்று வேகம் கொண்டு துவாரகை நகருக்குள் புகுந்தது. அந்த அழகிய நகரத்தின் தெருக்களை மூழ்கடித்தது. எல்லா மூலை, முடுக்குகளிலும் புகுந்தது. அர்ஜுனன் (கிருஷ்ணரின் மகன் மற்றும் பேரனை அழைத்துக் கொண்டு துவாரகைக்கு அப்போது வந்தவன்) பார்த்துக் கொண்டிருக்கும்போதே மாட மாளிகைகள் எல்லாம் கடலுக்குள் மூழ்கின. கிருஷ்ணனுடைய அரண்மனையும் அப்படியே மூழ்கிற்று. விரைவில் எல்லாம் முடிந்துவிட்டது. கரையைத் தாண்டி படர்ந்த கடல் நீர், தான் பரவிய பகுதிகளில் ஓர் ஏரிபோல அப்படியே தேங்கிவிட்டது. துவாரகை, வெறும் நினைவில் மட்டுமே தங்கும் பெயராகி விட்டது,” என்று விவரிக்கிறது மகாபாரதம்.

ஹைதராபாத்திலுள்ள பிர்லா மியூஸியத்தில் கிருஷ்ணர் ஆட்சி செய்த துவாரகா இப்படித்தான் இருந்திருக்கும் என்று சொல்வதுபோல ஒரு ‘மாடல்’ வைத்திருக்கிறார்கள். இது, இந்திய கடல் அகழ்வாராய்ச்சியினர் மேற்கொண்ட தேடுதலில் கிடைத்த ஆதாரங்களை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டது.



மத்தியப் பிரதேசத்தில் விதிஷா என்ற இடத்தில் பெட்ஸா என்று ஒரு பகுதி. இங்கே மேற்கொள்ளப் பட்ட அகழ்வாராய்ச்சியில், கி.மு. 300ம் வருடத்திய கோயில் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் கிருஷ்ணன், பலராமன், கிருஷ்ணரின் மகன் ப்ரத்யும்னன், கிருஷ்ணரின் பேரன் அநிருத்தன் மற்றும் யாதவர் தலைவன் சத்யகி ஆகியோரின் விக்ரகங்களைக் காண முடிந்தது.

கி.மு. 113ம் ஆண்டு வாக்கில் கிரேக்க நாட்டுத் தூதுவரான ஹீலியோபிஸ் என்பவர், விகஸிலா என்ற பகுதியிலிருந்து (தற்போதைய ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பஞ்சாப் இணைந்த பகுதி) பெஸ் நகர் என்ற இப்போதைய சௌராஷ்டிராவுக்கு வந்தார். இங்கே கிருஷ்ணனைப் பற்றி நன்கு அறிந்த அவர், கிருஷ்ணனின் அடியா ராகி, அந்த பக்தியைப் போற்றும் வகையில் ஒரு ஸ்தூபியை எழுப்பினார். அந்த ஸ்தூபியை இன்றும் காணலாம்.

இப்படி கடல் கொண்ட துவாரகையின் நினைவுச் சின்னங்களை, அந்தப் பகுதியில் கடலுக்கு அடியிலேயே போய் காட்சிப் பொருட்களாக நாம் காண முடியும்! அதற்கு இந்திய கடல் அகழ்வாராய்ச்சிக் கழகம் உரிய ஏற்பாடுகளை செய்து வருகிறது. இதனால் நீர் மூழ்கிக் கப்பல் மூலமாகவும், குழாய் கிணறு அமைப்பில், கடலடிநோக்கு ஆடி மூலமாகவும் துவாரகையின் மிச்சங்களை நாம் பார்வையிடலாம்.

# ஆன்மீக கேள்விகளும்? அர்த்தமுள்ள பதில்களும்...

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

புத்த மதத்தில் குறிப்பிடப்படும் நிர்வாண நிலை எது?

"அம்மதக் கொள்கையின்படி, கடைசியில் ஒன்றுமில்லை; முடிவில் சூனியம், நிர்வாணம் என்று அதற்குப் பெயர். மோட்சத்திற்கு நிர்வாணம் என்று பெயர். நிர்வாணம் என்றால் என்ன அர்த்தம்? துணிமணிகள் ஒன்றும் இல்லாமல் குழந்தையிருந்தால் நிர்வாணமாக இருக்கிறது என்று சொல்வது வழக்கம். சாமான்யமாக ஒன்றும் இல்லை என்று அர்த்தம்."

புத்தமதத்தினர் கொண்ட அர்த்தத்தில் எரிந்து கொண்டிருக்கின்ற விளக்கு அணைந்தால் நிர்வாணம் ஆகி விட்டது என்று சொல்லலாம். எரிந்து கொண்டிருக்கின்ற உயிர் அணைந்தால் நிர்வாணமென்று பெயர். திரும்பவும் ஏற்ற முடியாமல் பூர்த்தியாகிவிட்டால் அதற்கும் நிர்வாணமென்று பெயராகிறது. பௌத்தமத கொள்கைப் பிரகாரம் கடைசியில் எல்லாம் நிர்வாணமாகப் போகின்றன; சூனியமாகப் போய்விடுகின்றன. அந்த மாதிரியான நிலை பெற நல்ல குணங்கள் சில வேண்டும்.

(இப்படி நிர்வாண நிலைக்கு விளக்கம் கூறியது வணக்கத்திற்குரிய காஞ்சி மகாப் பெரியவாள் அவர்கள்)

மகான் ஷீர்டி பாபாவுக்கு தீண்டாமை பிடிக்காதாமே?

ஆமாம். இதற்கு உதாரணமாக அமைந்த சம்பவத்தைப் பார்க்கலாம்.

தாமியா என்ற தீவிர சாய் பக்தர் பாபாவிடம் அடிக்கடி திட்டு பெறுவதும், சமயத்தில் அம்மகானால் அடிபடுவதுமுண்டு. ஒரு சந்தர்ப்பத்தில் தாமியா விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்து, ஷீர்டி மகானும் அதில் கலந்து கொள்ள வேண்டுமென அவரைக் கேட்டுக் கொண்டார். "நான் வரமாட்டேன்" என பாபா உறுதியாகத் தெரிவித்து விட்டார். "அப்படியானால் தங்களுக்கு பணிவிடை புரியும் பாலா படேலையாவது அனுப்பி வையுங்கள்" என தாமியா கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். முதலில் சற்று யோசித்த ஷீர்டி நாதன், "சரி! ஆனால் ஒரு நிபந்தனை, அவன் அரிசன குலத்தில் உதித்தவன் என்பதால் அவனை விரட்டிவிடக் கூடாது" என எச்சரிக்கை செய்து பாலாவை விருந்துக்குச் செல்ல அனுமதி தந்தார்.

அன்று நடைபெற்ற விருந்தில் தனது அருகிலேயே பாலா படேலை அமர்த்திக் கொண்டு தாமியா நல்ல முறையில் விருந்தோம்பல் செய்தார்.

அலகிலா விளையாட்டையார் அந்த ஷீர்டி சாய்பாபா! பக்தி பற்றி அறிஞர் ராஜாஜி கூறியுள்ளது என்ன?

"குடிநீர் சேந்த குளம் ஒன்றுக்குச் செல்கிறோம். அப்போது குடத்தால் குளநீரை எடுக்கையில் மேலாகத்தான் எடுக்க வேண்டும். அதற்குப் பதிலாக அந்தக் குளத்தில் இறங்கி கலக்கி எடுத்தால் குளச்சேறு மேலே வந்துவிடும். எனவே பக்தியிலும் மிதமான பக்தியே தேவை. இறைவன் தயிரினில் மறைந்த வெண்ணெய் போன்றவர். தெய்வத் தரிசனம் பெற நம் உள்ளத்தை பக்தியால் கடைய வேண்டும்.

நாம் கொள்ளும் பக்தியில் உறுதி தேவை. ஆழ்ந்த தியானம் மேற்கொண்டு மனம் ஒன்றிச் செய்ய கடவுளின் அருள் நிச்சயம் எட்டும் நமக்கு" என்பது ராஜரிஷி ராஜாஜியின் வாக்கு.

"தனக்குத் தாயே வேண்டாம்!" என மகான் அருணகிரிநாதர் ஏன் பாடினார்?

"மனைமாண் சுதரான சுணங்கரு" என்ற திருப்புகழ் பாடலில்தான் அருணகிரியார் அப்படிக் கூறியுள்ளார்.

அதற்கான விளக்கமிது.

"என்னை ஈன்றெடுத்தவள் எனக்கு தெய்வமாகிறாள். அவள் பெற்றதாலேயே தான், நான் அழகன் முருகனின் தரிசனத்தை பெற முடிந்தது. இனியான் முருகனின் திருவடியிலேயே அடைக்கலமாக விரும்புவதால் இனி இன்னொரு தாயின் வயிற்றில் பிறக்கக் கூடாது (மறுபிறவி)" என்ற பொருளாகிறது.

அர்த்தம் அனர்த்தமாகி விட்டால் என்னவாகும்?

யார் என்ன சொன்னாலும், அதற்குரிய சரியானவற்றை கேட்பவர் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கொரு உதாரணம்.

"காட்டில் வசித்து வந்த துறவியிடம் பக்கத்துக் கிராமத்தார் ஒன்று கூடி வந்து "திங்களரில் உள்ள பெரிய பாம்பு ஒன்று ஜனங்களைத் துரத்திக்

கொண்டு போய் தீண்டி விடுவதால் பலர் சாக நேரிடுகிறது. அதனை அடிக்க முயன்றும் தோல்விதான்“ என்று வேதனையுடன் முறையிட்டனர்.

அந்த ஊர் மக்கள் மீது பச்சாதாபங் கொண்ட துறவி, அவர்களுடன் அப்பாம்பு வாசஞ் செய்யும் புற்றருகே சென்று ஏதோ மந்திரம் உச்சரிக்க, சுமார் 10 அடி நீளமுள்ள நாகம் துறவி எதிரே புற்றிலிருந்து வந்து ‘என்ன விஷயம்?“ எனக் கேட்பது போல் படம் எடுத்தது.

உடனே துறவி, “நாகமே! நீ தவறு செய்கிறாய். அனாவசியமாய் எவரையும் தீண்டாதே! நான் உனக்கு ஒரு மந்திரம் சொல்லித் தருகிறேன். அதைச் சொல்லச் சொல்ல உனது ஆவேசம் அடங்கி விடும்“ எனக் கூறி அந்த மந்திரத்தை பாம்பிடம் ஓதினார். சரியென பாம்பும் அதனை ஏற்றது.

சில தினங்கள் கழிந்தன. துறவி வந்து போன பிறகு பாம்பு மந்திரத்தை தினமும் சொல்லிவர, அது சாது குணத்தைப் பெற்றுவிட்டது.

இப்போதெல்லாம் சிறுவர்கள் கூட, பாம்பு தன் வீரியத்தை விட்டு விட்டதால், அதன் புற்றுக்கே போய் குச்சியினால் குத்துவதும், காயப்படுத்துவதும் சகஜமாகிவிட்டது. இதனால் பாம்பு வெளியே இரை தேடக்கூட மிகவும் சிரமப்பட்டது. அதன் உடலும் மிகமிக இளைத்து விட்டது.

தற்செயலாக ஒருநாள் புற்றின் பக்கம் வந்த துறவி, அங்கே மெலிந்து படுத்திருந்த நாகத்தைக் கண்டு திடுக்கிட்டு விசாரித்தார்.

நடந்தவற்றை பாம்பு சொல்ல, கேட்டுக் கொண்ட துறவி, “நான் உன்னிடம் பிறரை தீண்டாதே“ என்றுதான் சொன்னேன். சீறக்கூடாது எனத் தடுத்தேனா? நீ சீறியிருந்தால் ஊரார் பயந்து ஓடியிருப்பார்கள்! பிறர் நமக்கு துன்பம் விளைவிக்கையில் நாம் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்வதில் தவறில்லை. இனி பிறர் உயிருக்கு தீங்கு நேரா வண்ணம் நீ தற்காத்துக் கொண்டால் அது தவறில்லை“ எனக் கூறி தெளிவுப்படுத்தினார்.”

எப்பொருளிலும் மெய்ப்பொருள் காண்பது அறிவல்லவா?

## ராகு, கேது கிரகங்களைப் பற்றி அறிய வேண்டும்?

நிழல் கிரங்கள் என வழங்கப்படும் ராகு, கேது, சக்தி வாய்ந்தவை. தங்களைச் சேர்ந்த கிரகங்களான சூரியன், சந்திரன் இவர்களைக் கூட வீழ்த்தும் சக்தி ராகு, கேதுவுக்கு உண்டு.

ராசி சக்கரத்தில் இவர்களுக்கு சொந்த வீடு இல்லை. ராகு, கேது இருவரும் மற்றக் கிரகங்கள் போல் சுழற்சியை மேற்கொள்ளாது வலமிருந்து இடப்புறம் சுற்றும் வழக்கம் கொண்டவர்கள்.

ராகு ஜாதகத்தில் பலமாக இருந்தால் ஆண்டியும் மன்னனாவான். கேது சுபபலம் பெற்றிருந்தால் அளவற்ற ஆன்மீக ஈடுபாடு, துறவில் நாட்டம் ஏற்படும்.

புதன், சுக்கிரன், சனி ஆகிய கிரகங்கள் கேதுவுக்கு நட்பானவர்கள்; ஆனால் குரு, சூரியன், சந்திரன் பகையானவர்கள்.

ராகுவிற்குப் பிடித்தமானவர்கள் வேண்டாதவர்கள் “கேது“ப்படியேதான்.

“ராகுவைப் போல் கொடுப்பாரில்லை, கேதுவைப் போல் கெடுப்பாரில்லை” என்ற ஒரு சொல் வழக்கும் உண்டு.

## நம் உடல் குறித்து பகவான் ராமகிருஷ்ணன் கொண்ட கருத்து என்ன?

“நம் உடம்பு இறைவன் என்னும் பொக்கிஷம் நிறைந்துள்ள பெட்டி” என்று அடிக்கடி பகவான் கூறுவார்.

## ரத சப்தமி எப்போது கொண்டாடப்படுகிறது?

சூரியன் ஆண்டுதோறும் இரண்டு வித பயணத்தை மேற்கொள்கிறார். அவரின் வடதிசை பயண காலத்தை உத்திராயண புண்ணிய காலமென்றும், தென்திசை பயணத்தை தட்சிணாயன புண்ணிய காலமென்றும் கூறப்படுகிறது.

தை மாதம் முதல் ஆனி வரையில் ஆன ஆறு மாதங்கள் வடக்கு திசைப் பயணம். தை மாதத்தில் இடம் பெறும் ரத சப்தமி விரதம் சூரியனுக்கு மிகப் பிடித்ததாகும். தை அமாவாசைக்குப் பிறகு வரும் வளர்பிறை ஏழாம் நாளில் உள்ள சப்தமி திதியே ரதசப்தமி திருநாள்.

அன்று பெண்கள் ஏழு எண்ணிக்கை கொண்ட எருக்கு இலைகளை வரிசையாக அடுக்கி தங்கள் சிரசின் மீது வைத்து சிறிது அட்சதையை அதன் மீது தூவிவிட்டு அவைகளைப் பிடித்தபடியே சொம்பு தீர்த்தத்தால் தலையில் விட்டு குளித்தால் மிகப் புண்ணியம். அன்று சூரியன், சூரிய நாராயணராக வழிபடப்படுகிறார். அன்றைய தினம் ஏழை எளியவர்களுக்கு தானம் புரிதல் நல்லது.

## சிவபிரானை தாணு என அழைக்கிறார்களே, அதன் பொருள்?

தாணு என்றால் பட்டுப்போன கட்டை என்று அர்த்தம். அப்படி பட்டுப்போன உயிரற்ற பொருளாகிறது. அதில் துளிர் இல்லை; நம் உடலை பட்டுப்போன கட்டையாக எண்ணினால் அதில் தீய குணங்கள் உற்பத்தியாகாது. எனவே சிவன்தாணு என அழைக்கப்படுகிறார்.

# சகல பாவங்களையும் போக்கும் *ரத சப்தமி!!*

~ திருவாரூர் சு.சேகர்.



சூரிய வழிபாடு இந்து சமயத்தில் பெரும் அங்கம் வகிக்கின்றது. சூரிய சக்தியின்றி உயிர்கள் வாழ்வது இயலாத காரியம் என்பதை அறிந்ததால்தான், அதனை வழிபடும் முறையை முன்னோர்கள் உருவாக்கி வைத்திருந்தனர்.

சூரியனின் ஒளிக்கதிரே உயிர்கள் வளரவும், பெருகவும் உதவும் சூரிய பகவானை வணங்க ஏற்படுத்தப்பட்ட புண்ணிய நாளே ரதசப்தமி.

ரத சப்தமி அன்று விரதம் இருந்து சூரிய வழிபாடு செய்வதால் நாம் செய்த சகல பாவங்களும் நம்மை விட்டு விலகிவிடும் என்பது ஐதீகம்.

சூரியன் தன் (தட்சிணாயனம்) தெற்கு நோக்கிய பயணத்தை முடித்துக்கொண்டு, வடக்கு நோக்கிய (உத்தராயணம்) பயணத்தைத் துவங்கும் நாளே 'ரத சப்தமி' என்று குறிப்பிடப்படுகிறது. ரத சப்தமி தை அமாவாசை நாளை அடுத்த ஏழாவது நாளில் அனுஷ்டிக்கப்படுகிறது.

சிவபெருமானின் வலது கண்ணாக சூரியன் இருப்பதாக சிவ ஆகமங்கள் தெரிவிக்கின்றன.

மஹாவிஷ்ணுவின் பெரிய திருவடி என பயபக்தியோடு அழைக்கப்படும் கருட பகவானின் சகோதரர் ஆன அருணன் சாரதியாக இருக்க, ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் உலா வரும் சூரியபகவான் உதித்தார் என்கின்றன நம் புராணங்கள்.

நான்கு வேதங்களில் முதல் வேதமான ரிக் வேதத்திலேயே சூரிய வழிபாடு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

### பீஷ்மரும் ரத சப்தமியும்:

மகாபாரதப் போரில் அர்ஜுனனால் அம்பால் வீழ்த்தப் பட்ட பீஷ்மர் நினைத்த நேரத்தில் உயிர் விடலாம் என்ற வரத்தினால் உத்தராயணத்தில் உயிர் விட அம்புப் படுக்கையில் காத்திருந்தார். உத்தராயணம் வந்த பிறகும் உயிர் பிரியவில்லை.

"என்ன பாவம் செய்தேன்? ஏன் இன்னும் என் உயிர் போகவில்லை?" என்று வேதவியாசரிடம் பீஷ்மர் கேட்டார்.

"பீஷ்மா, நீ மனோ வாக்கு காயத்தால் தீங்கு புரியாவிட்டாலும் பிறர் செய்யும் தீமைகளைத் தடுக்காமல் இருந்தது தான் பாபம். அதற்கான தண்டனையிலிருந்து நீ தப்பமுடியாது" என்றார் வியாசர். பீஷ்மருக்கு வேதவியாசர் சொன்ன உண்மை புரிந்தது. துரியோதனன் அவையில், சபை நடுவே பாஞ்சலியின் உடையை துச்சாதனன் பறித்து அவமானம் செய்தபோது, அதை தடுக்காமல் பார்த்துக்கொண்டிருந்தது தான் செய்த மிகப்பெரிய தவறு என பீஷ்மர் உணர்ந்து, இதற்கு என்ன பாப விமோசனம் என்று வியாசரிடம் கேட்க...

'பீஷ்மா எப்பொழுது உன் தவறை உணர்ந்து வருந்துகிறாயோ, அப்போது அகன்று விட்டாலும் அனைத்தையும் கண்டும் காணமல் இருந்த கண்கள், செவி, வாய், தோள், கைகள், புத்தி உள்ள தலை ஆகியவை தண்டனை அனுபவிக்க வேண்டும்" என்றார் வியாசர். உடனே சூரியனின் நெருப்பைக் கொண்டு தன்னை சுட்டு எரிக்க வேண்டினார் பீஷ்மர். வேதவியாசர் முன்கூட்டியே தான் கொண்டு வந்திருந்த எருக்கன் இலைகளை பீஷ்மரிடம் காண்பித்து, "பீஷ்மா, இந்த எருக்கன் இலைகள் சூரியனுக்கு உகந்தது. இதன் பெயர் அர்க்கபத்ரம். அர்க்கம் என்றால் சூரியன் என்றே பொருள். சூரியனின் முழுச்

சக்தியும் இதில் உள்ளது. ஆகவே இந்த இலைகளால் உன்னுடைய அங்கங்களை அலங்கரிக்கப் போகிறேன். அவை உன்னைப் புனிதப்படுத்தும்" என்றவர், அதன்படி பீஷ்மரின் அங்கங்களை, எருக்கன் இலைகளால் அலங்கரித்தார் வியாசர். அதன் பிறகு பீஷ்மர் கொஞ்சம் கொஞ்சமாக மன அமைதி அடைந்து, அப்படியே தியானத்தில் ஆழ்ந்தார்.

பீஷ்மரின் பாவமும் நீங்கி, தியான நிலையிலேயே முக்தியும் அடைந்தார். அப்போது, சப்தமி முடிந்து, அஷ்டமி திதி ஆரம்பமாகி இருந்தது. இதனால், பீஷ்மர் முக்தி பெற்ற நாளை, பீஷ்மாஷ்டமி என்பர். அதனால் தான் நாம் இன்றும் ரதசப்தமி அன்று பாபங்கள் தீர எருக்க இலையை தலையில் வைத்து ஸ்நானம் செய்கிறோம்.

ரத சப்தமிக்கு அடுத்த நாள் பீஷ்மாஷ்டமி அன்று புனிதநீர் நிலைக்குச் சென்று பீஷ்மருக்கான தர்ப்பணமும் நம்முடன் வாழ்ந்த முன்னோர்களுக்காக பித்ரு பூஜையும் செய்தால், சுக வாழ்வு கிட்டும் என்பது ஐதீகம்.

### ரத சப்தமி நாளில் ஸ்நானம் மற்றும் வழிபாடு:

அதிகாலையில் எழுந்து சூரிய உதயமாகும் நேரத்தில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவது சிறப்புடையதாகும். புண்ணி தீர்த்தத்தில் நீராட முடியாதவர்கள், வீட்டிலேயே சூரிய ஒளி படும் இடத்தில் நின்றபடி நீராட வேண்டும்.

நீராடும் போது ஏழு எருக்கம் இலைகளை கால்களில் இரண்டு, கைகளில் இரண்டு, தோள் பட்டைகளில் இரண்டு, தலையில் ஒன்றை வைத்து நீர் ஊற்ற வேண்டும். தலையில் வைக்கும் இலையில் பெண்கள் மஞ்சள் பொடி மற்றும் அட்சதையும், ஆண்கள் அட்சதை மட்டும் வைத்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால் செல்வத்தையும், ஆரோக்கியத்தையும் தரும். தந்தை இல்லாத ஆண்கள், கணவரை இழந்த பெண்கள், ஏழு எருக்கம் இலைகளுடன் பச்சரிசி, கருப்பு எள், தலையில் வைத்து நீராட வேண்டும்.

### ஸ்நானம் செய்யும் போது சொல்ல வேண்டிய ஸ்லோகம்:

ஸப்த ஸப்திப்ரியே தேவி ஸப்த லோகைக பூஜிதே!
ஸப்த ஜன்மார்ஜிதம் பாபம் ஹர ஸப்தமி !
ஸத்வரம் யத் யத் கர்ம க்ருதம் பாபம் மயா ஸப்தஸு ஜன்மஸு
தன்மே ரோகம் ச மாகரீ ஹந்து ஸப்தமீ நௌமி ஸப்தமி!
தேவி! த்வாம் ஸப்த லோகைக மாதரம் ஸப்தா(அ)ர்க்க பத்ர ஸ்நானேன
மம பாபம் வ்யபோஹய !

அன்றைய தினம் வாசலில் தேர்க்கோலமிட்டு சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியம் செய்ய வேண்டும். ரத சப்தமி அன்று ஆதித்ய ஹ்ருதயம் படிக்கலாம்.

### சூரியனுக்குரிய முக்கியமான கோயில்கள்:

தமிழ்நாட்டில் சூரியனார் கோவில்
ஒரிசாவில் கோனார்க்
கயாவில் தட்சி ணார்க்கா,
ஆந்திராவில் அரசவல்லி,
குஜராத் தில் மொதேரா,
அஸ்ஸாமில் சூர்யபஹார்,
மத்திய பிரதேசத்தில் உனாவோ

### கோயில்களில் ரத சப்தமி:

ரத சப்தமி அன்று தஞ்சை சூரியனார் கோயிலில் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. திருப்பதி ஏழுமலையான் கோயில் ஏழு மலைகளை ஏழு குதிரைகள் என கருதி ரதசப்தமி அன்று ஏழு வாகனங்களில் ஏழுமலையான் மாட வீதிகளில் ஊர்வலம் வருவார். ஸ்ரீ ரங்கம் ரங்கநாதர் கோயிலிலும் ரத சப்தமி சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

### ரத சப்தமி பலன்கள்:

ரத சப்தமி அன்று விரதம் மேற்கொண்டு, எருக்கன் இலைகளைத் தலையில் வைத்துக்கொண்டு சாஸ்திரத்தில் சொல்லியபடி நீராடினால் தெரிந்தோ, தெரியாமலோ, செய்த சகல பாவங்கள் நீங்கும், நவக்கிரக தோஷம் அகலும்,
ஏழு ஜன்மங்களில் செய்த பாவங்களும் நம்மை விட்டு விலகிவிடும் என்பது நம்பிக்கை. மற்றும் நீடித்த ஆயுள், இளமை, உயர்ந்த அறிவு, நிறைந்த செல்வம், சிறந்த ஆரோக்கியம் மற்றும் சிறப்பான வாழ்வு கிட்டும்.

ரதசப்தமி நாளில் செய்யப்படும் தர்மத்திற்கு பலமடங்கு புண்ணியம் உண்டு. இந்த நாளில் தொடங்கும் தொழில் பெருகும். பெண்கள் உயர்நிலையை அடைவர் இந்த நாள் தியானம், யோகா செய்ய சிறந்தது.

### சூரிய காயத்ரி மந்திரம்:

ஓம் அச்வ த்வஜாய வித்மஹே
பாச ஹஸ்தாய தீமஹி
தந்நோ ஸீர்ய ப்ரசோதயாத்

# உலகம் போற்றும் ஸ்ரீ காஞ்சி மட பீடாதிபதி!

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

"ஸம்பத், ஸாம்ராஜ்யாதிகளுக்காக ஸ்ரீமகாலட்சுமியிடம் போக வேண்டுமென்றும், பாப நிவாரணத்துக்கு "குரு" விடம் போக வேண்டுமென்றும் நடைமுறையில் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஆதி ஆசார்யாள் ஸ்ரீமகாலட்சுமியிடம் பிரார்த்தித்ததையே நாம் கொஞ்சம் மாற்றி குருவிடம் பிரார்த்திக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

"எங்களுடைய துரிதங்களை உதாரணம் செய்வதற்காக அயராமல் பாடுபடும் தங்களுக்குச் செய்யும் நமஸ்காரமே எங்களை விட்டு என்றும் நீங்காத நிதியாக இருக்க வேண்டும்" என்று பிரார்த்தித்து, திரும்பத் திரும்ப நமஸ்காரம் பண்ணிக் கொண்டு, அவருடைய அனுக்ரஹமான கனக தாரையைப் பெற்று, ஆனந்தமாக, பஞ்சு மாதிரி லேசாக ஆகிவிட வேண்டும்" என ஒரு உபன்யாசத்தில் ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அருளியுள்ளார்கள்.

இத்தகைய புண்ணிய புருஷரால் கண்டு பிடிக்கப்பட்டும், தேர்ந்தெடுக்கப்பட்டும் உள்ள இரண்டு புண்ணிய குருமார்களாக திகழ்வார்கள் காஞ்சி காமகோடி பீட 69 வது, பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளும், இன்றைய 70ம் பீடாதிபதியான விளங்கும் ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் ஆவார்கள்.

நிகழும் ப்லவ ஆண்டில் இடம்பெறும் மாசி மாத 15ந் தேதி (27.2.2022) ஏகாதசி திதி கூடிய ஞாயிற்றுக்கிழமை புண்ணிய தினத்தில் காஞ்சி ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் ஜெயந்தி மகோற்சவம் உலகெங்கும் மிகச்சிறப்பாக கொண்டாடவிருக்கும் இவ்வேளையில், காஞ்சி மடத்தின் 70 வது பீடாதிபதியான, அந்தப் புண்ணிய புருடரைப் பற்றிய சில செய்திகளை அறியலாம்.
ஸ்ரீ சங்கரனின் வேதம் மற்றும் சாஸ்திர திறன், கூர்மையான அறிவு, பழகும் தன்மை ஆகியவற்றை அப்போதே எடை போட்டுவிட்ட காஞ்சி மகான், இச்சிறுவரை துறவு மார்க்கத்தில் ஈடுபடச் செய்தால் அது நற்பயன் விளைவிக்கும் என முடிவு செய்து விட்டார்.

காஞ்சி மகா சுவாமிகளிடம் கொண்ட அதீத பக்தி, ஈடுபாட்டால், ஸ்ரீ சங்கரன் தனது இளவயதிலேயே மிகக் கடினமானது என கருதப்படும் தசகம் ஸ்தோத்திரங்களை மகானை குறித்து இயற்றினார்.

அதில் இடம் பெறும் ஒரு சுலோகம் இப்படித் தொடங்கும்
"ஸ்ருதி ஸ்ம்ருதி புராணோக்த தர்ம மார்க ரதம் குரு! பக்தா நாம் ஹித வக்தாரம் நமஸ்யே சித்த சுத்தயே!!"
என்பது இதன் சுருக்கமான பொருள்.
"வேதங்களிலும, ஸ்மிருதிகளிலும் கூறப்பட்ட தர்மங்களை அனுஷ்டித்துக் காட்டுவதில் ஈடுபடுபவரும்,
ஜகத் குருவாக விளங்குபவரும், பக்தர்களுக்கு நன்மைகள் புகட்டுபவருமான ஸ்ரீ



ஸ்ரீ குருவை மனத்தூய்மை பேறு பெறுவதற்காக வணங்குகிறேன்.
ஆதிசங்கர பகவத் பாதரின் பாதகமலங்களில் ஈடுபட்ட மனதை உடையவரான ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகரரின் கருணை கடாட்சம் என்னிடம் உண்டாகும்” என்று.
தன்னை கடைசியாக ஸ்ரீசங்கரர் தரிசித்து ஆசி பெற்ற சில மாதங்கள் கழித்து, அவருடைய பெற்றோர்களை தனது முகாமிற்கு வரவழைத்த காஞ்சி மகா சுவாமிகள், அவரை துறவியாக்கும் தனது எண்ணத்தை வெளியிட்டு, அவர்களுடைய பரிபூரண சம்மதத்தை பெற்றதோடு, இச்செய்தி ஸ்ரீசங்கரர் உள்பட அனைவருக்கும் தெரியாத ரகசியமாகவே இருக்க வேண்டும் சில காலத்திற்கு என அனைவரையும் கேட்டு விட்டார்.
அதன்பிறகு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளை வரவழைத்து, விஷயத்தைக் கூறி அந்த சுவாமிகளே திரு சங்கரனுக்கு உரிய நேரத்தில் துறவை மேற்கொள்ள வேண்டும் என்ற தன் விருப்பத்தையும் தெரிவித்துவிட்டார்.
அதற்கப்புறம், ஸ்ரீ சங்கரனுக்கு அவர் துறவு ஏற்கவிருக்கும் செய்தி தெரிவிக்கப்பட்ட போது, அவர் மனப்பூர்வமாக இதனை ஏற்றுக்கொண்டார். கொஞ்ச நாட்கள் கழித்து ஸ்ரீ சங்கரன் தன் பெற்றோர்களோடு, அச்சமயம் ஐதராபாத்தில் காஞ்சி மகான் முகாமிட்ட இடத்திற்கு பயணித்து, அவர்களை தரிசித்து ஆசி பெற்று காஞ்சிபுரம் மடத்திற்கு வந்து சேர்ந்தார்.
காஞ்சி மகா சுவாமிகள் திரு சங்கரன் துறவு ஏற்க வேண்டிய புண்ணிய நாள் 1983 ஆம் ஆண்டு மே 29ம் தேதி என குறித்து தந்துவிட்டார். அந்த அபூர்வ தினம், துறவு வழங்கும் நாழிகை போன்றவைகள், இதற்கடுத்து வரும் ஐந்தாண்டுகளுக்கு கிடையாது என்பதனாலேயே மகா பெரியவாள் அந்த மே 29ம் தேதியை தேர்ந்தெடுத்தார் எனக் கூறப்படுகிறது.
1983 ம் ஆண்டு மே 29ம் தேதி புண்ணிய தினத்தை எவராலும் மறக்கமுடியாது.

அந்தன்னாளில் காஞ்சிபுரம் காமாட்சி கோயில் பூரணப் பொலிவுடன் விழாக்கோலம் பூண்டு காணப்பட்டது. ஸ்ரீசங்கரர் துறவு வழங்கும் நிகழ்ச்சி அவ்வாலய திருக்குளத்தில் நடத்தப்பட்டது.
ஆலய புண்ணிய குளத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டிருந்தனர். (அதில் அடியேனும் ஒருவன்!) காலை 5 மணியான அத்தருணத்தில் ஆலயத்திற்குள் எதிர் கரையில் காஞ்சி பீடாதிபதியான ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஆக்ஞையிட்டபடி இருக்க, அதன்படி வேத விற்பனர்கள் உரிய சடங்குகளை செய்தும், மந்திர உச்சாடனங்களை செய்து கொண்டும் இருந்தனர்.

இந்தத் துறவு சிறப்பு நிகழ்ச்சிக்கான முறைப்படி பூஜைகள், சடங்குகள் காஞ்சி மகானின் வழிகாட்டல்கள் படி மிகச் சிறப்பாக நடந்தேறின. துறவு ஏற்பவர்கள், முதல் நாள் இரவு முழுமைக்கும் துளிகூட உறங்கக் கூடாது என்ற சாஸ்திர விதியை முன்னாள் ஸ்ரீ சங்கரன் திருநாமம் பூண்டவர் அருளித் தந்தார்.

ஸ்ரீ சங்கரன் காமாட்சி ஆலயக் குளத்தின் படிக்கட்டுகளிலிருந்து இறங்கி, அதில் இருந்து நகர்ந்து அவருடைய இடுப்பளவு நீரில் மூழ்கியபடி இருக்க, தன் ஸ்நானத்தை வெள்ளை உடை உடுத்தி முடித்தார். அதன் பின்பு கூட படிக்கட்டில் நின்று இருந்தார் ஜெயேந்திர சுவாமிகள் தன் கையில் ரெடியாக வைத்திருந்த காவி உடையை திரு சங்கரன் பணிவுடன் பெற்றுக்கொண்டார். கையை நனைத்துவிட்டு தன் பொலிவு கூடிய வாகனத்துடன் காட்சி அளித்தார் சிறுவனான சுவாமிகள். அக்கோலத்தில் சுவாமிகளை கண்டு எல்லா பக்தர்களும் ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர வான் அத்ர முழக்கமிட்ட காட்சி அற்புதமானது.
இந்த இளம் வயதிலேயே தன் வாழ்க்கையை அர்ப்பணித்த அவருடைய முன்னாள் தகப்பனார் கண்ணீர் சிந்தாமல் நிச்சயமான முகத்துடன் இருக்க, யாரோ பெற்ற பயன் என்பதால் குலுங்கி குலுங்கி அழுது கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
புதிய தேஜஸ் கொண்டு, குளத்தின் கரைபடிக்கட்டுக்கு வந்துவிட்ட இளஞ்சுவாமிகள் வதனம் எவ்வித உணர்ச்சியையும் வெளிப்படுத்தாத நிலையில் வைராக்கிய தோற்றம் கொண்டு காட்சியளித்தது.

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் காவி உடை போன்ற இளஞ்சுவாமிக்கு முறைப்படியான புனித கமண்டலம், புனித தண்டம் இரண்டையும் வழங்குகையில் மங்கல வாத்தியங்கள் இசைக்கப்பட்டு, பல வேத விற்பன்னர்களின் மந்திரங்களை உச்சரிக்க, அதிர்வேட்டுகள் முழங்கி, அந்நிகழ்ச்சிக்கு களை சேர்த்தன.
அடுத்த நிகழ்ச்சியாக 69 வது மற்றும் புதிய 70 வது ஸ்ரீ சங்கர மட பீடாதிபதிகள் காமாட்சி ஆலய உட்பக்க “ சுவாமி“ தரிசனம் பெற கிளம்பினர்.
புதிய பீடாதிபதி பதவி ஏற்பதை முன்னிட்டு அன்று ஸ்ரீ காமாட்சி அம்பாளுக்கு இரண்டு ஆச்சரிய சுவாமிகளாலும் 1008 கலாசாபிஷேகம் நடத்தும் வைபவம் அரங்கேறியது.

ஸ்ரீ காமாட்சி ஆலயத்தில் எழுந்தருளியுள்ள அத்தனை தெய்வங்களையும் தரிசித்து முடித்துவிட்ட, ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளை, அந்தக்

கோயிலில் இருந்து நகரை ஊர்வலமாக பலர்சூழ காஞ்சி சாலை வழியே சென்று ஸ்ரீ மடத்தில் கொண்டு விட்டனர். அந்த பலரில் இந்த கட்டுரையாளனும் உடன் செல்லும் வாய்ப்பினைப் பெற்றேன்.

1985ம் ஆண்டின் ஜூலை மாதத்தில், பல மாதங்களுக்கு முன்பே நாடெங்கும் திக்விஜயம் செய்து கொண்டு ஆந்திர கர்னூல் நகரில் காஞ்சி மகா பெரியவாள் முகாமிட்டு தங்கியிருந்தார்கள்.

காஞ்சி மட 70ம் பீடாதிபதியாக நியமனம் ஆன ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தனது குருநாதரான ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளுடன் கர்னூல் முகாம் சென்று அந்த மகா குரு நாதரை வழிபட்டு ஆசிகள் பெற்றார்.

கர்னூல் முகாமில் மூன்று ஆசாரிய சுவாமிகளும் ஒன்று சேர்ந்து நடத்திய வியாச பூஜை விழா மிகப் பிரம்மாண்டமாக நடத்தப்பட்டு, ஆயிரக்கணக்கான மக்களை குதூகலத்தில் ஆழ்த்திவிட்டது. இப்பூஜையை முன்னிட்டு நடத்தப்பட்ட அரிய ஊர்வலங்கள், வித்வத் சதஸ் போன்றவைகளை அவ்வூரார் என்றும் மறக்காத படி அமைந்துவிட்டது.

தன்னுடைய குருமார்களான இரண்டு ஆசார்ய ஸ்வாமிகளின் வழி நடந்து வரும் காஞ்சி 70வது பீடாதிபதியான ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் ஸ்ரீ மடத்தின் பொறுப்பை ஏற்ற பிறகு எண்ணிக்கையற்ற அளவுக்கு பல ஆலய புணரமைப்பு பணிகள், கும்பாபிஷேகங்கள், கல்வி வசதிகள், வேத பாடசாலைகள் அமைத்தல், சமூகப்பணிகள், ஆன்மீக முன்னேற்றப் பணிகள், அயல் நாடுகளிலும் இந்துக் கோயில்கள் உருவாக்கம், புதிய கல்லூரிகள் உருவாக்கல் போன்ற அனைத்து பணிகளையும் செய்து வருகிறார்கள்.

நம் நாட்டில் தற்போது நிலவி வரும் இளைஞர்களின் சீர் கெட்டு வரும் ஒழுக்கமின்மை, தாழ்ந்த நிலையுள்ள அவர்களுடைய கல்வித்திறன் ஆர்வம், ஆர்வமற்ற கலாச்சாரம் இவற்றை மனதிற்கொண்டு சுவாமிகள் அடிக்கடி இளைஞர்களுக்கான நல்வழி காட்டும் பயிற்சி முகாம்கள் சுவாமிகளால் உருவாக்கப்பட்ட பக்தி கேந்திரா, தர்மகேந்திரா போன்ற அமைப்புகள் மூலம் நடத்த ஏற்பாடு செய்துள்ளார்கள்.

காஞ்சிபுரம் சமீபமுள்ள ஏனாதூரில் ஸ்ரீ சங்கரா கலை கல்லூரி துவக்க காரணமாகிறார் ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

அந்தக் கல்லூரியில் சுவாமிகள் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சர்வதேச நூலகம், மற்றும் ஆராய்ச்சி மையம் உருவாக்கி அது செம்மையாக நடத்த தக்க ஏற்பாடுகள் செய்துள்ளார்கள்.

ஸ்ரீ மடத்தைச் சார்ந்த இந்து சமய மன்றம் மூலமும், பல ஆன்மீக நூல்கள் பண்டைய இலக்கியங்கள் அச்சிடப்பட்டு வெளியாகி வருகின்றன. தவிர அடிக்கடி இம்மன்றம் மூலம் அநேக சமய சொற்பொழிவுகள் நடத்தப்படுகின்றன.

ஸ்ரீ விஜயேந்திர சுவாமிகள் மேற்கொண்ட பல்வேறு நற்பணிகளில் ஒன்றான வேத பாடசாலைகள் அமைத்தலின் மற்றும் விரிவாக்கத்தின் நற்பயன் ஆக நான்கு வேதங்களிலும் திறன் பெற்ற பல வேத வித்யார்த்திகள் உருவாக்கியுள்ளனர்.

உலக நன்மைக்காக அடிக்கடி தொடர்ந்து பல யாகங்கள் ஸ்ரீமடம் சார்பாக நாடெங்கும் நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீ காஞ்சி மட 70ம் பீடாதிபதியான ஸ்ரீ விஜயேந்திர சங்கராச்சாரியார் சரஸ்வதி சுவாமிகள் ஒரு உபன்யாசத்தில் அருளியுள்ள செய்தியே இக்கட்டுரையின் முத்தாய்ப்பாக அமையும்.

”குருபக்தி முக்கியமானது. குருபக்தியின் மூலமே இறைவனை அடைய முடியும். ஆதிசங்கரரின் வாழ்க்கை வரலாற்றை எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் அம்மகான் காட்டிய வழியில் நடக்க வேண்டும். அதுதான் நமது வாழ்வின் முக்கிய நோக்கமாக, குறிக்கோளாக இருக்க வேண்டும். குரு வழியில் நம் பாதையை அமைத்துக் கொண்டால் நம்மால் எதுவும் செய்ய முடியும்”. என. ஜெய ஜெய சங்கர! ஹர ஹர சங்கர!!



## அதிகார நந்தி வாகனம்

இந்த நந்தி வாகனத்தில், நந்தி மனித உடல், காளை முகம் கொண்டிருப்பார். இவரது பின்கைகளில் கோடாரி, துள்ளும் மான் இருக்க, இரு முன்கரங்கள் வணயமும் தூக்கிய நிலையில் அமைக்கப்பட்டு இருக்கும்.

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள ஆதிபுரீஸ்வரர் கோயிலில் இவ் வாகனம் உள்ளது.

~ ரா.பன்னீர் செல்வம்

# திருவானைக்காவல்

பஞ்சபூத தலங்களில் நீர்த்தலமாக விளங்குவது. இந்த திருவானைக்காவல் என்னும் தலம். இங்கு அருள்புரியும் இறைவன் ஜம்புகேஸ்வரர் என்றும் அம்பாள் அகிலாண்டேஸ்வரி என்றும் திருப்பெயரிட்டு அழைக்கப்படுகிறார்கள்.

சக்தி பீடங்களில் ஒன்றான இத்திருத்தலத்தில் அன்னை அகிலாண்டேஸ்வரி, உலக நன்மைக்காக இறைவனை வேண்டி இங்கு ஆடி மாதத்தில் தவமிருந்ததாக ஐதீகம். காவிரி நீரால் லிங்கம் அமைத்து அன்னை வழிபட, இறைவன் அதிலே எழுந்தருளி அருள்புரிந்து வருகிறார்.

பிரம்மனின் தோஷ நிவர்த்திக்காக கயிலையில் இருந்து இறைவனும் இறைவியும் இத்தலத்திற்கு வந்தபோது இறைவன் சேலை அணிந்து மாறு வேடத்தில் வந்தார் என புராணம் கூறுகிறது.

உச்சி வேளை பூஜையில் அம்பாள் இறைவனை பூஜிப்பதாக ஐதீகம் என்பதால், இந்த உச்சிக்கால பூஜையின் போது அர்ச்சகர் அம்பாள் போலவே, அவள் அணிந்த புடவை, கிரீடம் அணிந்து சுவாமி சந்நிதியில் பூஜை செய்து வருவது தினந்தோறும் நடைபெறும் வழக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.



# தில தர்ப்பணம்

நமது முன்னோர்களின் ஆன்மாவை சாந்தியடையச் செய்து, அந்த ஆன்மாக்களை முக்தி அடையச் செய்வதன் மூலமே நாமும் நமது சந்ததிகளும் வாழ்வில் எல்லா வளமும் பெற்று, ஆசி வழங்கும் வகையில் முன்னோர்களின் ஆன்மாவை குளிர செய்யவே தர்ப்பணங்கள் அவசியமாகின்றன.



நம் இந்திய திருநாட்டில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்வதற்காகவே நான்கு சக்திமிக்க தலங்கள் உள்ளன. அவை ராமபிரான், சீதையோடு வந்து சிவலிங்கத்தை நிறுவி வழிபட்ட ராமேஸ்வரம், ராமபிரான் தனது தந்தை தசரதருக்கு தர்ப்பணம் செய்த திலதர்ப்பணபுரி முன்னோர்களுக்கு முக்தி வழங்கும் காசி (கயா), மகாவிஷ்ணுவின் ஆறாவது அவதாரமான பரசுராமன், தான் கொன்ற ஷத்திரியர்களுக்கு தர்பணம் கொடுத்த கேரளாவின் தென் கங்கை போன்றவை தர்ப்பணம் செய்ய ஏற்ற தலங்களாகும்.

மேற்கண்ட தளங்களில் உங்கள் முன்னோருக்கு தர்ப்பணம் கொடுத்து சாந்தி அடையச் செய்வதோடு மட்டுமல்லாமல், ஆண்டு முழுவதும் தர்ப்பணம் செய்ய சிறப்பு தொகுப்பும் Astrovedல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் 12 அமாவாசைகளில் குறிப்பிட்ட தலங்களில் தர்ப்பணம் கொடுக்கவும், 12 தமிழ் மாதங்களில் முதல் நாளில் தர்ப்பணம் கொடுக்கவும் சூரிய கிரகணம் மற்றும் சந்திர கிரகணம் போன்ற நாட்களிலும் நாம் மேலே குறிப்பிட்ட சக்தி மிகுந்த தலங்களில் தர்ப்பணம் கொடுக்கவும் எங்கள் 1 ஆண்டு தர்ப்பண தொகுப்புத் திட்டத்தை பயன்படுத்தி முன்னோர் ஆசியைப் பெறுங்கள்.

# தாய்ப்பாசம்!

~ ஆர். எஸ். மணி

இந்துமதம் போற்றும் மகான் ஆதி சங்கர பகவத் பாதாள் இளம் பிராயத்திலேயே துறவறம் பூண்ட பாக்கியவான்!

துறவு ஏற்கையில் அவருடைய அன்னை ஸ்ரீ ஆர்யாம்பாளிடம், தான் தாயின் கடைசி நேரத்தில், அவருக்கு உண்டான கர்ம காரியங்களை செய்ய வருவேன் என உறுதி தந்திருந்தார்.

அப்படியே ஆதிசங்கரர், தனது அம்மாவின் மரண காலத்தில் வந்து தனக்குண்டான கடமைகளைச் செய்து விட்டு, தனது அன்னை தனக்கு துறவு ஏற்கும் காலம் வரை பட்ட பாடுகள், தியாகங்கள் அனைத்தையும் நினைத்துப் பார்த்து, புலம்பித் துயரமுடன் பாடிய ஐந்து சுலோகங்களே இன்று புகழ்பெற்று விளங்கும் "மாத்ரு பஞ்சகம்" என்ற சமஸ்கிருத பாடல்கள்!

அந்த ஐந்து பாடல்களில், இரண்டாம் பாடலாக அமைந்தது இது

"குருகுல முபஸ் ருத்ய ஸ்வப்ன காலே துத்ருஷ்ட் வா
யதி ஸமுசித வேவும் ப்ராளு தோ
மாம் த்வமுச்சை: குருகுல மதஸர்வம் ப்ராகு தத்தே ஸமக்ஷம் ஸபதி சரணயோஸ்தே மாதரஸ்து ப்ரணாம:"

### இதன் தமிழ் சுருக்கம்

பொதுவாக எந்த அன்னையும் கொண்ட மனது ஒரே மாதிரியாகத்தான் இருக்கும், அதாவது ஸ்வப்பனத்தில் கூட தன் குழந்தை எக்காலத்தும் தன்னை விட்டுப் பிரியக்கூடாதென!

அதனை மகான் ஆதிசங்கரர் மேற்கண்ட பாடலால் நினைத்துப் பார்த்து புலம்புகிறார்.

"சங்கரரின் குருகுலவாசம் நடந்து கொண்டிருக்கிறது. அச்சமயம் ஒரு நாள் அதிகாலையில் அவருடைய தாயார் கண்ட கனவில், தன்பிள்ளை சங்கரன் சன்னியாசம் மேற்கொள்ளும் காட்சி ஒன்றை கண்டுவிட்டார்.

"கடவுளே! இது என்ன சோதனை!

எனது ஒரே பிள்ளை, இப்படி துறவியாகி விட்டால் எனப் பதறி போய், உடனே தனது இருப்பிடம் விலகி, குருகுலவாச பள்ளிக்கு ஓடோடி போய் அந்த செல்ல மகனை கட்டி அழுது விடுகிறார். அப்போது அப்பள்ளியில் இருந்த அனைவரும் இதற்கான காரணத்தை வினவவே, அத்தாய் தனது கனவு பலித்து விடுமோ என பயந்து கனவு பற்றிக் கூற, அந்த சோகம் அவர்களையும் தாக்கி அவர்களும் கதறி அழுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியைக் கூறி அழுத ஸ்ரீ சங்கரர் "தாயே! கனவில் கூட நான் உன்னை விட்டு பிரிந்து விடக் கூடாதே என இருந்தாயே!

அப்படிப்பட்ட என் அருமையான அம்மாவே, "உன் திருவடிகளில் விழுந்து கதறுகிறேன்" என்று கூறியவாறு நமஸ்காரம் செய்தாராம்!

துறவியைக் கூட தாய் பாசம் விலகுவதில்லை!
அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை!



# திருக்கண்ணமங்கை

~ ரா.பன்னீர் செல்வம்

திருவாரூரை அடுத்துள்ள திருக்கண்ண மங்கை என்னும் திருத்தலம் 108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றான சிறப்பினை பெற்றதாகும்.

இத்தலத்துப் பெருமாள் பக்தவத்சலப் பெருமாள் என பக்தர்களால் போற்றப்படுகிறார். இந்த பெருமாளானவர் தன்னை வணங்கும் பக்தர்களை தன் ஆவியாய் நினைத்து அருள்புரிந்து வருவதால் இவருக்கு
“பத்தராவி பெருமாள்“ என்னும் திருநாமமும் உண்டு.

இத்தலம் மகாலட்சுமியும் மகாவிஷ்ணுவும் மணம் புரிந்து கொண்ட திருத்தலம் என புராணங்களில் போற்றப்படுகிறது.
தேவாசுரர்கள் பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட மகாலட்சுமி, திருமாலின் பேரழகினைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி கொண்டார். அந்தப் மாலவனையே வணங்க வேண்டும் என்கிற ஆவல் உந்த, தன் எண்ணத்தை பூர்த்தி செய்ய இந்த தலத்திற்கு வந்து மகாவிஷ்ணுவை மணமுடித்தார் என்று புராண வரலாறு கூறுகிறது.

செல்வங்கள் அருளுகின்ற ஸ்ரீதேவியும் சீர்மேவும் மாலவனும் மணமுடிப்பதை கண்குளிரக் காண வேண்டும் என்னும் பேராவலில் முப்பத்து முக்கோடி தேவர்களும் இத்தலத்தில் குவிந்தனர்.
திருமணமும் இனிதே நடந்தேறியது. அந்த தெய்வீக திருமணத்தினை மனதாரக் கண்ட தேவர்கள் அனைவருமே, இந்த திருமணக் கோலத்தினை எத்தனை யுகங்கள் ஆனாலும் கண்டு மனம் குளிர வேண்டும் என பகவானை வேண்டிக் கொண்டு இத்தலத்திலேயே தங்கி விட உத்தரவு கேட்டனர்.

பரந்தாமனும் சம்மதித்தார். அதன்படி, தேவர்கள் அனைவரும் தேனீக்கள் வடிவத்தில் இந்த தலத்திலேயே உள்ளனர். தாயார் சந்நிதியின் வடபுறத்தில் இன்றும் உள்ள தேன்கூட்டில் தேவர்கள் தேனீக்களாய் இருந்து தினந்தினம் மகாலட்சுமியின் திருமணக் கோலத்தை தரிசனம் செய்வதாக ஐதீகம் இன்றுவரை தொடர்கிறது.

இந்த தேன்கூடு எப்போதிலிருந்து இங்கு உள்ளது என்பது இன்னும் வரையறுக்க முடியவில்லை என்று கூறுகின்றனர்.
இத்தலத்தில் உள்ள பலி பீடம் பிரம்மாண்டமும் கலை யம்சமும் கொண்டதாய் உள்ளதே தனிச் சிறப்பென்று கூறலாம்.



# பிப்ரவரி மாத பலன்கள் – 2022

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்




கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும். இளம் வயது அன்பர்களுக்கு, உங்களில் சிலருக்கு மனதில் காதல் அரும்பும் தம்பதிகளுக்கிடையே நல்லுறவு காணப்படும். குழந்தைகளுடனான உறவு வலுப்படும். குடும்பத்தில் உள்ளவர்களிடம் நல்லிணக்கம் கூடும். தங்களின் பணப்புழக்கம் அதிகரிக்கும். ஸ்திரமான நிதிநிலை இருக்கும். பெரிய அளவில் நஷ்டங்கள் ஏதும் ஏற்படாது என்பது உங்களுக்கு ஆறுதலான விஷயமாக இருக்கும். உங்கள் சேமிப்பைக் கொண்டு உங்கள் செலவுகளை சமாளித்துக் கொள்வீர்கள். குடுமபத்தில் வசதிகள் மற்றும் ஆடம்பரம் பெருகும். வேலை செய்யும் இடத்தில் நீங்கள் பிறரை விமர்சிக்கவும் அதனால் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும் வேண்டிய சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. பேச்சில் கவனம் தேவை. கடுமையான வார்த்தைகளைத் தவிருங்கள். சுயதொழில் மூலம் நல்ல லாபங்களை எதிர்பார்க்கலாம். தொழில் கூட்டாளி மூலம் நல்ல ஆதாயங்களை பெறமுடியும். பயணங்கள் மூலம் புதிய தொழில் வாய்ப்புகளைப் பெறுவீர்கள். ஏற்றுமதி தொழிலில் உள்ளவர்கள் நல்ல லாபங்களை எதிர்பார்க்கலாம். மத்திம வயதில் இருப்பவர்கள் கழுத்து வலி மற்றும் உடல் வலி போன்ற உபாதைகளை சந்திக்க நேரும். உடனடியாக மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது நல்லது. மாணவர்கள் ஆசிரியர் மற்றும் பெற்றோரின் வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்.

சுப நாட்கள்:
3, 5, 6, 7, 11, 12, 13.

அசுப நாட்கள்:
1, 2, 4, 8, 9, 10.





இந்த மாதம் உங்கள் குடும்ப உறவுகளுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும் மாதமாக இருக்கும். காதலில் வெற்றி கிடைக்கும். தம்பதிகளுக்கு இடையே அன்னியோன்யம் கூடும். நிதிநிலையைப் பொறுத்தவரை உங்களுக்கு அதிர்ஷ்டகரமான மாதமாக இருக்கும். இந்த மாதம் உங்கள் பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். கடந்த கால முதலீடுகளின் மூலம் லாபம் பெறும் வாய்ப்பு உள்ளது. வீடு மராமத்துப் பணி போன்ற வகையில் செலவுகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உத்தியோகம் குறித்த முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்பு அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவு எடுங்கள். பணியிடத்தில் உங்கள் பொறுப்புகளை சரிவர நிறைவேற்றி அதிகாரிகளிடம் நல்ல பெயர் வாங்குவீர்கள். சுயதொழில் செய்பவர்கள் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெறுவீர்கள். வியாபாரத்தில் வெற்றி கிடைக்கும். தகவல் தொடர்புத்துறை, மற்றும் ஐடி போன்ற துறைகளில் தொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு கூடும். பங்கு வர்த்தக தொழில் செய்பவர்களுக்கு நல்ல தன வரவும் அதிக லாபமும் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிறுநீரகம் சம்மந்தப்பட்ட உடல்நல பாதிப்பு ஏற்படலாம். போதுமான நீர் உட்கொண்டு இந்த பாதிப்பிலிருந்து தப்பிக்கலாம். தாய் மற்றும் தந்தையின் உடல் நலனில் அக்கறை தேவை. மாணவர்களின் கிரகிக்கும் திறன் கூடும். கல்வியில் வெற்றி பெறுவார்கள்.

சுப நாட்கள்:
11, 12, 13, 14, 18, 19.
அசுப நாட்கள்:
1, 2, 25, 26, 27, 28.




இந்த மாதம் புதிய நண்பர்களைச் சந்திக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. தம்பதிகளுக்கு இந்த மாதம் அனுகூலமான மாதமாக இருக்கும். திருமண உறவில் நுழைய தடை தாமதம் ஏற்பட்டவர்களுக்கு ஏற்ற துணை கிடைக்கும். நீங்கள் அனுசரித்துச் செல்வதன் மூலம் குடும்ப உறவுகள் சீராகவும் அமைதியாகவும் இருக்கும். உங்கள் பொருளாதார நிலை ஏற்றம் காணும் வகையில் கிரக நிலைகள் உள்ளன. பங்கு வத்தக நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கும் லாபங்களை ஈட்டுவதற்கும் இந்த மாதம் ஏற்றதாக உள்ளது. புதிய நண்பர்கள் மூலம் உங்களுக்கு தன உதவி கிடைக்கும். தங்களின் பொருளாதார நிலையும் சிறப்பாக இருக்கும். தங்களின் உத்தியோகத்தில் சாதனைகளைப் புரிவதற்கு வாய்ப்பு உள்ளது. உங்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. அரசு பணியில் இருப்பவர்களுக்கு இந்த மாதம் சிறப்பாக இருக்கும். தன்னுடன் பணிபுரிபவர்களிடம் சுமூகமான உறவு ஏற்படும். உங்கள் திறமை மேலதிகாரிகளால் பாராட்டப்படும். சுயதொழில் செய்பவர்கள் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெறுவார்கள். வியாபாரத்தில் வெற்றி கிடைக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள புதிய தொழிலைத் தொடங்குவார்கள். வியாபாரம் மேற்கொள்பவர்கள் பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைப் பெறுவீர்கள். மாணவர்களின் கிரகிக்கும் திறன் கூடும். கல்வியில் சிறந்து விளங்குவார்கள்.

சுப நாட்கள்:
3, 5, 6, 7, 11, 12, 13.
அசுப நாட்கள்:
1, 2, 27, 28.




இந்த மாதம் காதல் கைகூடும். குடும்பத்தில் அன்பும் அமைதியும் நிலவும். திருமணத்திற்காக காத்திருப்பவர்களுக்கு திருமணம் கைகூடும். கணவன் மனைவிக்கு இடையே நல்லிணக்கம் கூடும். குடும்பத்தில் உள்ளவர்களுக்கு இடையே நல்லுறவு நீடிக்கும். சுயதொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். அதன் மூலம் தன நிலையில் ஏற்றம் உண்டாகும். வீடு மராமத்துப் பணி மற்றும் வீட்டிற்கு வெள்ளை அடித்தல் போன்ற வகையில் செலவுகள் ஏற்படும். குழந்தைகளின் படிப்பிற்கான செலவுகள் அதிகரிக்கும். பங்கு வர்த்தகத்தில் முக்கியமான முடிவுகள் எதையும் இந்த மாதம் எடுக்காதீர்கள். ஏனெனில் அதில் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். சக பணியாளர்களிடம் சுமூகமான உறவு நீடிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை செய்யும் இடத்தில் புதிய வழிமுறைகளை பின்பற்றி வெற்றிகாண்பீர்கள். அதன் மூலம் உயரதிகாரிகளின் பாராட்டுதலை பெறுவீர்கள். இந்த மாதத்தில் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். இந்த மாதம் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் கிட்டும். உத்தியோகத்தில் கழுத்து வலி மற்றும் தோள்பட்டை வலி போன்ற பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் ஆரோக்கியத்தை பாதுகாக்க உடற்பயிற்சி மேற்கொள்வது நன்மை பயக்கும். மாணவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும்.

சுப நாட்கள்:
5, 6, 7, 15, 16.
அசுப நாட்கள்:
1, 2, 3, 4,




திருமணமான அன்பர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்கி அவர்களுடன் கலந்து உறவாடுவதன் மூலம் உறவு வலுப்படும். நண்பர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள்.

குழந்தைகளுடனான உறவு வலுப்படும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள், விருந்து மற்றும் விசேஷங்கள் நடக்கும். இந்த மாதம் அதிக ஆடம்பர செலவுகளைச் செய்யாமல் செலவை கட்டுபடுத்துங்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வார்கள். பணியிடத்தில் பதவி உயர்வு கிட்டும். அதன் மூலம் உங்கள் வருமானம் உயரும். வெளிநாட்டில் வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும்.

இந்த மாதத்தில் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். இந்த மாதம் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் கிட்டும். கூட்டுத் தொழில் செய்பவர்கள், சுமுகமான முறையில் தொழில் நடக்கவும் தொழிலில் வெற்றி காணவும் அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது இருக்கும். தினமும் உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தி கொள்ள முடியும். மாணவர்கள் இந்த மாதம் கல்வியில் சிறந்த வெற்றி காண்பார்கள்.

சுப நாட்கள்:
3, 11, 12, 13, 17, 18, 19, 20.
அசுப நாட்கள்:
1, 2, 4, 5, 6. 8, 9, 10.




இந்த மாதம் திருமண உறவு மற்றும் குழந்தைகளுடனான உறவுகள் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் உள்ள பெரியவர்களிடம் கருத்து வேறுபாடுகள் எழ வாய்ப்புகள் உண்டு. உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. தம்பதிகள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து நடந்து கொள்வதன் மூலம் நல்லுறவு நீடிக்கும். . நண்பர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். வீட்டில் உள்ள பெரியவர்களின் உடல் நலனில் அக்கறை தேவை. பண வரவு அதிகமாக இருக்கும். பழைய கடன்களை அடைக்கும் வாய்ப்பு உருவாகும். நிலம் மற்றும் புதிய வண்டி வாங்கும் வாய்ப்புகள் உருவாகும். பங்கு வர்த்தகத்தில் நல்ல லாபத்தை எதிர்பார்க்கலாம். புதிய முதலீடுகளை தவிப்பது நலம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் இந்த மாதம் பணியில் சில முன்னேற்றங்களையும் பணியிடத்தில் பெயரும் புகழும் பெறுவீர்கள். பணிபுரியும் இடத்தில் சக பணியாளர்கள் நட்புணர்வுடன் பழகுவார்கள். இந்த மாதம் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொழில் செய்பவர்கள் நல்ல லாபங்களை எதிர்பார்க்கலாம். சத்தான ஆகாரங்களை உட்கொள்ளுங்கள். அதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியும். மாணவர்கள் மனதில் இந்த மாதம் தன்னம்பிக்கை நிறைந்து இருக்கும். கவனமுடன் படித்து எளிதில் வெற்றி காண்பார்கள்.

சுப நாட்கள்:
6, 11, 12, 13, 14, 18, 19, 21.
அசுப நாட்கள்:
1, 2, 7, 8, 9, 10.




இந்த மாதம் குடும்ப உறவுகள் சிறப்பாக இருக்கும். குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள், விருந்து மற்றும் விசேஷங்கள் நடக்கும். திருமணமான அன்பர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்கி அவர்களுடன் கலந்து உறவாடுவதன் மூலம் உறவு வலுப்படும். நண்பர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள். இந்த மாதம் அதிக ஆடம்பர செலவுகளைச் செய்யாமல் செலவை கட்டுபடுத்துங்கள். உத்தியோகத்தில் பதவி உயர்வு

கிட்டும். அதன் மூலம் உங்கள் வருமானம் உயரும். வெளிநாட்டில் வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். இந்த மாதத்தில் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். இந்த மாதம் பெரிய அளவிலான ஆரோக்கிய பாதிப்புகள் இல்லாவிட்டாலும் சிறு சிறு உபாதைகள் வந்து போகும். மாணவர்கள் இந்த மாதம் கல்வியில் சிறந்த வெற்றி காண்பார்கள்.

சுப நாட்கள்:
13, 14, 18, 19, 21, 22, 23.
அசுப நாட்கள்:
1, 2, 9, 10, 11, 12, 15,




காதல் உறவில் உள்ளவர்கள் தன் துணை மூலமாக ஆதாயம் பெறுவார்கள். இன்பச்சுற்றுலா சென்றுவர உகந்த காலகட்டமாக உள்ளது. திருமண உறவில் உள்ளவர்களுக்கு தாம்பத்திய உறவில் நெருக்கம் அதிகரிக்கும். இசை மற்றும் கலை மீது ஆர்வம் அதிகரிக்கும்.
பணியிடத்தில் பதவி உயர்வு கிட்டும். உங்கள் தொழில் மற்றும் வாழ்க்கைத் துணை மூலம் வருமானத்தில் நல்ல ஆதாயம் காணுவீர்கள். வேலைப்பளு அதிகரித்து காணப்படும். தகவல் தொடர்பு மற்றும் அச்சுத் துறையில் பணிபுரிபவர்களுக்கு பணியில் நல்ல ஆதாயம் உண்டு. வெளிநாட்டு வேலையை எதிர் நோக்கி காத்திருந்தவர்களுக்கு வெளிநாட்டு உத்தியோகம் கை கூடிவரும். இந்த மாதம் வீட்டு உபயோக பொருட்களை வாங்குவீகள். சுயதொழில் புரிபவர்களுக்கு மத்திம வருமானத்தை எதிர்பார்க்கலாம். இந்த மாதம் புதிய தொழில் முதலீடுகளை தவிர்த்தல் நன்மை பயக்கும். வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். கூட்டுத் தொழிலில் இருப்பவர்கள் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். கணக்குகளில் பிரச்சனை ஏற்படலாம். மனச்சோர்வு மற்றும் தூக்கமின்மை பிரச்சனைக்கு தியானம் செய்யவும் வயதான பெண்களுக்கு மூட்டு சம்மந்தப்பட்ட பிரச்சனை ஏற்படும். மருத்துவ ஆலோசனை பெறுவது நன்மை பயக்கும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். தேர்வுகளில் வெற்றி பெற்று முதல் நிலையை பிடிக்கும் நிலை உருவாகும்.

சுப நாட்கள்:
15, 18, 19, 21, 22, 24, 25, 26.
அசுப நாட்கள்:
1, 2, 11, 12, 13, 14,




உங்கள் மனதில் அன்பு, காதல், பாசம் பொங்கிப் பெருகும் நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் உண்மையான அன்பு செலுத்துவீர்கள். இதனால் மனதில் மகிழ்ச்சி பொங்கும். உங்கள் வீட்டில் உள்ள மூத்தவர்களின் உணர்வுகளை புரிந்து நடந்து கொள்வதன் மூலம் நல்லுறவைப் பேண இயலும். உங்கள் வருமானத்தைப் பெருக்கும் புதிய வழிமுறைகளை நீங்கள் நாடுவீர்கள். இந்த மாத ஆரம்பத்தில் பதட்டமான பொருளாதார நிலை இருக்கும். ஆனால் இந்த மாதத்தின் இடைப் பகுதியில் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த இது ஏற்ற நேரமாக இருக்கும். இந்த மாதம் நீங்கள் புத்திசாலித்தனத்துடன் செயலாற்றுவீர்கள். நீங்கள் ஊடகங்களில் பணி புரிபவர் என்றால் இந்த மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டமான நேரம் என்று கூறலாம். நீங்கள் மற்றவர்களின் கருத்து மற்றும் ஆலோசனைகளைக் கேட்டு நடந்து கொள்வீர்கள். சுய தொழிலில் நல்ல லாங்களை அடைய நல்ல வாய்ப்புகள் ஏற்படும். இந்த மாதம் பொன்னான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள நீங்கள் தயாராக இருங்கள். தொழிலில் போட்டியாளர்களை நீங்கள் வெற்றி காண்பீர்கள். இந்த மாதம் உங்கள் ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பாதிப்புகள் இருக்காது. சிறிய அளவிலான உபாதைகள் இருந்தால் உடனடியாக மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது நல்லது. மாணவர்களுக்கு கவனம் தவற வாய்ப்பு உள்ளது என்பதால் கவனமாகப் படிக்க வேண்டும்.

சுப நாட்கள்:
5, 6, 7, 19, 21, 22,
அசுப நாட்கள்:
14, 15, 16, 17, 18.




இந்த மாதத்தின் பிற்பகுதியில் பண விஷயங்கள் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். அதன் பிறகு உங்கள் நிதிநிலை ஏற்றம் காணும் பொன்னான வாய்ப்பு கிட்டும். உங்கள் வாழ்க்கைத் துணைக்கு தேவையானதை வாங்கிக் கொடுத்து அவர்களை மகிழ்விப்பீர்கள். தன வருவாயில் ஏற்றம் உண்டாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். ஸ்திரமான நிதிநிலை இருக்கும். குடுமபத்தில் வசதிகள் மற்றும் ஆடம்பரம் பெருகும். உத்தியோகத்தை பொறுத்தவரை முன்னேற்றத்தில் மந்த நிலை இருக்கும். கடினமாக உழைத்தாலும் அதற்குரிய பலன் கிடைப்பது அரிதாக இருக்கும். பணியிடத்தில் பிறரின் ஒத்துழைப்பும் ஆதரவும் உங்களுக்கு கிட்டாது. நீங்கள் தலைமை ஏற்று பணிகளை நடத்திச் செல்ல இயலாத நிலையை சந்திப்பீர்கள். உங்கள் தொழிலை பெரிய அளவில் எடுத்துச் செல்ல தெளிவான முடிவுகளை எடுக்கும் வாய்ப்பு உள்ளது. உங்கள் நோய் எதிர்ப்புத் திறன் அதிகரிக்கும். உங்கள் உடல் வலிமை கூடும். தினமும் உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் தக்க வைத்துக் கொள்ளலாம். இந்த மாத ஆரம்பத்தில் மாணவர்கள் சில பிரச்சினைகளை சந்திப்பார்கள். ஆனால் படிப்படியாக முன்னேற்றம் கிட்டும். கவனமாக படித்தால் வெற்றி நிச்சயம்.

சுப நாட்கள்:
3, 5, 6, 7, 11, 21, 26, 28.
அசுப நாட்கள்:
17, 18, 19, 20, 24, 25,




காதல் உறவில் உள்ளவர்கள் தன் துனையின் மூலம் மகிழ்ச்சி காண்பார்கள். திருமண உறவில் உள்ளவர்களின் வாழ்வில் நல்லிணக்கம் கூடும். இது உங்கள் உறவினர்களுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும் மாதமாக இருக்கும். நிதிநிலையைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டம் நிறைந்த மாதமாக இருக்கும். பணம் தேவைப்படும் நண்பர்களுக்கு பணத்தைக் கடனாக கொடுத்தால் திரும்ப வருவது கடினம், கவனம் தேவை இந்தமாதம் பணியிடத்தில் உங்கள் படைப்பாற்றல் மற்றும் உங்கள் உற்சாக பணிக்கு உங்கள் மேலதிகாரிகள் மற்றும் சக பணியாளர்களிடம் இருந்து உரிய அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். உங்கள் செயல் திறன் பிறரால் பாராட்டப்படும். படைப்புத் துறை, இசைத் துறை மற்றும் சினிமாத் துறையில் உள்ளவர்கள் இந்த மாதம் வெற்றியைக் காண்பார்கள். இந்த மாதம் உங்கள் ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பிரச்சினைகள் ஏதும் இருக்காது. உங்கள் சூழ்நிலை உங்களுக்கு அனுகூலமாக இருக்கும் காரணத்தால் மனதில் அமைதியான நிலை இருக்கும். நீங்கள் மனதளவிலும் உடலளவிலும் ஆரோக்கியமாக இருப்பீர்கள். மாணவர்கள்,விடா முயற்சி மற்றும் அர்ப்பணிப்புடன் படித்தால் மட்டுமே வெற்றி இலக்கை அடையமுடியும்.

சுப நாட்கள்:
3, 5, 6, 22, 23, 26, 27, 28.
அசுப நாட்கள்:
19, 20, 21, 24, 25.




கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும். அன்னியோன்யம் அதிகரித்து காணப்படும். உங்கள் தந்தை வழி உறவினர்களிடம் சில கருத்து வேறுபாடுகள் ஏற்படும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை பயக்கும். உணவு தொடர்பான தொழில் நடத்துபவர்கள் சிறந்த தன ஆதாயம் காண்பார்கள். பங்கு மற்றும் தகவல் தொடர்பு தொழில் செய்பவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். சக

பணியாளர்களுடனான உறவுகள் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் நீங்கள் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். கூட்டுத்தொழிலில் சுமாரான லாபங்களை எதிர்பார்க்கலாம். வியாபாரம் செய்பவர்கள் நல்ல லாபம் காண முடியும். உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வந்து போகும். அஜீரண கோளாறு மற்றும் குடல் சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் வரலாம். தாய் மற்றும் தந்தையின் உடல் நலனில் அக்கறை தேவை. மாணவர்கள் அதிக முயற்சியுடனும் கவனமுடனும் படிக்க வேண்டும்.

சுப நாட்கள்:
3, 5, 6, 7, 24, 25, 26, 27, 28.
அசுப நாட்கள்:
1, 2, 8, 9, 10, 20, 21, 22, 23.

## குதிரை வாகனம்

குதிரை எனும் பிராணியை படைப்புக் கடவுளான பிரம்மனின் கச்யபர் மற்றும் தம்ரா என்பவர்களால் தோற்றுவிக்கப்பட்டதாக அக்னி புராணம் மூலம் அறிய முடிகிறது. குதிரை முகங்கொண்ட திருமாலை ஹயக்ரீவர் என்ற பெருமாளாக வழிபட்டு வருகிறோம்.

குதிரை வாகனம் சிவன் மற்றும் பெருமாள் குடிகொண்ட எல்லா ஆலயங்களிலும் உபயோகப்படுத்தப்படுகிறது. பெருமாள் கோயில்களில் விசேடமாக நடத்தப்படும் பரி என்னும் பாரிவேட்டை உற்சவத்தின்போது, இறைவன் குதிரை வாகனத்தில் பவனி வருவார்.. அவ்வாகன அமைப்பில் அந்த கம்பீர குதிரை வாகனம் தனது இரு முன்னங் கால்களையும் மேல் தூக்கி காட்சிதரும்.

மன்னர்கள் ஆண்ட காலத்தில் அவர்களுடைய குதிரைப் படையில் ராஜ நடை போட்ட குதிரை, தற்காலத்தில் தன் சுய மதிப்பை இழந்து, குதிரை ரேசுகளிலும், ஜட்கா வண்டியை இழுக்கும் சாதாரண விலங்காகிவிட்டது. ஒரே ஒரு ஆறுதல் இறை வாகனமாக ஆன்மீக வழிபாட்டில் இப்பொழுது அங்கம் வகிப்பதே!

